உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com


சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 09 திங்கட்கிழமை (23.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 178



03 அப்ரிடி நீக்கம்



16 எதிரியும் துரோகியும்



21 மறைந்து வரும் பனை ஓலை உற்பத்தி



24 மன்மோகன் அரசு மூன்றாவது ஆண்டில்

# முல்லைத்தீவில் தமிழ் மீனவரின் உரிமை பறிப்பு
# பெரும்பான்மை இனத்தவர் அங்கு ஆதிக்கம்

## வழக்குத் தொடர்வது குறித்து ஆலோசனை

கொழும்பு, மே 23

முல்லைத்தீவு மீனவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு பெரும்பான்மை இன மீனவர்களுக்கு வழங்கப்படுவது குறித்து அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும். அரசு உரிய நடவடிக்கை எடுக்காது அசண்டையீனமாக நடந்தால், வழக்குத் தொடரப்படும்.

- இவ்வாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முல்லைத்தீவு மக்களிடம் உறுதிபடத் தெரிவித்தனர். (32 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் நெருக்குதலாலேயே கூட்டமைப்புடன் பேசுகிறது அரசு

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 23

இந்திய அரசின் நெருக்குதல் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சு நடத்துகிறது. - என்று தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசுடனான கூட்டமைப்பின் பேச்சுகள் பயனுள்ளனவாக அமைவதற்கு இந்தியாவின் அழுத்தம் முக்கியமானதாக அமைந்துள்ளது. இது தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தச் சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அதிகாரப் பகிர்வு யோசனைத் திட்டம், 13 ஆம் (29 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி அமைதிச் சூழலை ஏற்படுத்தவேண்டும்

### அநுரகுமார எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 23

இலங்கையில் அமைதியான ஜனநாயக ரீதியான சூழல் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமானால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அவசரகாலச் சட்டத்தையும் நீக்கவேண்டும்

- இவ்வாறு ஜே.வி.பி தெரிவிக்கின்றது.

ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்று பத்தரமுல்ல பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஏராளமான தமிழ்க் கைதிகள் நீண்ட காலமாக சிறையில் வாடுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் மீது குற்றச்சாட்டுகள் இல்லை. எந்தக் காரணமும் இன்றி இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது விசாரணைகள் நடைபெறுவதில்லை. எனவே, அரசு இவர்களை உடனடியாக விடுதலை செய்ய (32 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நேற்றுப் பதற்றம்

யாழ்ப்பாணம், மே 23

இராணுவத்தினரின் அனுமதி பெறப்படவில்லை என்று கூறி வடமராட்சியில் நடைபெறவிருந்த விளையாட்டுப் போட்டி ஒன்றை இராணுவத்தினர் தடுக்க முனைந்தனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

வல்வெட்டித்துறை கொத்தியாலடியிலுள்ள நேதாஜி விளையாட்டுக்கழகத்தின் போட்டிகள் நேற்றைய தினம் நடைபெற்றுக்கொண்டிருந்தன. நிகழ்வின் ஆரம்பத்தில் கழகத்தின் கொடி மைதானத்தில் (29 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர் கைதிகள்!

கொழும்பு, மே 23

உண்ணாவிரதமிருந்த சிறைக் கைதிகள் பலர் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை வாபஸ் பெற்றுள்ளனர் என்று சிறைச்சாலைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கைதிகளுடன் சிறைச்சாலை அதிகாரிகள் நடத்திய கலந்துரையாடல்களைத் தொடர்ந்தே மேற்படி உண்ணாவிரதம் வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறின.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்த கைதிகளில் பெரும்பாலானோர் சனிக்கிழமை இரவு உணவு உண்ணத் தொடங்கினர் எனவும் ஆனால் 21 கைதிகள் தொடர்ந்தும் உண்ணாவிரதமிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பபட்டுள்ளது.

இதேவேளை, மஹர மற்றும் போகம்பரை சிறைச்சாலைகளில் உண்ணாவிரதமிருந்த 43 கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளனர் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் பலர் தமக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பை மாற்றக் கோரியும் சிறைச்சாலைகளில் மேலும் வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரியும் உண்ணாவிரத மிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாரை, யாரிடமிருந்து பாதுகாப்பதற்கு நாடு முழுவதும் புதிய படைமுகாம்கள்?

### கேள்வியெழுப்புகிறார் ஆனந்தசங்கரி



யாழ்ப்பாணம், மே 23

பாதுகாப்பைப் பலப்படுத்த நாடு முழுவதும் படை முகாம்களைப் புதிதாக அமைக்கும் திட்டம் வடக்கு-கிழக்கு மக்களை மேலும் துன்புறுத்துவதாகவே அமைந்துள்ளது. எனவே, இந்தத் திட்டத்தை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்.

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு நாடு முழுவதும் படை முகாம்களை அமைக்கப் பாதுகாப்புச் செயலர் உத்தரவு (32 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் பேரவை கோரினால் யுத்தக்குற்ற விசாரணை நடத்தலாம்

### ஐ.நா. செயலரின் பேச்சாளர் தெரிவிப்பு

ஜெனிவா, மே 23

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையால் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் யுத்தக் குற்றச் செயல்கள் பற்றி விசாரணை நடத்தலாம் என ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்கி குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அல்லது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஆகிய கிளை அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் யுத்தக் குற்றச் செயல்கள் பற்றி விசாரணை நடத்தலாம் என்று ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்கி சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறில்லாதபோது இலங்கை அரசு கோரிக்கை விடுத்தால் மட்டுமே இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் முதன்மை அதிகாரம் இலங்கை அரசிடம் காணப்படுகின்றது. குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் மற்றும் விசாரணை நடத்தும் அதிகாரம் உள்நாட்டு அரசுகளுக்கே வழங்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்சிலின் அமர்வுகள் ஆரம்பமாகவுள்ளன. அவ்வாறான நிலையில் இலங்கை தொடர்பான பல போர்க் குற்ற ஆதாரங்களைப் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மனித உரிமைக் கவுன்சிலுக்குச் சமர்ப்பித்துள்ளன.

அவ்வாறான நிலையில் மனித உரிமைக் கவுன்சில் கோரிக்கை விடுத்தாலும் இலங்கையின் (32 ஆம் பக்கம் பார்க்க)

## வெசாக் காலத்தில் 100 பேர் கைது

கொழும்பு, மே 23

வெசாக் காலத்தில் மதுவரித் திணைக்களம் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 21 பெண்கள் உட்பட 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்த குற்றச்சாட்டில் 18 பேரும், கசிப்பு விற்பனை செய்ததாக 50 பேரும் அனுமதியில்லாமல் மதுபானம் விற்றதாக 28 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், ஜாஎல, சீதுவ, நீர்கொழும்பு, கொழும்பு, தெஹிவளை, ரத்மலானை, ஹேமாகம, தெஹியேவிட்ட, ருவான்வெல்ல, அவிசாவளை, ராகம, களனி, பண்டாரகம, ஆனமடுவ மற்றும் மினுவாங்கொட (32 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
23 மே 2011 திங்கட் கிழமை

# முதலிடத்தைப் பிடித்தது பெங்களூர்

- டிலீப் -



கெயில் மீண்டும் அதிரடி. சொதப்பல் துடுப்பாட்டம் சென்னை. இலகுவாய் வெற்றி பெங்களூர் கைக்கு சென்றது.

ஐ.பி.எல் 69 ஆவது ஆட்டம் நடந்தது பெங்களூரில் நேற்று. அணிக்கு மீண்டும் திரும்பினார் அணித்தலைவர் வெற்றோரி. சுழற்றப்பட்டது நாணயம். வெற்றி கிடைத்தது பெங்களூருக்கு. பணித்தனர் சென்னையை துடுப்பெடுத்தாட.

மைக் ஹஸி - முரளி விஜய் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள். சகீரின் வேகத்துடன் பந்து வீச்சு ஆரம்பம். அதிரடி சென்னையின் ஆரம்ப ஆட்டத்தில் இல்லை. மூன்றாவது ஓவரின் முதலாவது பந்தில் வீழ்ந்தது ஹஸி விக்கெட். ஏமாற்றமான ஆரம்பம். ரெய்னா அடுத்து நுழைவு. வந்த வேகத்தில் அடிக்கப்பட்டது பவுண்டரி. நம்பிக்கை கொடுத்தது ஜோடி. அரவின்ட் வீசினார் நான்காவது ஓவர். விஜய் பவுண்டரி பெற்றுக் கொடுப்பு. அடுத்த பந்து வீச்சில் டீ வில்லியர்ஸிடம் பிடி கொடுப்பு. 16 ஓட்டங்களில் வீழ்ந்தது இரண்டு விக்கெட்டுக்கள்.

தொடர்ந்தது சென்னையின் ஏமாற்றும் படலம். ரெய்னா 4 ஓட்டங்கள், பத்திரிநாத் ஓட்டமெதுவுமில்லை. 22 ஓட்டங்களுக்கு இழந்தது 4 விக் கெட்டுக்கள்.

சரிவால் சங்கடப்பட்டது சென்னை. நம்பியிருந்தனர் டோனியை. சகா - டோனி ஆட்டம் நம்பிக்கை. ஆட்டத்தின் முதலாவது சிக்ஸர் அடிக்கப்பட்டது இவர்கள் இணைப்பில். கெயிலின் பந்து வீச்சில் அதிரடி ஓட்டக் குவிப்பு.

ஐந்தாவது விக்கெட் இணைப்புக்கு பகிரப்பட்டது 42 ஓட்டங்கள். ஹோக்லி பிரித்தார் இணைப்பை. சகாவின் ஆட்டம் 30 பந்துகளில் 22 ஓட்டங்களுடன் முடிந்தது. ஒரு சிக்ஸர், பவுண்டரி அவரது கணக்கில் அடக்கம். 32 பந்துகளில் டோனி எட்டினார் அரைச்சதத்தை. தொடர்ந்தது அவரது அதிரடி. நிலைக்கவில்லை மறுமுனையில் எவரும். சரிந்தது தொடர்ச்சியாய் விக்கெட்.

இருபது ஓவர்களில் அடித்தனர் 128 ஓட்டங்கள். இழந்தனர் 8 விக்கெட்டுக்கள். டோனி இறுதிவரை தனித்து போராட்டம். 40 பந்துகள் சந்திப்பு ஆறு சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடிப்பு. அணிக்காய் 70 ஓட்டங்கள் பெற்றுக் கொடுப்பு. பந்து வீச்சில் சகீர், அரவின்ட், வெற்றோரி சரித்தனர் தலா இரண்டு விக்கெட்டுக்கள்.

இலகுவான இலக்கு பெங்களூருக்கு. கெயிலின் அதிரடியை நம்பி நுழைந்தது பெங்களூர். அதிர்ச்சி வைத்தியம் சென்னை முதலாவது ஓவரிலேயே கொடுத்தது. அஸ்வினின் மூன்றாவது பந்தில் வீழ்ந்தது டீ வில்லியர்ஸ் விக்கெட். ஹோக்லி - கெயில் இணைந்தனர் இரண்டாவது விக்கெட்டுக்காக. மெல்லத் தொடங்கியது கெயிலின் அதிரடி. வெற்றியை நெருங்கத் தொடங்கியது பெங்களூர் ஆட்டம்.

44 பந்துகளில் பெங்களூர் பூர்த்தி செய்தது தனது அரைச்சதத்தை. 80 ஓட்டங்களைப் பெற்றது இரண்டாவது விக்கெட் இணைப்பு. மோர்கலின் பந்து வீச்சில் முடிவடைந்தது ஹோக்லி ஆட்டம். 29 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் பெற்றார் 31 ஓட்டங்கள். 34 பந்துகளில் கெயில் அடித்தார் அரைச்சதம். மறு முனையில் திவாரி நுழைவு. நிதான ஆட்டம் அவர் தொடர்கை. கெயிலின் அதிரடி 18 ஆவது ஓவரில் பெங்களூருக்கு பெற்றுக் கொடுத்தது வெற்றி. 8 விக்கெட்டுக்களால் பெங்களூர் பெற்றது வெற்றி. ஆட்டநாயகனாய் அதிரடி மன்னன் கெயில் தெரிவு. ✱

### அதிகூடிய ஓட்டம்

- கெயில் – பெங்களூர் (09 ஆட்டங்கள் 511 ஓட்டங்கள்)
- மார்ஷ் – பஞ்சாப் (14 ஆட்டங்கள் 504 ஓட்டங்கள்)
- சச்சின் – மும்பை (14 ஆட்டங்கள் 477 ஓட்டங்கள்)

### அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (14 ஆட்டங்கள் 27 விக்கெட்டுக்கள்)
- மிஷ்ரா – டெக்கான் (14 ஆட்டங்கள் 19 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல்– மும்பை (13ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE



### DLF INDIAN PREMIER LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 14 | 09 | 04 | 0 | 1 | + 0.326 | 18 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 14 | 09 | 05 | 0 | 0 | + 0.443 | 18 |
| மும்பை இந்தியன்ஸ் | 14 | 09 | 05 | 0 | 0 | + 0.040 | 18 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 14 | 08 | 06 | 0 | 0 | + 0.433 | 16 |

# கடைசிப் பந்தில் வென்றது மும்பை

- அருண்மொழி -

ஐ.பி.எல் தொடரின் இறுதி லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. இந்த ஆட்டம் கொல்கத்தாவில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அதன்படி கொல்கத்தா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கலிஸ் - கோஸ்வாமி களமிறங்கினர். கொல்கத்தா அணி 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கோசுவாமி ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அணித்தலைவர் கம்பீர் கோஸ்வாமியின் ஆட்டமிழப்பை தொடர்ந்து உள்நுழைந்தார். கம்பீர் களத்தில் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. 7 பந்து வீச்சுக்களில் ஒரு சிக்ஸர் அடங்கலாக 8 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

மனோஜ் திவாரி - கலிஸ் இருவரும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்தனர். 22 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிக் கொண்டிருந்த அணியை மெல்லத் தூக்கி நிறுத்தினர். மூன்றாவது விக்கெட்டுக்காக 45 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் திவாரி ரன் அவுட்டில் ஆட்டமிழந்து வெளியேறினார். 22 பந்து வீச்சுக்களில் ஒரு சிக்ஸர், 5 பவுண்டரி அடங்கலாக 35 ஓட்டங்களைப் அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

யூசுப் பதான் அதிரடியாக ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். கொல்கத்தா 72 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தது. மறு முனையில் கலிஸ் நீண்ட இடைவெளியின் பின்னர் 40 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். 57 ஓட்டங்கள் நான்காவது விக்கெட் இணைப்பாட்டமாக யூசுப் - கலிஸினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

27 பந்துகளில் ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடங்கலாக 36 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யூசுப் பதான் பிராங்லின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து 42 பந்துகளில் மூன்று சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 59 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கலிஸ் ஆட்டமிழந்தார். பின்வரிசையில் ரென் டொஸ்சேர் 12 பந்துகளில் 18 ஓட்டங்களையும், பகிர்ரா 6 பந்துகளில் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இருபது ஓவர்களில் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் அஹமட், பிராங்லின் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். [illegible] நான்கு ஓவர் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட்டுக்கள் எதனையும் கைப்பற்றவில்லை.

176 ஓட்டங்களைப் வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கியது மும்பை. சச்சின் - சுமன் இருவரும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். முதலாவது ஓவரிலேயே 13 ஓட்டங்களைப் பெற்றது மும்பை அணி. இரண்டாவது ஓவரின் முதலாவது பந்து வீச்சில் 4 ஓட்டங்களுடன் சுமன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்த வீரராக ஹர்பஜன் சிங்கை களமிறக்கி அதிர்சி கொடுத்தது மும்பை.



ஹர்பஜன் சிங்கும் ஆரம்பநிலை துடுப்பாட்ட வீர ராக களமிறங்கியதற்கு ஏற்ப சிறப்பாக துடுப்பெடுத் தாடினார். சச்சின் மற்றும் ஹர்பஜன் சிங் இருவரும் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக 57 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ஹர்பஜன் 29 பந்துக ளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். ஹர்பஜனின் வெளியேற்றத்தை தொடர்ந்து நுழைந்த ரோகித் சர்மா 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த டெண்டுல்கர் பகிர்ராவின் பந்து வீச்சில் 27 பந்து களில் 6 பவுண்டரிகளுடன் 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

ஐந்தாவது விக்கெட்டுக்காக பொலாட் - பிராங்கிளின் இணைந்தனர். பிசுபிசுத்தது பொலாட்டின் சரவெடி . ஒற்றை ஓட்டங்களோடு மட்டும் ஒதுங்கினார். பிராங்கிளின் மட் டுமே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 15 பந்துகள் இருக்கையில் பொலாட் 18 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். தொடர்ந்து அம்பதி ராயுடு களம் புகுந்தார். ஆட்டத்தின் போக்கு மும்பையின் பக்கம் மெல்லத் திரும்பியது. வந்த வேகத்திலேயே பாலாஜியின் பந்தைச் சிக்ஸர் ஆக்கினார் ராயுடு. 18 ஆவது ஓவரில் 14 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன. 19ஆவது ஓவரை வீசினார் லீ. 9 ஓட்டங்கள் மாத்திரம் பெறப்பட்டன. இறுதி ஓவரில் 21 ஓட்டங்கள் மும்பைக்குத் தேவை. பந்து வீசியவர் பாலாஜி. அதிர்ஷ்டக் காற்று மும்பையின் பக்கம் வீசியது. பிராங்ளின் தொட்ட பந்தெல்லாம் பவுண்டரிகளாகக் பறந்தன. முதல் நான்கு பந்துகளிலும் நான்கு பவுண்டரிகள். இறுதி இரண்டு பந்துகளில் ஐந்து ஓட்டங்கள் எடுக்க வேண் டும். ஐந்தாவது பந்தில் பிராங்ளின் ஒரு ஓட்டத்தை மாத்திரமே எட்ட முடிந்தது. பரபரப்பு மைதானத்துக்கு வெளியேயும் தொற்றிக்கொண்டது. எங்கும் அமைதி. கடைசிப் பந்து ராயுடுவை [illegible] ராயுடுவின் துடுப்பின் சுழலில் எல்லையைத் [illegible] வெற்றி மும்பையின் காலடியில் வீழ, ஆட்ட நாயகன் விருது 45 ஓட்டங்களைக் குவித்த பிராங்ளின் கைகளில் தவழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிகளின் எண்ணிக்கை குறைக்கப்படும்

பிரிமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் அணிகளின் எண்ணிக்கையை அடுத்த வருடத்திலிருந்து குறைப்பதற்கும் இந்த விடயத்தில் ஐ.பி.எல். முறைமையை பின்பற்ற விரும்புவதாகவும் இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கால்பந்தாட்ட விளையாட்டின் முன்னேற்றத்திற்காக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக இலங்கை கால் பந்தாட்டச் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுத் தலைவர் மணிலால் பெர்னாண்டோ செய்தியாளர் மாநா டொன்றில் இதைத் தெரி வித்துள்ளார்.

பொதுவாக பிரிமியர் லீக் போட்டிகளில் பங்குபற்றும் கழகங் களிலிருந்து தேசிய அணிக்கு வீரர்கள் தெரிவு செய்யப்படுவர். ஆனால் இப்போது படைகளின் கழகங்களும் ஏனைய கழகங்களும் சிறப்பாக இயங்கவில்லை. அதனால் சிறந்த வீரர்களை தெரிவு செய்வது கடினமாகவுள்ளது. தற் போதைய நிலையில் நிதிப்பிரச்சினைகள் காரணமாகவும் முறையான கட்டமைப்பு இல்லாததால் கழகங்கள் இயங்குவதற்கு தடுமாறுகின்றன' என்று அவர்கூறினார்.

கழக அணிகளை நாம் பலப்படுத்துவது அவ சியம். ஏனெனில் அது இல்லாவிட்டால் கால்பந் தாட்டத்தின் தரம் குறைந்துவிடும். எதிர்காலத் தில் சிறந்த குறிப்பிட்ட எண்ணிக்கையான அணிகள் மாத்திரமே பிரிமியர் லீக் கால்பந் தாட்டப் போட்டிகளுக்கு சேர்க்கப்படும் என்று மணிலால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த விடயத்தில் ஐ.பி.எல். (இந்திய பிரிமியர் லீக்) முறைமையை பின்பற்ற விரும்புவதாகவும் அவர்கூறினார். இதன்படி கொழும்பிலிருந்து ஒரு அணி மாத்திரமே போட்டிகளில் பங்குபற்றும்.

இலங்கை அணியின் சர்வதேச போட்டிகள் குறித்து அவரிடம் வினவியபோது, சிறந்த மைதா னமின்மை காரணமாக வெளிநாட்டு அணிகளை இலங்கைக்கு அழைத்துவரும்போது பெரும் பிரச் சினையை எதிர்கொள்வதாக மணிலால் பெர் னாண்டோ தெரிவித்தார்.

'சர்வதேச போட்டிகளை நடத்துவதற்கு சுகத தாஸ அரங்கு மாத்திரமே உள்ளது. ஆனால் அது இலங்கைக்கு வரும் அணிகள் எதிர்பார்க்கும் தரத்தில் இல்லை' என்று அவர் கூறினார்.

(15)

# அப்ரிடியின் நீக்கம்;
## அணியின் ஒற்றுமையைக் குலைக்கும்




அணித்தலைவர் பதவியில் இருந்து அப் ரிடியை நீக்கியுள்ள கிரிக்கெட் வாரியத் தலைவர் இஜாஸ் பட்டின் முடிவு வீரர்களிடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்தும் என்று முன்னாள் வீரர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அணித்தலைவரை மாற்றியிருக்கும் இந்த முடிவால் வீரர்கள் தனித்தனி குழுக்களாக செயல்பட ஆரம்பித்துவிடுவார்கள். உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் அணியை அரையிறுதி வரை சிறப்பாக வழி நடத்திச் சென்றவர் அப்ரிடி. அவரை நீக்கியிருப் பதால் எந்த பலனும் கிடைக்காது. பட் அவரது செல்வாக்கைப் பயன்படுத்தி அப்ரிடியை அணித்தலைவர் பதவியி லிருந்து நீக்கியுள்ளார். இவ்வாறு அடிக்கடி அணித்தலைவர்களை மாற்றுவது அணி வீரர்களுக்கு இடையே ஒற்றுமையின்மை யையே ஏற்படுத்தும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய முன்னாள் தலைவர் தாஹிர் ஜியா தெரிவித்தார்.

முன்னாள் தேர்வுக்குழு தலைவர் இக்பால் காஸிம் கூறுகையில், அடிக்கடி அணித்தலை வரை மாற்றுவதால் பாகிஸ்தான் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் போகும். கடந்த 2008 அக்டோபர் முதல் இப்போது வரையிலான காலத்தில் 11 முறை அணித் தலைவர்கள் மாற்றப்பட்டுள்ளனர் என்றார். முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் அப்துல் காதிர் கூறுகையில், ஊடகங்களிடம் பேசும்போது அப்ரிடி கவனமாக இருக்க வேண்டும். ஆனா லும் அணித் தலைவர் பதவியை பறித்திருப்பது சரியான முடிவு அல்ல. மிஸ்பா தலைமையின் கீழ் அப்ரிடியை விளையாட வைத் திருப்பது மோசமான முடிவு என்றார்.

முன்னாள் தேர்வுக்குழு தலைவர் ஜலாலுதீன் கூறு கையில், அப்ரிடி எந்த கிரிமி னல் குற்றத்தையும் செய்து விடவில்லை. ஒரு அணித் தலைவராக அவர் எதிர் கொள் ளும் பிரச்னைகளை பற்றி பேசியதற்காக அவரை நீக்கி யது நியாயமற்றது என்றார்.

பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் வாசிம் அக்ரம் கூறியதாவது: பயிற்சியாளர் வக்கார் யூனுஸுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதாக அப்ரிடி நீக்கப்பட்டுள்ளார். பயிற்சி யாளருக்கும், அணித் தலைவருக் கும் இடையில் கருத்து வேறு பாடு ஏற்படுவது என்பது பாகிஸ் தான் கிரிக் கெட்டில் புதிதல்ல. உலகக் கிண்ணத்துக்குப் பிறகு பாகிஸ்தானின் கதாநாய கனாக அப்ரிடி உயர்ந்துள் ளார். இந்த நிலையில் அப்ரிடியை மாற்றியிருப் பது தவறான முடிவு என்று அவர் கூறி யுள்ளார்.

(15)

## நீதிமன்றுக்கு வராத பட்



கிரிக்கெட் சூதாட்ட புகார் தொடர்பாக லண்டன் நீதி மன்றத்தில் நடைபெறும் விசாரணையில் சல்மான்பட் ஆஜராகவில்லை. லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த இங்கிலாந்துக்கு எதி ரான டெஸ்ட் ஆட்டத்தில் அணித்தலைவர் சல்மான் பட் ஆலோசனையுடன் முகமது ஆமிர், முகமது ஆசிப் ஆகியோர் முறை யற்ற பந்துகளை வீசி சூதாட் டத்தில் ஈடுபட்டதாக புகார் கிளம்பியது. இதைத் தொடர்ந்து அவரிடம் ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸார் விசா ரணை நடத்தினார்கள்.

சூதாட்ட புகார் தொடர்பாக சல்மான் பட், ஆமீர், ஆசிப் ஆகிய 3 பேருக்கும் சர்வ தேச போட்டிகளில் விளையா டத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையை எதிர்த்து வீரர்கள் சுவிற்சலாந் தில் உள்ள விளை யாட்டு தீர்ப் பாயத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். லோர்ட்ஸ் சூதாட்ட புகார் குறித்து லண்டன் நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற விசாரணை யில் முகமது ஆமிர், முகமது ஆசிப் ஆகியோர் நேரில் ஆஜரா கினர். ஆனால் சல்மான்பட் ஆஜராக வில்லை. விசா பிரச் சினை காரணமாக அவர் ஆஜராக முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வீரர்கள் சூதாட்டத்தில் ஈடு பட்டது நிரூபிக்கப்பட்டால் அதிக பட்சமாக 7 ஆண்டு கள் வரை தண்டனை அளிக்கப்படலாமென்று தெரிகின்றது.

(15)

## ஜப்பான் சம்பியனானது



5 நாடுகளுக்கிடையிலான எச்.எஸ்.பி.சி. றக்பி சம்பியன்சிப் சுற்றுப் போட்டியில் ஜப்பான் அணி நான்காவது தடவையாக சம்பியனாகியுள்ளது. கொழும்பில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணியை தோற்கடித்ததன் மூலம் ஜப்பான் அணி தொடர்ச்சியாக 4 ஆவது தடவையாக இந்தத் தொடரில் சம்பியனாகியுள்ளது.

கொழும்பு லோங்கடன் பிளேஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில்முதல் 20 நிமிடங்கள் வரை இலங்கை அணி 7-5 புள்ளிகள் விகிதத்தில் முன்னிலையில் இருந்தது.

எனினும் இடைவேளைக்கு ஆட்டம் நிறுத்தப்பட்டபோது ஜப்பானிய அணி 31-7 விகிதத்திற்கு முன்னேறியிருந்தது. இறுதியில் 90-13 புள்ளிகள் விகிதத்தில் ஜப்பான் அணி வெற்றி பெற்றது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச ரீதியாக கலை, இலக்கிய அரங்கப் பயிற்சிப் பட்டறைகள்

யாழ்ப்பாணம், மே 23

வடமாகாணத்தில் உள்ள பிரதேசங்கள் தோறும் கலை இலக்கியத்துக்கு அரங்கப் பயிற்சிப் பட்டறைகளை அமைக்க வடமாகாண மக்கள் கலை இலக்கிய அரங்கம் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த அரங்கத்தின் தலைவர் இரா. செல்வவடிவேல் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் செயற்றிட்டத்தில் அதிகமாக இளைய கலைஞர்களே உள்வாங்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் கலை, பண்பாடுகளை பேணிப்பாதுகாக்கவும் கலைஞர்களின் வாழ்வாதாரங்களை உணர்த்தும் நோக்கிலும் இந்த அரங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மூத்த கலைஞர்களின் ஊக்குவிப்புடனும் கலாசாரப் பேரவை மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரின் ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கும் இந்த அரங்கத்தின் ஊடாகப் பல்வேறு பிரதேசங்களிலுள்ள மறைமுகமான கலைஞர்கள் இனங்காணப்படவுள்ளனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் போன்ற பிரதேசங்களில் இருந்து அதிகமான கலைஞர்கள் இந்த அரங்கத்துக்காக எதிர்பார்க்கப்படுகின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-313)

## விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

வரணி, மே 23

இலங்கை செஞ்சிலுவைச் சங்க அனர்த்த முகாமைப் பிரிவால் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் சுவரொட்டிகளில் சமயங்களில் மக்கள் பின்பற்ற வேண்டிய முறைகள், மண்சரிவு, வரட்சி, வெள்ளப் பெருக்கு, சுனாமி போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்கள், அதன் பின்விளைவுகள் தொடர்பான தகவல்கள் படங்கள் வாயிலாக மக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-313-122)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,மே 23

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2395 ஆம் இலக்க கடந்த வெள்ளிக் கிழமை சீட்டிழுப்பில் "K" என்ற ஆங்கில எழுத்தும் 1/8/6/8/4/2 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

1/8/6/8/4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/6/8/4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/8/4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 129 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,286 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,811 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

2 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,26,152 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

இடமிருந்து வலமான அமைப்பில் 1/8/6/8/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/8/6/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 119 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

1/8/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,289 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

1/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,595 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"K" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 50,560 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)

## சிறந்த தானம்...



சேவை நோக்கு: புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொ. செல்வரத்தினம் ஞாபகார்த்தமாகவும் கடந்த நான்காம் திகதி கலைமதி மக்கள் மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. இதில் 50 குருதிக் கொடையாளிகள் இரத்ததானம் செய்கின்றனர். (ம-313)

**வீடு வாடகைக்குண்டு**

நாவலர் வீதிக்கு அருகில் உள்ள காணியில் மேலும் கீழுமாக ஆறு அறைகள், நாலு மலசல அறைகள், இரண்டு சமையல் அறைகள், இரண்டு ஹோல் மற்றும் இதர வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0718561311

## தென்மராட்சியில் வீடொன்றில் இரண்டு தடவைகள் திருட்டு

யாழ்ப்பாணம், மே.23

தென்மராட்சி, மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் 10 நாள்களுக்குள் இரண்டு தடவைகள் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்து வந்து மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் வாடகைக்குக் குடியிருக்கும் ஆசிரியை ஒருவரின் வீட்டி லேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி ஆள்கள் இல்லாத நேரம் இந்த வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் சுமார் 3 லட்சத்துக்கு மேற்பட்ட தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை கடந்த 19 ஆம் திகதி வீட்டுக்காரர் அயலவர்களின் மரண வீட்டுக்குச் சென்றிருந்தவேளை குறித்த வீட்டினுள் புகுந்த திருடர்கள் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சிறு தொகைபணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

## அதிகமாக கள் வைத்திருந்தவருக்கு அபராதம்

அதிகமாக கள்ளை தன்வசம் வைத்திருந்த நபரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்தனர்.

துன்னாலைப் பகுதியில் கள்ளை அளவுக்கதிகமாக வைத்திருந்தபோதே இவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பருத்தித்துறைப் பதில் நீதிவான் முன்னிலையில் பொலிஸார் அவரை ஆஜர் செய்தபோது சம்பந்தப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து அவருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-319)

**SINGER Service Plus**

எமது வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதற்காக நாங்கள் கோண்டாவில் கிழக்கு பலாலி வீதி என்ற முகவரிக்கு வருகின்றோம்.

**அனைத்து திருத்தங்கள் சேவைகளுக்காக:-**

* குளிர்சாதனப் பெட்டிகள் (Refrigerators), சலவை இயந்திரங்கள் (Washing Machines), காற்றாடிகள் (Fans)
* அனைத்து வகையான தொலைக்காட்சிப் பெட்டிகள் (LCD, LED, CRT Televisions)
* இலத்திரனியல் (Electrical), மின்னியல் (Electronic), வீட்டு உபகரணங்கள் (Kitchen Appliances)
* கைனறிக் (Kinetic) மோட்டார் சைக்கிள்கள்
* குளிரூட்டிகள் (Air Conditioners) மற்றும்

சிங்கரின் அனைத்து பொருட்களுக்குமான அசல் உதிரிப்பாகங்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ள எமது சேவை நிலையத்திற்கு வருகை தாருங்கள்.




எமது முகவரி:-
பிராந்திய சேவை நிலையம்,
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தொலைபேசி 0212224577
Email – scjaffna@singersl.com

(49)

## மரண அறிவித்தல்

### கனகசபை அருணாசலம்



ஒட்டுவெளி, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை அருணாசலம் நேற்று (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருணாசலம் மகேஸ்வரியின் கணவரும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சரவணமுத்து, கனகம்மா (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற பரமேஸ்வரி (இளைப் பாறிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்) மற்றும் திருவாதவூரர் (இளைப்பாறிய காசாளர், தெ.ப.நோ.கூ.ச), மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீ அகிலேஸ்வரி, அகிலதாஸ் (அதிபர்,கொக்குவில் இந்துக் கல்லூரி), மா.சாந்திலா, ப.கமலேஸ்வரி (இந்தியா), கமலதாஸ்(சுவிஸ்) கனகசபை (துரை - இந்தியா), புஸ்பதாஸ், ஈஸ்வரி ஆகியோரின் தந்தையும், ஸ்ரீ பாலசுப்பிரமணியம், நளினி (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம்), மாப்பாணபிள்ளை (டோகா), பன்னீர்ச்செல்வம் (பிரான்ஸ்), குமுதினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், பாலதர்சினி (பிரான்ஸ்), பிரசாத் (பிரான்ஸ்),டிசாந், புருசோத்மன் (மொறட்டுவ பல்கலைக் கழகம்), விமோசன், சங்கீதன், கௌதமி, சாரங்கன், சாருஜன்,சாஜனா, சாஜித் (இந்தியா), லக்ஷன், லதுஷா (சுவிஸ்),விதுரா ஆகியோரின் அன்புப் பேரனும் கர்ஷனா, உஜானா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.05.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
அ.அகிலதாஸ் (மகன்)
(அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி)

(4437)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அனைத்துலக மயப்படும் தமிழர் பிரச்சினை

இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றைக் காண்பதற்காக, இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மூத்த இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் இப்போதையத் தலைவர்களும் மூத்த அமைச்சர்களுமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டியூ குணசேகரா ஆகியோர் இந்தத் தகவலைக் கூட்டாக வெளியிட்டுள்ளனர். இருவரும் சேர்ந்து கூட்டாக நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த அறிவிப்பு வந்திருக்கிறது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தியத் தலைவர்களுடனும் உயர் அதிகாரிகளுடனும் கடந்தவாரம் பேச்சு நடத்தித் திரும்பிய பின்னர், இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் இருவர் ஊடாகவும் அரசு அந்தத் தகவலை மேலெழுந்தவாரியாக வெளிப்படுத்தி உள்ளது. அதனால் அங்கு தெரிவிக்கப்பட்ட தகவல்கள் அரசின் நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பவை என்று கொள்ள முடியும்.

மூன்று வருடங்களாக, நூறுக்கும் மேற்பட்ட தடவைகள் கூடிக் கலைந்த அனைத்துக் கட்சி மாநாட்டின் தலைவராகச் செயற்பட்டவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண. குறிப்பிட்ட மாநாட்டின் மூலமாக இனப்பிரச்சினைக்குப் பரிகாரமாக இருபத்தொரு விடயங்களுக்கு அரசியல் கட்சிகள் இணக்கம் கண்டதாக விவரித்திருக்கின்றார்.

இலங்கை அரசு மீதான போர்க் குற்றச்சாட்டு என்ற இக்கட்டான விவகாரத்தை அமுக்கி விட வேண்டுமெனில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் தீர்வை முன்வைத்துத் தமிழர் தரப்புடன் விரைந்து இணக்கம் காணவேண்டும் என்று இந்தியத் தரப்புக் கொடுத்த அழுத்தத்தின் வெளிப்பாடே இப்போதைய அறிவிப்புகள்.

1987இல் கைச்சாத்திடப்பட்ட ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் பெறுபேறாக உருவாகிய அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துக்கும் மேலானதாக தமிழர்களுக்குரிய தீர்வு அமைய வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளுக்குள்ளே ஒவ்வாமையை ஏற்படுத்தியிருக்கும் என்று கருதலாம்.

அதனால், இடதுசாரி அமைச்சர்களைப் பேச வைத்து, பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது சாத்தியமாகாது என்று அரசு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளது. அது மட்டுமன்றித் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசு அக்கறையாகவும் விசுவாசமாகவும் உழைக்கின்றது என்று சர்வதேசத்துக்கு வெளிக்காட்ட விரும்பி அதனை இலக்காகக் கொண்டு இவர்கள் இருவரையும் பேச வைத்திருக்கின்றது.

அனைத்துக் கட்சி மாநாட்டில் அதிகாரப் பகிர்வு உட்பட இருபத்தொரு அரசியல் விடயங்கள் குறித்து இனங்காணப்பட்டதாக ''இரகசியம்'' பேசுகின்றார் அமைச்சர் திஸ்ஸ விதாரண.

தமிழ் மக்களுக்குச் சரியான அரசியல் தீர்வு - முழுமையான அரசியல் தீர்வு - உரிய அந்தஸ்து - வழங்கப்படவில்லை என்று வெளிநாடுகள் குறை கூறுவதை விமர்சனம் செய்வதைத் தறிக்கும் ஒரு பொறியாக அரசு பயன்படுத்த வேண்டும் என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண ஆலோசனை வழங்குகிறார்.

இதனைக் கூட்டிக் கழித்துப் பெருக்கிப் பார்த்தால், போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து மீள்வதற்கான ஓர் உபாயமாகத் தமிழர் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வை உருவாக்க, காண்பதற்கு அரசு தயாராகவே உள்ளது என்று இலங்கை மீது அரைக்கண் பார்வை செலுத்தும் வெளிநாடுகளை மென்மைப் போக்குக்குத் திருப்புவதற்கான ஒரு வகைத் தந்திரம் என்றும் கூறலாம்.

திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்துக் கட்சி மாநாடு தயாரித்த இருபத்தொரு அம்சத் தீர்வில் மாகாண சபைகளுக்கான காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பன அரைகுறையான அளவில் தரப்பட்டால் -

தமது பிரதேசத்தைத் தாமே நிர்வகிக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் நியாயமான, அபிலாசைகளை அது நிறைவு செய்யாது. அரசு முன்வைக்கும் எந்த வகையான அரசியல் தீர்வும் மறுவுள்ளதாகவே (Fake) அமையும்.

மேலும் பொலிஸ் அதிகாரம் குறித்த நிலைப்பாட்டில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனியான பொலிஸ் ஆணைக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற யோசனை அனைத்துக் கட்சி மாநாட்டினால் நிராகரிக்கப்பட்டதை அதன் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருக்கின்றார். பொலிஸ் சேவைக்கான ஆள்சேர்ப்பினை மாகாண அடிப்படையில் நடத்தினால் போதுமானது என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால், அது அடுத்த சந்ததியினருக்குச் செய்யும் துரோகம். பொருளாதாரப் பிரச்சினைகளை மட்டும் தீர்த்துப் பயனில்லை. சமுதாயப் பிரச்சினைக்களையும் தீர்க்க வேண்டும் - என்று அமைச்சர் டியூ குணசேகரா கூறியிருப்பதை அவரது சகாக்களும் மனத்தில் இருத்திச் செயற்பட்டால், தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை வகுப்பது இயலாத காரியமல்ல. அதனைச் சாதகமாக்க அரசு முழு அளவில் மனம் வைக்க வேண்டும். அது சாத்தியமாகாவிடில் இன ஒற்றுமை, அதனூடான சமாதானம், சகவாழ்வு என்பன எட்டாக் கனியாகிவிடும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இனியும் இழுத்தடிக்க முடியாத ஒரு சூழல், - இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் என்றில்லாமல் அநேகமாக அகில உலகமும் இலங்கையின் முதன்மைப் பிரச்சினையாகக் கருத்தில் எடுக்கத் தொடங்கியுள்ளதால் -

இலங்கை அரசு மீதான போர்க்குற்றச்சாட்டுக்களோடு தமிழர் பிரச்சினையும் - இனப்பிரச்சினையும் - சர்வதேச மயப்பட்டு விட்டதால்-

தமிழர்களின் உரிமைகளை விரைவில் வழங்க வேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் உருவாகும் என்பதனை அரசு இனியாவது உணரக்கூடாதா?

# இழுத்தடிக்காமல் உண்மையான அதிகாரப்பகிர்வை வழங்கவேண்டும் என்று இந்தியா வற்புறுத்துகிறது

நேற்று 22-05-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.

அரசியல் ஆர்வம் கொண்ட சில பௌத்த பிக்குகளால் வழிநடத்தப்படும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சாதாரண உறுப்பினர்கள் அண்மையில் தங்கள் தலைகளை மொட்டையடித்துக்கொண்டு பல நாள்கள் 'சில்' (சமயச்சடங்குகள்) அனுஷ்டித்தார்கள். புத்தபெருமான் சுட்டிக்காட்டியிருந்ததுபோல் மனிதர்களின் பலவீனங்களில் ஒன்றான நான் என்ற அகங்காரம் ஒதுக்கித்தள்ளப்படுவதற்கு மிகவும் கடினமான ஒரு குணமாகும். மொட்டையடித்தவர்களை படப்பிடிப்பாளர்கள் படம் எடுத்தார்கள் அவை ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

அதேபோலத்தான் ஜனாதிபதி ராஜபக்ஷவும் 'சில்' எடுத்துக்கொண்டார். ஆனால் வெசாக் தினத்தில் மாத்திரம் கமராக்கள் பளிச்சிட்டன - அவருக்கு கண்கள் கூசின அப்படங்கள் அரச தொலைக்காட்சிகள் மூலம் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டன. அவரது சமய அனுஷ்டானமும் மக்களுக்கு அரச ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன.அலரி மாளிகையில் ஜனாதிபதி இவ்வாறு சமய அனுஷ்டானத்தில் ஈடுபட்டிருந்தபோது வண - மடகொட அபேதிஸ்ஸ தேரர் அங்கு தர்ம உபதேசம் செய்தார். ஒரு பௌத்த பிக்குவால் தான் சகல அதிகாரங்களும் பெற்றவரான ஜனாதிபதிக்கு இவ்வாறான உபதேசம் செய்ய முடியும் என்பதற்கு பொருத்தமாக இடத்துக்கு ஏற்றாற்போல் சில கருத்துக்களைதேரர் அங்கு தெரிவித்தார்.

ஜனாதிபதி அவர்களே, நீங்களோ அல்லது இங்குள்ள எவருமோ, இந்த வாழ்க்கையில் சேர்த்துக்குவிக்கும் சொத்து சுகங்களை இறந்தபின்பு அடுத்த உலகுக்கு எடுத்துச்செல்லப் போவதில்லை. உங்களைச் சுற்றி ஏராளமானவர்கள் இருக்கலாம். அதனால் எந்தப் பயனுமில்லை. நாட்டை மேம்படுத்துவதற்கு உழைப்பவர்களை மட்டுமே நம்பவேண்டும் என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

பிக்குவின் கருத்தை ஏற்றுக் கொள்பவர்போல் ஜனாதிபதி தலையை ஆட்டிக்கொண்டிருந்தமை தெரிந்தது. அதற்கு முதல்நாள் ஜனாதிபதி கொழும்பின் வெளிப்புறத்திலுள்ள கௌனிய ரஜமகா விகாரைக்கு விஜயம் செய்திருந்தார். அவரைப்போலவே அங்கு புத்த பூஜையில் ஈடுபட்டிருந்தார், எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த விகாரையின் சாதாரண நம்பிக்கை பொறுப்பாளராக அவர் இருந்து வருகின்றார்.

தேவாலய பிரதம குருவான வண. டாக்டர் கொல்லுபிட் டியே சங்கராக்கித்த தேரரினால் சமயச்சடங்குகள் நிகழ்த் தப்பட்டதன் பின்னர் பிரமுகர்கள் நண்பகல் உணவுக்கு அழைக்கப்பட்டனர்.

நண்பகல் உணவின்போது இரு தலைவர்களும் இப் பொழுது [illegible] வணி நிதியத்தலைவர் டொமினிக் ஸ்ட்ராஸ் - கான் தொடர்பான பாலியல் விவகாரம் குறித்து அலசி ஆராய்ந்தனர். அதன் பிறகு இருதலைவர்களும் தங்கள் தங்கள் விவகாரங்களில் ஈடுபடுவதற்காக வெளிக்கிட்டு சென்றார்கள். இவை எல்லாம் இங்கு இவ்வாறே நடந்தேறிக் கொண்டிருந்தவேளை, வெளிநாட்டமைச்சர் ஜி.எல். பீரிஸ் இந்தியாவில் உத்தியோகப் பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். கடந்த வாரத்தில் இடம்பெற்ற முக்கிய அரசியல் ராஜதந்திர நடவடிக்கை இதுவென்றே குறிப்பிடவேண்டும். எல்லா வகையிலும் இந்த விஜயம் இலங்கைக்கு வெற்றியைத் தரவில்லையென்றே கருதப்படுகின்றது.

ஜி.எல்.பீரிஸின் இந்திய விஜயத்தின் குறிப்பிடக்கூடிய ஒரு விஷயம் என்னவென்றால் வெளியுறவுத்துறை முக்கியத் தலைவர்கள் எவரும் அவருடன் சென்றிருக்க வில்லை என்பதாகும். பொதுவில் தொழில்துறை ஆலோசனை எதுவும் தேவைப்பட்டால் வழங்கு வதற்கு வெளியுறவு செயலாளர் அவர் அருகில் இருப்பது வழமை. அதே போலத்தான் இந்திய விடயங்களுக்குப் பொறுப்பான வகையில் தற்பொழுது தமிழ்க் கட்சிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேசுக்கள் விரைவாகவும் உறுதியாக வும் முன்னேறு வதற்கு இலங்கை அமைச்சர் தமது அரசின் பொறுப்பினை உறுதி செய்தார். அவ்வாறான நல்லிணக்கம் ஒன்று ஏற்படுத்துவதற்கு 13ஆவது திருத்தத்தின் மீது கட்டியெழுப்பப்படும் அதிகாரப்பகிர்வு பொதியானது பங்களிப்பாகவிருக்கும்.

5.''மீள்குடியமர்வு மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான தமது அரசு ஒப்புக்கொண்டவைகளை கவனம் செலுத்தி முன்னேற்றகரமாக தொடர்நது செயற்படுத்துவதை இலங்கை வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தினார். இந்த விடயம் தொடர்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பணிகளை இலங்கை அமைச்சர் சுட்டிக்காட்டினார். மேலும் சட்ட மா அதிபரின் தலைமையிலுள்ள முகவர் அமைப்புகளுக்கிடையிலான ஆலோசனைக் குழுவின் இடைக்கால சிபாரிசுகளை செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். இவை தடுப்புக்காவல், சட்டம் ஒழுங்கு, நிர்வாகம் மற்றும் மொழிக்கொள்கைகள் மற்றும் சமூக பொருளாதார, வாழ்வாதார பிரச்சினைகள் பற்றியவையாகும். இதற்கு பதிலளிக்கு முகமாக இந்திய வெளியுறவு அமைச்சர் மீள்குடியமர்வு உண்மையான மீள் நல்லிணக்கம் போன்றவற்றில் இலங்கை அரசு உறுதிப்படுத்தும் வகையில் அவசரமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த வீடுகளுக்கு நேரகாலத்துடன் திரும்பிச் செல்வதையும் அவசரகால சட்டங்களை விரைவாக வாபஸ்பெறுவதையும் மனித உரிமை மீறல்களை புலனாய்வு செய்வதையும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாமூல் நிலைமை திரும்புவதையும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மனிதாபிமான கவலைகளைத் தீர்த்துவைப்பதையும் இது உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

## இறுதிக் கட்டப் போர் செயல்பாடுகளை விசாரிக்கவும் கோரிக்கை

பணிப்பாளருமாவார். ஆனால் இந்த முறைதான் அவ்வளவு முக்கியத்துவமான ஒருவிடயம் தொடர்பான விஜயத்தின்போது வெளியுறவு ஆலோசகர் எவரும் அமைச்சருடன் போகவில்லை. பீரிஸ் இந்த முறை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணாவையும் பிரதமர் மன்மோகன் சிங்கையும் மாத்திரம் சந்திக்கவில்லை. இந்திய வெளியுறவு அமைச்சின் மிகவும் மதிக்கப்படுகின்ற பிராமணர்கள் (Brahmins) என்றழைக்கப்படும் இந்திய பொது சேவைகள் அதிகாரிகளையும் சந்திக்க விருந்தார். அவ்வாறான ஒரு சந்திப்புக்கு ஒரு கனிஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான சஜின் வாஸ் குணவர்தனவுடன் அமைச்சர் பீரிஸ் சென்றமையானது முட்டாள்தனம். இல்லையென்றால் துணிச்சல் மிக்கது என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் பெறுபேறுகள் முட்டாள்தனம் என்பதையே அதிகமாகவெளிப்படுத்தியுள்ளன.

பேச்சுக்களின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை எல்லாவற்றையும் வெளிப்படுத்தியுள்ளது. இரண்டு நாடுகளுக்கிடையிலான பேச்சுக்கள் ஒரு தலைபட்சமாகவே இருந்துள்ளது. என்பதை அதுவெளிப்படுத்தியுள்ளது.

கூட்டறிக்கையின் 4 மற்றும் 5 பந்திகள் பின்வருமாறு தெரிவிக்கின்றன:

4 இலங்கையில் ஆயுதமோதல் முடிவுற்றமையானது சகல விதமான எஞ்சிநிற்கும் பிரச்சினைகளையும் புரிந்துணர்வோடும் பரஸ்பர வசதி வாய்ப்புகளோடும் தேசிய இணக்கப்பாட்டை நோக்கி பணிபுரிவதற்கான அரசியல் தீர்க்கதரிசனத்தை மனம்கொண்டு செயல்படுவதற்கான வாய்ப்பினை வழங்கியிருக் கிறதென இருதரப் பின ரும் ஒப்புக்கொள்கிறார்கள். இந்த

தொகுப்பு: கோகுலன்

### உண்மையான நல்லிணக்கம் ஏற்படுத்துக

4 ஆவது பந்தியில் ''கத்தி'' யைப் பயன்படுத்தியுள்ள இந்தியா 5 ஆவது பந்தியில் உண்மையான மீள் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளது. சாதாரண மொழியில் இந்தியா என்ன சொல்ல விரும்புகிறது என் றால், தலையைச்சுற்றி மூக்கைத் தொடும் விளையாட்டு வேண்டாம். காலைவாரும் செயலும் வேண்டாம், இலங்கையிலுள்ள தமிழ்க்கட்சிகள் கேட்பதின்படி 13 ஆவது திருத்தத்துக்கு

(28ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23 மே 2011 திங்கட்கிழமை

# மரண அறிவித்தல்

## திருமதி நாகராஜா சரஸ்வதி



கோப்பாய் மத்தி, வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடா Scarboroughவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகராஜா சரஸ்வதி 19.05.2011 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் தவப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வித்தகர் கைலாசப் பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் ஆசை மருமகளும் நாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணேசு, சங்கரப்பிள்ளை, மார்க்கண்டு மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயரத்தினம், ஜெயராஜரத்தினம், மனோரத்தினம், மதிரத்தினம், காலஞ்சென்ற புஸ்பரதி மற்றும் ஜீவரத்தினம், பாலரத்தினம் , கனகரத்தினம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தகுமாரி(சரோ), தயாநிதி, பாலகௌரி, லீலா, தயாளினி, கலைமகள், காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அனித்தா, அனுசன், நிதர்சன், வினோசன், சானுஜா, பிருந்தா, தனுசன், சகீனா, ரம்மியா, சபியா, கனீசா, கனீசன், தனுயா, சரணி,நிவீசா ஆகியோரின் அப்பம்மாவும், காலஞ்சென்ற இராசமணி (திருமலை) மற்றும் வேலாயுதபிள்ளை, இராசரத்தினம், ஈஸ்வரி, காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் இராசம்மா(கனடா), இராசலட்சுமி, அன்னலட்சுமி, தங்கம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Elgin Mills Funeral Home இல் 1591 Elgin Mills Rd, E இல் 21.05.2011 சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 9 மணி வரையும் 22.05.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 9 மணி வரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (23.05.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையும் இறுதிக்கிரியைகள் செய்யப்பட்டு பின்னர் Elgin Mills Cemetery, 1591 Elgin Mills Rd, E, Richmond Hill, ON. L4S 1M9 இல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

### துக்கம் அனுஷ்டிக்கப்படும் இடங்கள்

**மா.செல்வராஜா**
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

**க.ரஞ்சித்குமார்,**
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

### தொடர்புகளுக்கு:-

நாகராஜா (கணவர்) (416)-287 8483
பிள்ளைகள்-
விஜயன்- (416)- 427 6062
வவா- (416) -839 0315
மனோ- (905) 409 4078
மதி - (416) 543 6434
ஜீவன்- (416) 708 8483
பாலன்- (647) 278 1068
கனகன்- (416) 807 3366

தகவல்:
க.நந்தகுமார்,(தெல்லிப்பழை பிரதேச செயலகம்)

# கண்ணீர்க் காணிக்கை

## திருமதி நாகராஜா சரஸ்வதி



அன்புடனும் பண்புடனும் பூவுலகில்
வாழ்ந்து நேசத்துடனும் பாசத்துடனும்
எம்மோடு பழகி இன்சொல் பேசி எல்லோருக்கும்
ஆதரவும் கொண்டு என்றும் நல்லவராய் எல்லோருக்கும்
உதவி செய்து உத்தம குணத்தோடு வாழ்ந்த உத்தமியே
இன்று உங்கள் பிரிவு எம்மை வாட்டுகிறது
இதய மலரால் அஞ்சலி செய்து பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

நந்தகுமார் (தெல்லிப்பழை பிரதேச செயலகம்), சந்திரகுமார் (கந்தரோடை), வசந்தகுமாரி (சறோ - கனடா), விஜயகுமார் (கனடா), சிவகுமார் (கனடா), உதயகுமார் (கனடா), திருக்குமார் (கனடா), வசந்தராணி (கனடா), ரவீந்திரன் (கனடா), தேவிகாராணி (இராமநாதன் கல்லூரி), பவளராணி (இந்தியா), ஜனாத்தனி (லண்டன்), கலாவல்லி (மல்லாகம்), கமலவல்லி (தெல்லிப்பழை), தர்மதேவி (உடுவில்), தர்மகலா (ஜேர்மனி), தர்மராணி (சுவிஸ்), தர்மசாந்தி (லண்டன்), தர்மகுலராஜா (சுவிஸ்), தர்மகுமாரி (ஆசிரியை, உடுவில் அ.மி.பாடசாலை), தர்ம[illegible] (ஜேர்மனி)

தங்கள் பிரிவால் வாடும்
மருமக்கள்.

(40)(4435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தேவைகளை நிறைவேற்ற கிராம சேவகர்கள் முன்வர வேண்டும்

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன

யாழ்ப்பாணம்,மே 23

கிராமசேவையாளர்கள் அரசு வரையறை செய்யப்பட்ட செயற்பாடுகளை மட்டும் முன்னெடுக்காது மக்களுக்கு எது தேவையோ அதைப் பல்வேறு வகையில் நிவர்த்தி செய்யக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன இவ்வாறு கூறியுள்ளார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவையாளர்களுடனான கலந்துரையாடலில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:

அரசு கிராம சேவையாளர்களுக்குத் தேவையான அணைத்து வசதிகளையும் படிப்படியாகச் செய்து வருகிறது. கிராம சேவையாளர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

இந்தச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் கிராம சேவையாளர்கள் மக்களுக்கு முழுமனதாகத் தமது சேவையைத் திருப்தியாக வழங்கவேண்டும். அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுப் பாலமாகச் செயற்படுபவர்கள் இந்தக் கிராம சேவையாளர்கள்.

எனவே அரசுக்கு நற்பெயரைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் கிராம சேவையாளர்கள் மீதும் அரசு மீதும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.- என்றார்.(எ)

# வீதி விபத்துக்களில் மூவர் காயம்

யாழ்ப்பாணம்,மே 23

ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துக்களில் மூவர் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வவுனியாவிலிருந்து பயணிகளை ஏற்றி வந்த பஸ்ஸின் அச்சு உடைந்து மாங்குளம் பகுதியில் சாரதியின் சாதுரியத்தால் காட்டுப் பகுதிக்குள் பஸ் நிறுத்தப்பட்டது.

இதில் பயணித்த பயணிகளுக்குச் சேதம் ஏற்படவில்லை. சாரதி மட்டும் காயமடைந்தார். வவுனியாவைச் சேர்ந்த ரி.ரமேஸ் (வயது 34) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இதேவேளை பளை, இயக்கச்சிப் பகுதியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வயோதிபரைக் கண்டர் வாகனம் மோதியதில் வயோதிபர் காயமடைந்தார். இதே இடத்தைச் சேர்ந்த வி.கனகலிங்கம் (வயது 78) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை மீசாலைப் பகுதியில் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்தவர் காயமடைந்தார். அதே இடத்தைச் சேர்ந்த கோ.ஞானேந்திரன் (வயது 49) என்பவரே காயமடைந்துள்ளார்.

(ம-313-207)

# சித்திரப் போட்டி

தென்மராட்சி, மே 23

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான மாகாண மட்ட சித்திரப் போட்டி விரைவில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டிக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்கான ஆசிரியர் சந்திப்பு பின்வரும் திகதிகளில் வகுப்பு ரீதியாக வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை தரம் 1 ஆசிரியர்களுக்கும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை தரம் 2 ஆசிரியர்களுக்கும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தரம்-3 ஆசிரியர்களுக்கும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தரம்-4 ஆசிரியர்களுக்கும் ஜூன் இரண்டாம் திகதி வியாழக்கிழமை தரம்- 5 ஆசிரியர்களுக்கும் சந்திப்பு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## அபிவிருத்தி.....



பாதுகாப்பு: யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டும் இயந்திரவியல் கல்லூரிக்கு அண்மையில் கொழும்பு சமுத்திரவியல் பல்கலைக்கழகப் பணிப்பாளர் நாயகம் விஜய் விக்ரமரத்ன வருகை தந்து கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளையிடம் கணினி மற்றும் பாதுகாப்புச் சீருடைகளை வழங்கினார். (ம-160)

# காரைநகர் ஈழத்துச் சிதம்பர மகா கும்பாபிஷேகம்

காரைநகர்,மே 23

காரைநகர் ஈழத்துச் சிதம்பர மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு மகா கும்பா பிஷேகத்துக்கான அனைத்து வேலைகளும் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

மகா கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதில் பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்துதல் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை யும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறும்.

மிகவும் பிரமாண்டமான முறையில் 33 குண்ட பட்ஷ உத்தம மகாயாக பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகமாக இடம்பெறும். இந்த குடமுழுக்கு விழாவைப் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நிகழ்த்தி வைக்கவுள்ளார்.

33 குண்டலங்களிலும் மகாயாகம் இடம்பெற்று எதிர்வரும் 6 ஆம் திகதி திர கட்கிழமை காலை 6.32 மணி முதல் 7.16 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

(ம-250)

# புங்குடுதீவு கழுதைப்பிட்டி வரையான வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 23

புங்குடுதீவு, பெருங்காடு இறுப்பிட்டி வரையான வீதி புனரமைப்பு வேலைகள் நடைபெற்ற போதும் இறுப்பிட்டியில் இருந்து கழுதைப்பிட்டி வரையான சுமார் ஒரு கிலோ மீற்றர் வரையான தூரம் இன்னமும் புனரமைக்கப்படாமல் உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டிலா அல்லது வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலா இந்த வீதி உள்ளது? என்ற இழுபறியே இந்தப் பகுதிக்கான வீதி புனரமைக்கப் படாதுள்ளதற்குக் காரணம் எனத் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி புனரமைக்கப் படாமையால் இந்தப் பகுதிக்கான பஸ் சேவையும் இடம் பெறுவதில்லை எனவும் உரியவர்கள் இந்த வீதியைப் புனரமைத்து மீண்டும் பஸ் சேவை இடம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் புங்குடுதீவு அபிவிருத்திக் கழகம் கேட்டுள்ளது. (எ-7)

# ஆரம்பப்பிரிவு மாணவருக்கு வாரந்தோறும் போட்டிகள்

தென்மராட்சி, மே 23

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான போட்டிகள் வாரந்தோறும் வலயத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

வாய்ப்பாடு மனனம், கோலம் போடுதல், திருக்குறள் மனனம், அறநெறி மனனம், பண்ணிசை, உறுப்பெழுத்து, துரித கணித செய்கை, வாய்மொழி ஆங்கிலம், ஆங்கில சொற்களஞ்சிய விருத்தி, சிறுவர் அரங்கம் ஆகிய போட்டிகளே நடத்தப்பட்டு வருகின்றன.

தரம்- 3 மாணவர்களுக்கான போட்டிகள் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வியிலும் நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையிலும் நடத்தப்பட்டன.

தரம் 2 மாணவர்களுக்கான வாய்ப்பாடு மனனப்போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை மீசாலை விக்னேஸ்வரா ம.வியிலும்

தரம்-1 மாணவர்களுக்கான திருக்குறள் மனனப்போட்டி கள் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை கைதடி - நுணாவில் அ.த.க.பாடசாலையிலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதலாம் தவணைக் காலத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான சான்றிதழ்கள் வலயக் கல்வி அலுவலகத்தால் பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-207)

# விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஆண்டு விழாவும் கட்டடத் திறப்பும்

கைதடி, மே 23

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் 35 ஆவது அகவையும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கைதடி நவீல்ட் வீதியிலுள்ள தொழிற்பூங்காவில் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆ.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராகவும் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ஆர். விஜயலக்சுமி, வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் கே.சிவகரன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி [illegible] சீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் சமூக சேவைத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலர் ஏ.ஞானவேல், யாழ். கட்டடத் திணைக்களத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஐ.சிவலோகநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி கட்டடம் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் [illegible] அமைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-288)

# தென்னைவள உற்பத்திப் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 23

''தென்னை வளத்திலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருள்கள் உருவாக்கல்'' தொடர்பான பயிற்சி நெறி அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் இந்தப் பயிற்சி நெறி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கச்சாய் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறிக்குக் கலந்து கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னராக சுண்டுக்குளி கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கட்டடம் எனும் முகவரியுடனோ அல்லது 021 222 2421 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் அறிவி- (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தரின் அவதாரங்களைச் சித்திரிக்கும் 28 சிலைகளும் பலாலியில் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், மே 23

பலாலியில் உள்ள யாழ். மாவட்ட பாதுகாப்புப்படைத் தலைமையகத்தில் அமைந்துள்ள விகாரையில் புத்த பெருமானின் 28 அவதாரங்களையும் எடுத்து விளக்கும் 28 புத்தர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

2600 ஆவது புத்த ஜெயந்தி தினத்தையொட்டி இந்தச் சிலைகள் விமானம் மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டு அங்குள்ள விகாரையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாக பலாலிப் படைத் தலைமையகம் தெரிவித்தது.

பலாலி இராணுவத் தலைமையகத்தில் விகாரையை அண்டிய அரச மரம் ஒன்றைச் சுற்றி ஏழு பக்க வடிவத்தில் நிர்மாணிக்கப்பட்ட இடத்திலேயே அவை வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் அமர்ந்த நிலையில் தியானம் செய்யும் நான்கு புத்தர் சிலைகள் வீதம் வைக்கப்பட்டுள்ளன.

2600 ஆவது புத்த ஜெயந்தி தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துறுசிங்கவின் சிந்தனையின் பிரகாரமே 28 புத்தர் சிலைகள் கொண்ட விகாரை அமைக்கப் பட்டுள்ளது.



பலாலிக்கு எடுத்து வரப்பட்ட 28 புத்தர் சிலைகளும் அங்குள்ள விகாரையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இந்த 28 சிலைகளும் புத்தபெருமானின் வெவ்வேறு அவதாரங்களைக் குறிப்ப வையாகும். கடந்த 17 ஆம் திகதி வெசாக் பூரணை தினத்தன்று இந்தச் சிலைகள் வைபவ ரீதியாக அங்கு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டன. (ஓ-14)

புத்த பகவானின் 28 அவதாரங்களையும் வெளிப்படுத்தும் விதமாகவே 28 புத்தர் சிலைகள் அந்த அவதாரங்களின் பெயர்களுடன் அங்கு வைக்கப்பட்டுள்ளன.

வெண்ணிறத்தினாலான அந்தச் சிலைகள் ஒவ்வொன்றும் ஓர் அடி உயரமானவை ஆகும். இந்தச் சிலைகள் அனைத்தும் அங்கேயே நிரந்தரமாக வைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது. அவை வேறு எங்கும் எடுத்துச் செல்லப்படமாட்டா.

இங்கு வைக்கப்பட்டுள்ள சிலைகளில் 18 சிலைகள் யாழ். மாவட்டத்திலுள்ள படைத்தளபதிகளாலும் ஏனைய 10 சிலைகள் படைத் தலைமையகங்களாலும் வழங்கப்பட்டவை. இது குறித்த விவரக் குறிப்புகள் அங்கு வைக்கப்பட்டுள்ள நினைவுக் கல்லில் தீட்டப்பட்டுள்ளன.

மேற்கண்ட தகவல்களை எமது செய்தியாளரிடம் பலாலி ஊடகப் பிரிவின் அதிகாரி ஒருவர் விவரித்தார்.

(ஓ-14-22)

## ஓரிரு மாதங்களில் சொந்த இடத்துக்கு

வலி.வடக்கு, மே 23

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இன்னும் இரண்டு மாதத்தில் தனது சொந்தக் கட்டடத்தில் முழுமையாக இயங்கவுள்ளது.

கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு முன்னாள் உள்ள கூட்டுறவு வைத்தியசாலையில் இயங்கி வந்த இந்த வைத்தியசாலை தற்போது உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் தனது சொந்த கட்டடத்தில் இயங்கவுள்ளது.

தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் கட்டடத் தொகுதிகள் திருத்தப்பட்டு வருகின்றன. விரைவில் இந்த வைத்தியசாலையை உரிய கட்டடத் தொகுதியில் இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை பதில் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஆர்.ஜெயக்குமார் மேற்கொண்டு வருகின்றார்.

(ம-86)

## வலி.கிழக்கில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் நெருக்கடி

அச்சுவேலி, மே 23

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உரிய வகையில் வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை.

இதனால் இரவு நேரங்களில் போக்குவரத்துச் செய்வோர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உபஅலுவலகப் பிரிவுகளான அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய் போன்ற பகுதிகளிலேயே இந்த நிலை காணப்படுகின்றது.

பொருத்தமான முறையில் தெருவிளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு நேரங்கில் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் திருட்டுச் சம்பவங்களுக்கு வாய்ப்பு இருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கின் வசந்தம் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஊடாக தெருவிளக்கு இணைப்பு உள்ளிட்ட பல்வேறு உடனடி அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து விரைந்து செயற்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் படுகின்றது. (ம-11)

## தென்மராட்சி அபிவிருத்திக்கு 25 லட்சத்து 55 ஆயிரம் ரூபா

### நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கினர்

தென்மராட்சி, மே 23

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்த வருடத்துக்குரிய வரவு, செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரால் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

• அரச அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்ட முதலாவது பட்டியலில் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு 33 வேலைத் திட்டங்களுக்கு 25 லட்சத்து 55 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அறவிக்கப் பட்டுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி 25 வேலைத்திட்டங்களுக்கு 19 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஐந்து வேலைத்திட்டங்களுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 3 வேலைத் திட்டங்களுக்கு 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப் பட் டுள்ளது. (எ-207)

## கலை அரங்குக்கு குளிரூட்டி வசதி

யாழ்ப்பாணம், மே 23

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் கலை அரங்குக்கு வெகு விரைவில் குளிரூட்டி வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

ஈ.யூ.லங்கா நிறுவனத் தலைவர் ராமச்சந்திரனின் தனிப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இந்த குளிரூட்டி வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழா கல்லூரி அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது அந்த அரங்குக்கு குளிரூட்டி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும்படி ராமச்சந்திரனிடம் கல்லூரிச் சமூகம் சார்பில் கோரிக்கை விடுக்கப் பட்டது. அதனை அடுத்து அரங்குக்கு குளிரூட்டி வசதிகளை ஏற்படுத்தித் தருவதாக அவர் கூறியுள்ளார். (ம-4)

## பாடசாலைச் சேவையை சீர்செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 23

இளவாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் 788 இலக்கப் பாடசாலை பேருந்து சேவை சீரின்மையால் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இளவாலையிருந்து பாடசாலை சேவையாக யாழ்ப்பா ணம் நோக்கிச்செல்லும் பேருந்து காலை 6.45 இற்கு வழமை போல் இளவாலையிலிருந்து சேவையில் ஈடுபட்டிருந்தது.

தற்போது சீராக இந்தப் பேருந்து சேவை இடம் பெறுவதில்லை. சேவையில் ஈடுபடும் நாள்களிலும் காலை 7.40 மணிக்கே இளவாலையில் இருந்து புறப்படும்.

இதனால் யாழ். நகரப் பாடசாலைக்குச் செல்லும் இளைவாலைப் பிரதேச மாணவர்கள் தாமதமகாப் பாடசாலை செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் 'சீசன் ரிக்கற்' இருந்தும் தனியார் பேருந்துகளில் அதிக பணம் கொடுத்து பயணம் செய்ய வேண்டி உள்ளது என்றும் பாடசாலை மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(ம-313)

# விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் எட்டப்படும் தீர்மானம் பெயரளவிலேயே

### விசனம் தெரிவிக்கின்றனர் பாதிக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மே 23

விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் எடுக்கப்படும் தீர்மானங்கள் பெயரளவிலேயே உள்ளன.

இவ்வாறு விசனம் கூறினர் யாழ்.மாவட்ட விவசாயிகள் சம்மேளனப் பிரதிநிதிகள். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்கள் உரியமுறையில் அமுல்படுத்தப்படுவதில்லை. இதனால் தொடர்ந்தும் விவசாயிகள் படுமோசமான நிலைமையை எதிர்கொள்ளவேண் டியுள்ளது என்றும் அவர்கள் கூறினர்.

வீரசிங்கம் மண்டபத்தில் விவசாயிகள் பிரச்சினைகளை ஆராயும் கூட்டம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக்டிறஞ்சன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் விவசாயிகளின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தமது விசனத்தைவெளிப்படுத்தினார்கள்.

விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தின் போது மேலும் வெளிப்படுத்திய குறைபாடுகள் வருமாறு:

★ பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இறுக்கமான தீர்மானங்கள் எடுக்கப் பட்டுள்ளன. அவற்றை அமுல் படுத்த வேண்டும்.

★ யாழ்.மாவட்டத்திலுள்ள சந்தைகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

★ விவசாய உற்பத்திகளின் கொள்வனவின் போது பத்து வீத கழிவு நடைமுறையை இல்லாமல் செய்ய வேண்டும். அதனைக் கண்காணிப்பதற்கு தகுந்த உத்தியோகத்தரை நியமிக்க வேண்டும்.

★ எலக்ரோனிக் தராசு பாவிக்கும் நடைமுறை அமுல்படுத்த வேண்டும். இந்த நடைமுறை இல்லாத காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

★ விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்படுவதில்லை. இதனால் மின்மோட்டார் மூலம் நீர்ப்பாசனம் செய்யும் விவசாயிகளின் மாதாந்த வாடகை நீக்கப் பட வேண்டும்.

★ விவசாயிகள் தற்போது 250 ரூபா மானியமாக செலுத்தி வருகின்றனர். அது நீக்கப்பட வேண்டும்.

★ வாழைக்குலைக் கழிவு 10 கிலோவுக்கு உட்பட்ட குலைக்கு 2 கிலோ கழிவும் 10 கிலோவுக்கு மேற்பட்ட குலைக்கு 3 கிலோவும் என்று வரையறுக்கப்படவேண்டும்.

★ விவசாயிகளுக்கு என தனியான சந்தை தேவை.

★ சந்தைக் குத்தகைக்காரர்கள் தாம் நினைத்ததை செய்து விவசாயிகளை பாதிப்புறச் செய்யும் நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி - வேலணை கடற்பாலத்தை விரைவில் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 23

வலிகாமத்தையும் தீவகத்தையும் இணைக்கும் அராலி-வேலணை கடற்பாலத்தை விரைவில் அமைத்து பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்துமாறு வேலணை வர்த்தக சங்கத் தலைவர் க.ஜெயச்சந்திரமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

இந்த விடயம் தொடர்பாகக் கடந்த5 வருடமாகத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

2011இல் இந்தத் திட்டத்துக்காக 52 மில்லியன் ரூபா ஒதுக்குவதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதுதொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வலி. மேற்கு, வேலணைப் பிரதேச செயலர்கள், அரச அதிபர் ஆகியோருக்கு கடந்த காலங்களில் எண்ணக்கருக்கள் முன்வைக்கப்பட்டன என்று கூறினார்.

இதுதொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில்:

இந்தத் திட்டத்துக்கு பெருந்தொகை நிதி தேவையாக உள்ளது.

2011 அல்லது 2012 இல் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டு பெரிய அபிவிருத்தியாக இது மேற்கொள்ளப்படும்.- என்றார்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மணல் அகழ்வு இடம்பெறுகிறது. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

நாகர்கோயில் மணலை இந்தப் பகுதி மக்கள் பெறுவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்களுக்குப் பிரதேச சபை பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

எனினும் மேலதிகமான நீரை வழங்குவதற்கு ஏனைய நிறுவனங்களின் ஊடாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் கூறினார்.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் சிரேஷ்ட பொறுப்பதிகாரி எஸ்.ரவீந்திரா கூறுகையில்:

குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தை விரைவுபடுத்தவேலணைப் பிரதேச சபை காணி வழங்குவதாகத் தெரிவித்தது. இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் 20லட்சம் ரூபா திட்டம் நகர்த்தப்பட முடியாத நிலையில் உள்ளது என்று கூறினார். (ம-302)

## கூட்டுறவின் மகத்துவம்...



சிறப்பான சேவைக்கு: பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றி இளைப்பாறிய 33 கூட்டுறவுப் பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில் இளைப்பாறிய பணியாளர்கள் ஒருவருக்குக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கிறார். (த-26)

# காரைநகர் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடத்துக்கு ரூ. 3.5 மில்லியன்

காரைநகர், மே 23

காரைநகர் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு 3.5 மில்லியன் ரூபா நிதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இரண்டாம் கட்ட நிதி ஒதுக்கீடு வழங்கப்படாததால் கட்டடம் அமைக்கும் பணிகள் நீண்டகாலமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்னவிடம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் விடுத்த கோரிக்கையை அடுத்து இரண்டாம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது காரைநகர் பிரதேச செயலகம், காரைநகர் வலந்தலையில் அமைந்துள்ள 2ஆவது உலக இந்து மாநாடு ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

போதிய இடவசதிகள் இல்லாமையால் அங்கு கடமையாற்றும் அலுவலர்களும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

# மின் விளக்குகள் இன்மையால் இருளில் மூழ்கும் கைதடி வீதி

கைதடி, மே 23

கைதடி நவீல்ட் பாடசாலை வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்படாததால் இரவுவேளைகளில் இந்த வீதியால் செல் வோர் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதியில் நவீல்ட் பாடசாலை, விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழிற்பூங்கா, அரச வடிசாலை ஆகியவற்றுடன் தற்போது வடக்கு மாகாண சபையின் திணைக்களங்களும் இயங்கி வருகின்றன. இந்த நிலையிலும் இந்த வீதி விளக்குகளைப் பொருத்த எவரும் முன்வரவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயத்தில் இலங்கை மின்சாரசபை உடனடிக் கவனமெடுத்து இந்தப் பகுதிக்கான வீதி விளக்குகளைப் பொருத்தித்தருமாறு மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-288)

# திணைக்களங்களிலிருந்து வரும் கடிதங்களை இனி மொழிபெயர்ப்புடன் அனுப்ப நடவடிக்கை

## அமைச்சர் ஜோன் செனிவிரட்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 23

ஓய்வூதிய திணைக்களம், காணித் திணைக்களங்களில் இருந்து வரும் கடிதங்களுக்கு மொழி பெயர்ப்புடன் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனிவிரட்ன தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அமைச்சர் ஜோன் செனிவிரட்ன செயலகத்தின் உத்தியோகத்தர்களைச் சந்தித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி திணைக்களங்களில் இருந்துவரும் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் இருப்பதால் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் எனவே தமிழ் மொழியில் அனுப்பி வைக்கும் படியும் அமைச்சரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்குப் பதிலளித்த அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-7)

# போதையில் வீதிகளில் தள்ளாடும் மாணவர்கள்

கைதடி, மே 23

மது அருந்திய பாடசாலை மாணவர்கள் மதியிழந்து வீதியில் உலா வந்த சம்பவம் ஒன்று அண்மையில் கைதடி மேற்கில் பட்டப் பகலில் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் பாட சாலை விடுமுறை நாளில் மதுவை வாங்கி அந்தப் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றின் பின்னால் வைத்து அருந்தியுள்ளனர்.

போதை தலைக்கேறி தன்னிலை மறந்த அவர்கள் வீதியில் உலா வந்து வீதியில் செல்வோர் மீது சேஷ்டை புரிந்தனர்.

மாணவர்களின் இந்த நிலையைக் கண்ட அந்தப் பிரதேசப் பெரியோர்கள் அவர்களுக்கு அறிவுரை கூற முற்பட்டவேளை மாணவர்களோ அவற்றைச் செவிமடுக்காது தள்ளாடிய நிலையில் சென்றதையும் அவதானிக்க முடிந்ததாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். இதேவேளை இந்தச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட பெற்றோர்கள் உடனடியாக வந்து மாணவர்களை அழைத்துச் சென்றுவிட்டனர்.

மாணவர்களின் இத்தகைய செயலுக்குப் பெற்றோர் தேவைக்கு அதிகமாகப் பணம் கொடுப்பதே காரணம் எனவும் [illegible]வர்களால் குறைகள் கூறப்பட்டதையும் அங்கு காணக் [illegible] இருந்தது. (எ-288)

# கவரிங் சங்கிலியும் அபகரிப்பு

குடாநாட்டில் பரவலாகத் தங்க நகைகளை வீதிகளில் வைத்து அபகரிக்கும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த நிலையில் திருடர் பயத்தால் கவரிங் நகைகளை அணிந்து செல்வோரும் அவற்றைப் பறி கொடுக்கின்றனர்.

இவ்வாறான சம்பவம் ஒன்று புத்தூர் வாதரவத்தையில் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நடந்து சென்றுகொண்டிருந்த பெண்ணின் கழுத்திலுள்ள சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

குறித்த பெண்ணிடம் இருந்து அறுத்துச் சென்ற சங்கிலியானது கவறிங் நகை என்று சங்கிலியை [illegible] கொடுத்தவர் தெரிவித்துள்ளார். (ம-323)

# பொலிஸாரின் துரித சேவைக்கு மோ.சைக்கிள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 23

பொதுமக்களின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்ப்பதற்கும் பொலிஸார் துரித கதியில் சேவையை வழங்குவதற்கும் பொலிஸ் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துள்ளார்.

பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை மேற்கொள்ளும் போது அந்த முறைப்பாடுகள் தொடர்பில் உடனுக்குடன் அந்தப் பகுதிகளுக்கே சென்று விசாரித்து தீர்வுகளைக் காணும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையங்களில் போதியளவு வாகன வசதிகள் இன்மை காரணமாக பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களுக்கே அழைக்கப்பட்டு அவர்கள் சார்ந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. இதனால் பலரும் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

இந்த நிலையில் பொலிஸ் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதன் மூலம் சிறு முறைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அவ்வப் பகுதிகளுக்கு நேரில் சென்று உடனடித் தீர்வுகளை எட்ட முடியும். பொலிஸாரின் சேவையை மேலும் விஸ்தரிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு 23 மோட்டார் சைக்கிள்களை அமைச்சர் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகளை வென்றெடுப்பதற்கான பணியிலிருந்து இனியொருபோதும் எம்மால் பின்வாங்க முடியாது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கூறுகிறார்

மன்னார், மே 23

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான அரசியல் பணியிலிருந்து இனியொரு போதும் பின்னிற்க முடியாது. அதற்கான அரசியல் அடித்தளத்தினைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்று பட்டுச் செயற்பட வேண்டிய மிக முக்கிய தருணத்திலுள்ளோம். இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பான் கீ-மூன் வன்னி யுத்தத்தின் பேரழிவுகள் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கைக்கு ஆளும் கட்சிப் பிரமுகர்களும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் தமது சுயநல அரசியல் போக்குகளுக்கு ஏற்ற வகையில் அறிக்கைகள் விடுவதிலும் அரசியல் நடத்துவதிலும் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டு மிகப் பெரும் பேரவலத்தினை எதிர்கொண்டதனை மறைக்க முயன்றால் அல்லது அதற்குத் துணை போனால் தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள். எனவே அது தொடர்பில் நாம் உறுதியாகவுள்ளோம்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நியாயமான அரசியல் தீர்வொன்றை வேண்டிநிற்கும் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் முன்னெடுத்து வருகின்றது.

கடந்த கால யுத்த நடவடிக்கைகள் காரணமாக அழிந்து போன எமது மக்களின் வாழ்வியலைக் கட்டியெழுப்புவதே எமது பிரதான நோக்கமாகும். இதற்கான ஜனநாயக பூர்வமான அரசியல் பணிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுத்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இன்றைய அரசு அரசியல் தீர்வொன்றின் அவசியம் தொடர்பில் தமது பங்காளிக்கட்சிகளை இழுத்தெடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவது தொடர்பாக பிந்திக் கிடைத்த செய்திகள் எமக்கு நம்பிக்கை தருகின்றன. எனினும், அவை ஆரோக்கியமானதாக அமைய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் ஊடான சந்திப்புக்களின் போது அரச தரப்பு பிரதிநிதிகள் நம்பிக்கை தரும் விடயங்களை உறுதிப்படுத்த வேண்டும்.

அதுவே நாட்டின் சுபீட்சமான நிரந்தர சமாதானத்துக்கான அரசியல் வாழ்வியலைத் தோற்றுவிக்கும்.

அதே நேரம் மிகப்பெரும் துயரங்களை எதிர் கொண்ட தமிழர் வாழ்வியலை மீண்டுமோர் இருண்ட சிறைக்குள் தள்ளிவிட நாம் தயாரில்லை.

நிரந்தர அரசியல் தீர்வொன்றுக்கான அவசியமான வழிகாட்டலையும் நல்லெண்ணத்தையும் வெளிக்காட்ட வேண்டியது அரச தரப்பின் கைகளிலேயே தங்கியுள்ளது. அதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டி நிற்கின்றது- என்றுள்ளது. (க-601)

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வதிவிடக் கருத்தரங்கு வவுனியாவில்

வவுனியா, மே 23

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மூன்று நாள் வதிவிடக் கருத்தரங்கு வவுனியா தவசிக்குளத்தில் அமைந்துள்ள சேவாலங்கா கேட்போர் கூடத்தில் நாளையதினம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.


யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளும் சாவகச்சேரி, கோப்பாய், உடுவில், நல்லூர், கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த சமூக சேவை அதிகாரிகளும் இதில் கலந்து கொள்கின்றனர்.

பிரித்தானியாவைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட ஒக்ஸ்பாம் என்னும் சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனம் இந்த வதிவிடக் கருத்தரங்கிற்கான முழுமையான அனுசரணையை வழங்குகின்றது.

அனர்த்தங்கள் தொடர்பான அறிவு, அனுபவப் பகிர்வு, முன் ஆயத்த நடவடிக்கைகள், அனர்த்த காலத்தில் பணியாற்றுதல் போன்ற விடயங்கள் இதில் இடம்பெறுமெனக் கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்ட அரச அதிகாரிகள் இதில் பங்குபற்றுவதற்கான முழுமையான ஒழுங்கையும் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேற்கொண்டுள்ளார். (க-121)

## மோசமான வீதியால் மக்கள் அவலத்தில்



மன்னார், மே 23

மன்னார் நகரசபைப் பிரிவுக்குட்பட்ட உப்புக்குளம், பள்ளிமுனை வீதி மோசமாகச் சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் இந்தப் பகுதியூடாகப் போக்குவரத்தை மேற்கொள்வதில் அந்தப் பகுதி மக்கள் கடும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருவருடத்துக்கும் மேலாக இந்த நிலையே நீடித்து வருகின்றது. மழை காலங்களில் இந்த வீதியூடாகப் பிரயாணம் செய்வோர் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சில வேளையில் மழை வெள்ளத்தால் மூடிக்காணப்படும் குழிகளுக்குள் சிலர் விழுந்து எழும்பிச் செல்வதையும் காணமுடிகின்றது.

இனிமேலாவது உரிய அதிகாரிகள் இந்த வீதியைச் செப்பனிட்டுத் தமது சிரமங்களுக்கு முடிவு கட்டமாட்டார்களாவென இந்த வீதியை உபயோகித்து வரும் மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (க-601)


### அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் 1294 சிகப்பு

மீனம் 12 37 38 48 20-05-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 5,236,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 233,511 | 20/- | 4,670,220/- |
| 2 இலக்கங்கள் | 21,491 | 40/- | 859,640/- |
| 1 இல. + லக்கினம் | 21,276 | 60/- | 1,276,560/- |
| 2 இல. + லக்கினம் | 1,922 | 200/- | 384,400/- |
| 3 இலக்கங்கள் | 575 | 1000/- | 575,000/- |
| 3 இல. + லக்கினம் | 61 | 10,000/- | 610,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,236,550/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,975,820/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 636 | | 1,316,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 279,475 | | 10,291,820/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,758,600/-

### இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்

மேடம் 04 21 44 51

ஜக்பொட் பரிசு ரூபா. 700,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 632 | 500/- | 316,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 700,000/- | 700,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 636 | | 1,316,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

### மணமகள்கள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த 1979 பூரட்டாதி 2 ஆம் பாதம், 8இல் செவ்வாய், U.K. பிரஜாவுரிமை,
1978- அனுசம் 3ஆம் பாதம் 8ல் செவ் வாய் U.K. பிரஜாவுரிமை.
1981 விசாகம் 2 ஆம் பாதம் குற்றமற்ற பிரான்ஸ் பிரஜாவுரிமை.
1979 பூசம் 1ஆம் பாதம் பட்டதாரி வங்கி முகாமையாளர்.
1978 உத்தரட்டாதி 1ஆம் பாதம் அச்சக உரிமையாளர்.
ஆகியோருக்கு ஏற்ற நற்குணமுள்ள மண மகள்கள் தேவை. தொடர்பு:- 0775397856 (மாலை 6-10 மணிவரை)
(4431)

### விற்பனைக்கு / குத்தகைக்கு
Solid / Strong huge House
வீடு விற்பனைக்கு / குத்தகைக்கு
in 3rd Cross Street, Jaffna. 5/10 mts walk to Hospital and town. Ideal for banks, insurance or office Leasing.
மேலதிக விபரமறிய:
Contact - 0772 758454
Mail - jaffnatownhousalelease@gmail.com
Foresight



2439422

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2224 திகதி 21-05-2011

ஆங்கில எழுத்திற்கும் L

வெற்றி எண்கள் 20 43 52 70 போனஸ் இல: 48

ஜக்பொட் பரிசு ரூ. 12,177,175/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 194070 | 20/- | 3,881,400/- |
| 2 இல | 13777 | 100/- | 1,377,700/- |
| 3 இல | 271 | 1,000/- | 271,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7831 | 40/- | 313,240/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 587 | 1,000/- | 587,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 18 | 10,000/- | 180,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,177,175/- | - |
| 1 இல + போனஸ் இல | 9211 | 100/- | 921,100/- |
| 2 இல + போனஸ் இல | 439 | 500/- | 219,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 400 | 200/- | 80,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 24 | 1,500/- | 36,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,366,940/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 226644 | | 9,966,940/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 303214784-5-12 |
| காலி | 303223147-2-07 |
| கம்பஹா | 303223103-7-00 |
| திருகோணமலை | 303222164-5-48 |
| மட்டக்களப்பு | 303222349-5-43 |
| கேகாலை | 303224070-6-14 |
| கண்டி | 303225218-1-41 |
| அநுராதபுரம் | 303216757-9-05 |
| களுத்துறை | 303215121-9-47 |
| மாத்தறை | 303210488-4-05 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ.12,706,725/-

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சல் தொடர்பாக வவுனியாவில் கருத்தரங்கு

வவுனியா, மே 23

வவுனியா வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்திய அதிகாரிகளுக்கு எலிக்காய்ச்சல் நோய்க்குச் சிகிச்சையளிப்பது தொடர்பான விசேட கருத்தரங்கொன்று வவுனியா வைத்தியசாலையின் கருத்தரங்கு மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் வவுனியா பொது வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் அருட்செல்வன், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சத்தியலிங்கம் ஆகியோர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சிகிச்சைகள் தொடர்பாக விளக்கம் அளித்தனர்.

குறிப்பாக வெளிநோயாளர் பிரிவில் காய்ச்சலுக்கெனச் சிகிச்சை பெறுவதற்கு மக்கள் வரும் போது அவர்களுக்கு எலிக்காய்ச்சலுக்கான அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். தொடர்காய்ச்சல், தலையிடி, எலும்புகள் மற்றும் மூட்டுக்களில் நோவு, பசியின்மை என்பன எலிக்காய்ச்சலுக்கான அறிகுறிகளாகும். இந்த அறிகுறிகள் காணப்படுவோரை உடனடியாக வைத்தியசாலை விடுதியில் அனுமதித்துச் சிகிச்சை வழங்குதல் வேண்டும்.

அத்துடன் இந்த நோயாளர் பற்றிய தொற்றுநோய் அறிவித்தல்களை உரிய சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோர் இந்த நோயால் பீடிக்கப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சிகிச்சை முறைகள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த நோய் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி எதிர்காலத்தில் மீண்டுமொருமுறை இந்த நோய்த் தொற்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான முக்கியத்துவம் குறித்தும் இங்கு எடுத்துக் கூறப்பட்டது.

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதகாலப் பகுதியில் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 39 பேர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (க-501)

# சமுதாய உதவியாளர்களுக்கு சைக்கிள்கள் விநியோகம்

வவுனியா, மே 23

வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் கடமைபுரியும் உளநலப் பிரிவு சமுதாய உதவியாளர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மு.மகேந்திரன் தலைமையில் சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். இரவீந்திரன் கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டிகளை உரியவர்களுக்கு வழங்கினார்.

வவுனியா மாவட்ட வேல்ட் விஷன் நிறுவனப் பணிப்பாளர் மற்றும் வவுனியா மாவட்ட உளநல வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சுதாகரன் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் கே.சத்தியசீலன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணப் பிரதேசங்களில் கடமைபுரியும் இத்தகைய பணியாளர்களுக்கும் விரைவில் துவிச்சக்கர வண்டிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த ஒன்பது மாதச் செயற்றிட்டம் வேல்ட்விஷனின் அனுசரணையுடன் வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(க-500)

# ஒட்டுசுட்டான் ம.வியில் கணித, விஞ்ஞான பிரிவுகள்; பதிவுகளை மேற்கொள்ளுமாறு அதிபர் வேண்டுகோள்

முல்லைத்தீவு, மே 23

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலையில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 16 வருடங்கள் கழிந்த நிலையில் மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு இந்த வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் ந.கருணாகரன் தெரிவித்தார்.

எந்தவித உதவிகளும் இல்லாது நீண்ட தூரங்களில் இருந்து வருகின்ற மாணவர்களுக்கு கணித, விஞ்ஞானப் பிரிவினை ஏற்படுத்திக் கொடுப்பது மகிழ்ச்சியான விடயம். ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் இசுறு பாடசாலையாகத் தரம் உயர்ந்ததால் இந்தப் பிரிவுகள் அமைப்பதற்கு வசதியேற்பட்டுள்ளது.


அத்துடன் விஞ்ஞான பாடங்களில் மாணவர்கள் தேர்ச்சி பெற்று இந்தப் பிரதேசத்துக்குப் பெருமை சேர்க்க உள்ளனர்.

மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் இந்தப் பாடசாலையில் கற்று வருகின்ற மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் பெரும் முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர். இதற்குச் சான்றாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்கள் 8ஏ பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். பௌதீக வளப்பற்றாக்குறையே இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக் குத் தடங்கல்களாக உள்ளது எனவும் அதிபர் தெரிவித்தார்.

மேலும் க.பொ.த.உயர்தர வகுப்பில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கற்க விரும்பும் மாணவர்கள் உடனடியாகத் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(க-500)

## தேவையறிந்து உதவி...



நல்லவரின் உதவிகள்: கிளிநொச்சிக்கு வருகை தந்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத் துணைச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக் விவசாயி ஒருவருக்கு நீரிறைக்கும் இயந்திரத்தை வழங்குகிறார். (6)

# மின்சாரம் வழங்குவதற்கான செலவைத் தாம் ஏற்பதாக முல்லைத்தீவு கிராம மக்கள் தெரிவிப்பு

## வாக்குறுதிகளால் ஏமாந்ததாகவும் தகவல்

முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமக்கு மின்சாரம் வழங்குவதற்கான செலவு முழுவதையும் செலுத்துவதற்குத் தாம் தயாராயுள்ளதாகக் கூறியதாகத் தெரியவருகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கற்சிலைமடு, பேராறு, முத்துஐயன்கட்டு, பண்டாரவன்னி, சாளம்பன், கனக இரத்தினபுரம், மன்னாகண்டல், கெருடமடு, தட்டையர்மலை ஆகிய கிராமங்களில் 10 இக்கும் மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழும் மக்களுக்கு அவர்கள் மீள்குடியமர்ந்து இரு வருடங்கள் கழிந்த நிலையிலும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் மண்ணெண்ணெய் விளக்குகளின் ஒளியிலேயே இவர்கள் இரவைக் கழிக்கின்றனர்.

தற்போது வீசுகின்ற காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாது இவை அணைந்துவிடுவதால் மக்கள் படும் துன்பங்கள் சொல்லி மாளாதவை. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இரவில் தடைப்பட்டுள்ளன. மேலும் இரவு வேளைகளில் மிருகங்கள், திருடர்கள் போன்றோரை எதிர்கொள்வதிலும் அச்ச நிலை தோன்றியுள்ளது.

ஏற்கனவே இங்கு வருகை தந்த அமைச்சர்களும், அரசியல்வாதிகளும், தொண்டு நிறுவனத்தினரும் இந்தப் பகுதிகளுக்கு மின்சாரத்தை விரைவில் கொண்டு வருவோமென உறுதி கூறிச் சென்றுள்ளனர். ஆனால் உறுதி மொழிகள் யாவும் வெறும் வாய்வார்த்தைகளாகவே நின்று போயுள்ளன. மின்சாரம் தான்இதுவரை கிடைக்கவில்லையென இந்தப் பகுதி மக்கள் விரக்தி வெளியிட்டுள்ளனர்.

ஆகவே நாம் இனியும் இவர்களை நம்பியிராது மின்சாரம் வழங்குவதற்கான செலவு முழுவதையும் செலுத்துவதற்குத் தயாராகவுள்ளோம். இனி மேலாவது உரிய அதிகாரிகள் எமக்கு மின்சாரம் வழங்க முன் வருவார்களா என இவர்கள் வினா எழும்பியுள்ளதாகத் தெரியவருகின்றது.

(க-500)

# கடல் மார்க்கமாக வெளிநாடு செல்லுதல்; விசேட கூட்டமொன்று மன்னார் செயலகத்தில்

மன்னார், மே 23

தடை செய்யப்பட்டுள்ள கடல் மார்க்கமாக வெளிநாடு செல்வதால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான விசேட கூட்டமொன்று மன்னாரில் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 25 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் மாவட்டச் செயலக மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் கடல் மார்க்கமாக வெளிநாடு செல்வதற்குப் பலர் முயற்சி செய்கின்றனர். இதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதுடன் பலர் நிர்க்கதியான நிலையில் வெளிநாடுகளிலுள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது இத்தகைய கடல் பிரயாணங்களை மேற்கொள்வதற்காகத் தமது சொத்துக்களை விற்றும், கடனாகப் பெற்றும் ஏராளமான பணத்தைச் செலவிடுகின்றனர்.

கடைசியில் பணத்தை இழப்பதோடு தமது நோக்கத்தை அடையாமல் இடைநடுவில் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இவற்றைத் தவிர்ப்பது தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் ஏற்பாடாகியுள்ளது. இந்தக் கூட்டத்தில் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர், குற்றத் தடுப்பு புலனாய்வுத்துறை உயர் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்திலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் தலைவர் என்.எம். ஆலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23 மே 2011 திங்கட்கிழமை

# புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்களை பொருத்தமான பாடசாலைகளுக்கு அனுப்புக

## மாகாணசபை உறுப்பினர் அரவிந்தகுமார் வலியுறுத்து

பதுளை,மே 23

ஆசிரியர் நியமனம் பெறும் 34 தமிழ் டிப்ளோமா பட்டதாரிகளை பொருத்தமான பாடசாலைகளில் சேவையில் ஈடுபடுத்துமாறு ஊவா மாகாணசபை உறுப்பினர் அ.அரவிந்குமார் ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அனில் விஜயசிங்கவை மகஜர் மூலம் கோரியுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் இந்த ஆசிரிய நியமனம் தொடர்பில் மாகாண ஆளுநர் சி.நந்தாமத்தியூ, கல்வி அமைச்சர் மஞ்சுல குணவர்தன, மாகாண முதலமைச்சரும், கல்வியமைச்சருமான சசிந்திர ராஜபக்ஷ, மாகாணக் கல்விப் பணிப்பாளர் பியதாச ரட்நாயக்க ஆகியோருக்கும் இந்த மகஜரின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாளை செவ்வாய்க்கிழமை கல்வியியற் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய நூற்றுக்கணக்கான டிப்ளோமா பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்படவுள்ளன.

அவர்களில் பதுளையைச் சேர்ந்த 85 டிப்ளோமா பட்டதாரிகளும் உள்ளடங்குகின்றனர். நான்கு வருடங்களுக்கு முன்பு இந்த மாவட்டத்தின் 600 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. அதன் பின்பு சிறிய எண்ணிக்கையினருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

தற்போது பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேறிய 32 தமிழ் டிப்ளோமா பட்டதாரிகளுக்கும், கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து வெளியேறிய 2 டிப்ளோமா பட்டதாரிகளுக்கும் நியம னங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் இன்னும் சுமார் 300 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகிறது.

எனவே, தற்போது புதிதாக இணைத்துக் கொள்ளப்படும் 34 ஆசிரியர்களையும் மிகவும் அதிகமாக ஆசிரியர் பற்றக்குறை நிலவும் பாடசாலைகளுக்கே நியமனம் செய்ய வேண்டும்.

அதைவிடுத்து பொருத்தமில்லாத பாடசாலைகளில் இவர்களை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தகுந்த பணிப்புரைகளை வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)



மட்டக்களப்பு, கொம்மாதுறை விபுலானந்த அறநெறிப் பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை திருஞானசம்பந்தரின் குருபூசை நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கலந்துகொண்டு மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குகின்றார். (ச)

# பதுளையில் 3 கடைகள் தீக்கிரை

பதுளை,மே23

பதுளை நகரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஏற்பட்ட திடீர் தீ விபத்தின் காரணமாக மூன்று கடைகள் எரிந்து நாசமாகியுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதன்போது இரண்டு புடைவைக் கடைகளும், ஒரு பாதணிக் கடையும் இவ்வாறு தீயினால் எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. பதுளை மாநகரசபை தீயணைப்புப் படையினர் விரைந்து தீயினை கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளனர். (ச)

# மண்சரிவு ஏற்படும் அபாயம்; பதினைந்து குடும்பங்கள் அவதி

வெலிமடை பிரதேசத்திலுள்ள தியத்தலாவை நகரில் ஐந்தாம் கட்டைப் பிரதேசம் மண்சரிவிற்கு இலக்காகும் அபாயம் உள்ளது என வெலிமடை பிரதேச செயலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்தப் பிரதேசத்தில் பதினைந்து குடும்பங்களைச் சேர்ந்த சுமார் இருநூறுக்கு மேற்பட்ட மக்கள் வாழும் நிலையில் அவர்களுக்கான மாற்றீட்டுக் காணிகளோ, நட்ட ஈடோ இன்னும் வழங்கப்படாதது குறித்து விசனமும் அதிருப்தியும் தெரிவிக்கப்படுகின்றது.

திடீரென பிரதேச செயலாளர் அலுவலகத்திலிருந்துவரும் அதிகாரிகள் மழை காலங்களுக்கு முன்னர் வேறு இடங்களுக்குச் செல்லுமாறு வற்புறுத்தி வருகின்றனர் . இதனால் தாம் பெரும் சிரமத்திற்கு முகம் கொடுத்துள்ளனர் என்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (ச)

இடம்மாற்றம்

கர்னிகா ஜுவல் ஹவுஸ்

இதுவரை காலமும் இல.05, யாழ்.வீதி, கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கி வந்த எமது ஜுவல் ஹவுஸ் தற்போது முல்லை வீதி, புளியடிச்சந்தி, விஸ்வமடு எனும் முகவரியில் செயற்பட்டு வருகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.



உரிமையாளர்: வி.கந்தசாமி, தொ.பே: 0770687743

(48,19,50)

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha — 2011.05.20

அலுவலக முடிவுகள் — சீட்டிழுப்பு இல 2395

வெற்றி எழுத்து: K — வெற்றி எண்கள்: 1 8 6 8 4 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K | 1 | 8 | 6 | 8 | 4 | 2 | ரூபா.10,337,507/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 1 | 8 | 6 | 8 | 4 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 8 | 6 | 8 | 4 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 6 | 8 | 4 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 129 |
| 4 பரிசுகள் | | | | | 8 | 4 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1286 |
| 5 பரிசுகள் | | | | | | 4 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 12811 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 126152 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 1 | 8 | 6 | 8 | 4 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 1 | 8 | 6 | 8 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 119 |
| 9 பரிசுகள் | | 1 | 8 | 6 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1289 |
| 10 பரிசுகள் | | 1 | 8 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12595 |
| 11 பரிசுகள் | K | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 50560 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,698,990.00

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2142 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

யா/மானி. மகளிர் கல்லூரியின் உபஅதிபர்

திரு.விஜயரட்ணம் கலைநேசன் அவர்களின் மணிவிழா



திரு.விஜயரட்ணம் கலைநேசன்
(உபஅதிபர்)
(B.Sc, Dip.in Ed. Sp.Trd. (Maths) S.L.T.S-I

சேவை விவரம்

| | |
|---|---|
| ★ அ/தல்ஹகவெவ மு.வி.றம்பாவெவ | 1972.03.22- 1973.05.20 |
| ★ யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி | 1973.05.21- 1973.09.17 |
| ★ யா/கைதடி நுணாவில் G.T.M.S | 1973.09.18- 1978.01.08 |
| ★ யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | 1978.01.09- 1979.12.31 |
| ★ மட்/மெதடிஸ்ற் மத்திய கல்லூரி | 1980.01.01- 1980.01.31 |
| ★ க/சரஸ்வதி ம.வி புசல்லாவ | 1980.02.01- 1980.06.31 |
| ★ யா/இணுவில் இந்துக்கல்லூரி (தற்காலிகம்) | 1980.07.01- 1981.12.31 |
| ★ க/சரஸ்வதி ம.வி புசல்லாவ | 1982.01.01- 1983.06.15 |
| ★ கதிரேசன் குமார ம.வி நாவலப்பிட்டி | 1983.06.16- 1984.08.17 |
| ★ களு/அளுத்கம ஆசிரிய பயிற்சிக்கல்லூரி (விரிவுரையாளர் கணிதம்) | 1984.08.18- 1989.03.31 |
| ★ யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி | 1989.04.01-1989.05.14 |
| ★ யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி | 1989.05.15- 2007.07.31 |
| ★ யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி (உப அதிபர்) | 2007.08.01- 2011.05.22 |

அதிபரின் உள்ளத்திலிருந்து....

எங்கள் கல்லூரி வரலாற்றில் முத்திரை பதித்த கணிதத்துறை ஆசிரியரும் உப அதிபருமாகிய வி.கலைநேசன் அவர்கள் 22வருடகாலம் எமது கல்லூரியில் அரும்பணியாற்றி இன்று ஓய்வுபெறுகின்றார். இவர் எம் கல்லூரியின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறைகொண்டு செயற்பட்டவர். கற்றல்-கற்பித்தல் மேற்பார்வை, பரீட்சை ஒழுங்கு, மாணவர் நண்பகல் உணவு ஒழுங்கு, ஆசிரியர் சம்பளம், சிற்றூழியர் வேலை மேற்பார்வை போன்ற பாடசாலையின் முக்கிய கடமைகளைப் பொறுப்பேற்று மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி அலுவலக முகாமைத்துவத்துக்குப் பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளார். உயர்தர மாணவருக்கு இணைந்த கணிதப்பாடத்தைக் கற்பிப்பதில் மிகுந்த ஆற்றல் மிக்கவராகப் பாராட்டுப் பெற்றவர். பொறுமை, தன்னடக்கம், சகிப்புத்தன்மை போன்ற சிறந்த குணாதிசயங்கள் பொருந்திய இவரது ஒத்துழைப்பு இன்று மானி.மகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும்பங்களிப்பாற்றியுள்ளது. ஓய்வு நிலையிலும் இவரது பணி மானி.மகளிரில் தொடர வேண்டி அவரது எதிர்கால நல் வாழ்வுக்கு கல்லூரியின் தெய்வமான முருகப்பெருமானை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

திருமதி S.ஜெயவீரசிங்கம்,
அதிபர்.
மகளிர் கல்லூரி, மானிப்பாய்.

2011.05.23 அன்று தனது 60ஆவது அகவையில் ஓய்வுபெறும் எமது உபஅதிபரும், கணித ஆசானுமாகிய விஜயரட்ணம் கலைநேசன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர் கழகம், மாணவர்கள்.

(49,20,21)-(சி/139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் அரசு மூடுமந்திரமாக இருப்பது ஏன்? மனோ

நுவரெலியா,மே23

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் அரசின் நிலைப்பாடு வழமைப்போல் இந்த முறையும் மூடுமந்திரமாக இருக்கின்றது.

தொழிற்சங்கங்களையும், முதலாளிமார்களையும் பேசவிட்டுப் கடைசி நேரத்தில் இதுதான் சம்பளம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று இரகசிய உத்தரவு போடும் திட்டத்தில் அரசுஇருக்கின்றதா? தோட்டத் தொழிலாளர்களுக்கு நிபந்தனையற்ற அடிப்படை சம்பளம் 500 ரூபா என்ற நிலைப்பாட்டை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதா? ஆகிய கேள்விகளுக்கான விடைகளை அரசுக்கு ஆதரவளிக்கும் தொழிற்சங்கங்கள் அரசிடம் கேட்டுச் சொல்ல வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

அவிசாவளை பென்றித் தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது, மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மாற்று நாட்டு பிரஜைகளோ அல்லது மாற்றாந் தாய்ப் பிள்ளைகளோ அல்லர்.

அவர்கள் இந்தநாட்டின் முழுமையான பிரஜைகள். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை தொழிற்சங்கங்களும், முதலாளிமாரும் பேச்சு நடத்திச் சம்பளத்தை தீர்மானிக்கும் கூட்டு ஒப்பந்த நடைமுறை இலங்கை அரசிற்கு வசதியாக



அமைந்துள்ளது. தோட்டத்தொழிலாளர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்படுமா? என்ற அச்சம் தோட்டத் தொழிலாளர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ளது. எனவே இன்றைய விலைவாசி உயர்வுச் சூழலில் குறைந்தப்பட்ச அடிப்படை சம்பளமாக 500 ரூபாய் தோட்டத்தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டும்- என்றார். (ச)

# சாதகமான பதில் கிடைக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைதான் வழி

நுவரெலியா,மே23

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக, முதலாளிமார் சம்மேளனத்துடனான பேச்சில் நாளை செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் சாதகமான பெறுபேறு கிடைக்காவிட்டால், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியன தெரிவித்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் முத்துசிவலிங்கம் இது தொடர்பாக செய்தியாளர் மாநாடொன்றில் கூறுகையில், தொழிலாளர்களின் நாள் சம்பளம் குறித்து சாதகமான பதில் கிடைக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள நேரிடலாம்.

தொழிற்சங்கங்கள் சமர்ப்பித்த யோசனைகளை பெருந்தோட்டத்துறையிலுள்ள 21 கம்பனிகள் பரிசீலிக்க வேண்டியிருப்பதால், மேலும் இருநாள் அவகாசம் தேவையென முதலாளிமார் சம்மேளனம் கோரியுள்ளது- என்றார். (ச)


# மறைத்து வைத்திருந்த துப்பாக்கி மீட்பு

மட்டக்களப்பு,மே 23

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கும்புறுமூலைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் துப்பாக்கி, ரவைகள் என்பவற்றை கண்டெடுத்துள்ளதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.எம்.பி.ஜய வீர தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்துதே இந்தப் பிரதேசத்தைச் சோதனையிட்டபோது இந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.எம்.பி.ஜயவீர தெரிவித்துள்ளார். (ச)

## புதிய கட்டடம்...



அக்கரைப்பற்றில் புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச ஸ்தாபனத்தின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட பல்தேவைக் கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்தநிகழ்வில் புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரிசாட் டென்சிகர், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன், ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தவிசாளர் க. இரத்தினவேல் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

# எதிர்பார்க்கப்படும் நிதி கிடைத்ததும் இராஜகோபுரப் பணி ஆரம்பமாகும்

## திருக்கோணேஸ்வராலய சபை தெரிவிப்பு

திருகோணமலை, மே 23

திருக்கோணேஸ்வராலயத்துக்கு இராஜகோபுரம் நிர்மாணிக்கும் திருப்பணி ஆரம்ப செலவீனத்திற்கு எதிர்பார்க்கப்படும் நிதி கிடைத்தவுடன் அந்தப்பணி ஆரம்பமாகும்.

தற்போது இராஜ கோபுர நிதிக்காகச் சேகரிக்கப்பட்ட பணம் 58 லட்சத்து 14 ஆயிரத்து 359 ரூபா 61 சதம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருக்கிறது என்று ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது.

இதற்கான நிதி சேகரிக்கும் பணி தொடர்ந்து மூன்று மாதங்களாகப் பெய்தமழையாலும், அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து வந்த ஆலயத் திருவிழாக்களாலும் மேற்கொள்ளப் படவில்லை. மீண்டும் தற்போது நிதி சேகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் பரிபாலனசபை தெரிவித்துள்ளது.

நிதி சேகரிப்புப் பணி திருகோணமலை நகரின் 10,11,12ஆம் வட்டாரங்களில் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மேற்கொள்ளப் படவுள்ளது . திருகோணமலை நகரின் ஒன்று தொடக்கம் 8 வட்டாரங்களில் ஏற்கனவே பொதுமக்களிடமிருந்து நிதி சேகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நன்னீர் மீன்குஞ்சு அபிவிருத்தித் திட்டம் மக்களிடம் கையளிப்பு

அம்பாறை,மே 23

சாகாமம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறியளவிலான நன்நீர் மீன்குஞ்சு அபிவிருத்தித் திட்டத்தினை அந்தப் பிரதேச மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

அம்பாறை மாவட்டத்துக்கான சமூக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தினால் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. சாகாமம் பிரதேசத்திலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்துக்காக சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தைக் கையளிக்கும் நிகழ்வில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரி, புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச)

# மட்டக்களப்பில் தொடர்ச்சியான சுற்றிவளைப்பு; அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான உபாயமா?

மட்டக்களப்பு, மே 23

மட்டக்களப்பில் இடம்பெறும் தொடர்ச்சியான சுற்றிவளைப்புத் தேடுதலானது அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான நடவடிக்கையே என மக்கள் அஞ்சுகின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கிழக்கில் படையினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை பற்றி கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்ற இரு வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இராணுவமும் பொலிஸாரும் திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக மட்டக்களப்பு நகரப் பகுதியில் அடிக்கடி இவ்வாறான சுற்றிவளைப்பு தேடுதல் இடம்பெறுகின்றன. நேற்றுமுன்தினம் காலையும் நகரப்பகுதியில் சுற்றிவளைப்பு தேடுதல் இடம்பெற்றன.

அடிக்கடி மேற்கொள்ளப்படும் இவ்வாறான இராணுவ நடவடிக்கையினால் மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளதுடன், அவர்களின் அன்றாட நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக மக்களை மென்மேலும் அச்சத்துக்குள்ளாக்கி அவர்களின் அன்றாட வாழ்க்கையையும் பாதிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச)

# கிழக்கில் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும்; ஆயுதப் போராட்டம் என்ன பயன் தந்தது?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் கிழக்கு முதலமைச்சர்

மட்டக்களப்பு,மே 23

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியைக் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும், கிழக்கு மாகாண முதலமைச்சர் என்றவகையில் தனக்கும் உள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

கடந்த தேர்தல் காலங்களிலும் அபிவிருத்தி தொடர்பான பல வாக்குறுதிகளை கிழக்கு மாகாண மக்களுக்கு வழங்கி வந்துள்ளேன். அதை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் எனக்குள்ளது.

இலங்கை வரலாற்றில் தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப்பட்ட சாத்வீகப் போராட்டம் எந்தளவுக்கு தாக்கம் செலுத்தியிருந்தது என்பதையும் அதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஆயுதப் போராட்டம் எந்தப் பயனையும் தந்ததாக அமையவில்லை என்பதையும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையில் அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டங்களைக் கொண்டு செல்ல வேண்டும்.

எமது அலுவலகம் சோதனையிட முயற்சிக்கப்பட்டமையை சில அரசியல்வாதிகள் எமது கட்சியின் ஒரு தனிப்பட்ட விடயமாகப் பார்க்க முயல்கின்றனர். அத்துடன் சேறுபூசும் சம்பவமாகவும் விளக்கம் கொடுக்க முயல்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பு இவ்வாறான பல விடயங்களில் எனக்கு ஆக்கபூர்வமான திருப்தியையும் தெளிவையும் தந்துள்ளது- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23 மே 2011 திங்கட்கிழமை

# சம்பள முரண்பாட்டை நீக்க ஜனாதிபதியுடன் இன்று பேச்சு; கலந்து கொள்வதில்லை என்கிறது பேராசிரியர் ஒன்றியம்

கொழும்பு, மே 23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுக்களில் கலந்து கொள்ளப் போவதில்லை என பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் நிலவும் சம்பள முரண்பாடுகளைத் நீக்குவது தொடர்பிலான பேச்சு ஒன்றை ஜனாதிபதி ஏற்பாடு செய்துள்ளார். எனினும், இந்தப் பேச்சுக்களில் தமது ஒன்றியத்தின் உறுப்பினர்கள் பங்கேற்கப் போவதில்லை எனப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தெவசிறி தெரிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள இந்தப் பேச்சில் கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமது சங்கத்தில் அங்கம் வகிக்கும் விரிவுரையாளர்கள் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ச)

# போக்குவரத்துத் துறையின் பலவீனம்; அரசுக்குரிய வருமானம் வீணாகும் நிலை

கொழும்பு, மே 23

போக்குவரத்துத்துறையின் பலவீனம் காரணமாக அரசுக்குக் கிடைக்க வேண்டிய 50 சதவீத வருமானம் வீணாகிப் போகின்றது என இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கை அடுத்தவாரம் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் இயங்கி வரும் அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதால் அரசுக்கு வரவேண்டிய வருமானத்தில் 50 சதவீதம் விரயமாகிவிடுகிறது.

மக்கள் மாற்றுப் போக்குவரத்து வசதிகளை மேற்கொள்வதும், இந்த வருமான இழப்புக்குக் காரணமாகும். இதன் காரணமாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் சாலைப் போக்குவரத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## பார்வையிடல்...



வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை அமெரிக்காவிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை வந்த அவரது மகள் அபர்ணா, பொன்சேகா மனைவி அனோமா பொன் சேகா ஆகியோர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பார்வையிட்டனர். (ச)

# பொலிஸ் இறப்பர் முத்திரையை போலியாகத் தயாரித்த சட்டத்தரணி

கொழும்பு, மே 23

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தின் உத்தியோக பூர்வ முத்திரையை திருட்டுத்தனமாக தயார் செய்து அதன்மூலம் போலி ஆவணங்களைத் தயாரித்து பண மோசடி செய்தார் என்ற சந்தேகத்தின்பேரில் வழக்கு தொடரப்பட்டுள்ள பெண் சட்டத்தரணி ஒருவர் தொடர்பான வழக்கு விசாரணை கடந்த திங்கட்கிழமை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரான சட்டத்தரணி பொலிஸ் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையை போலியாகத் தயாரித்துள்ளார் என குருந்துவத்தை பொலிஸார் நீதிவான் ரஷ்மி சிங்கப்புலியிடம் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்ட உத்தரவின் பிரகாரம் இந்தச் சட்டத்தரணியின் அலுவலகம் சோதனையிடப்பட்ட போதே இந்தப் போலி இறப்பர் முத்திரை கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ச)

# தனியார் மருந்தகத்தில் கப்பம் வசூலித்த மூவர் கைது

கொழும்பு, மே 23

தனியார் மருந்தகமொன்றில் 20 லட்சம் ரூபா கப்பம் பெற்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு குற்றப்புலனாய்வுத் துறைக்கு வந்த முறைப்பாடொன்றை அடுத்து கல்கிஸைப் பொலிஸ் பிரிவின் குற்றத் தடுப்பு பிரிவினரால் சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளையில் கைது செய்யப்பட்ட இவர்கள் மொரட்டுவை மற்றும் கட்டுபெத்தைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் கல்கிஸை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ச)

# ஆடை உற்பத்தியை புறக்கணிக்கும் ஆர்ப்பாட்டம்; புலம்பெயர் தமிழர்களால் விரைவில் ஏற்பாடு

கொழும்பு, மே 23

இலங்கையின் ஆடை உற்பத்திகளைப் புறக்கணிக்கும் ஆர்ப்பாட்டமொன்றை புலம் பெயர் தமிழர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

தமிழ்த் தேசியத் துக்க நாளின் இரண்டாவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் பிரிட்டனில் இருந்து இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் ஆடை உற்பத்திகளைக் கொள்வனவு செய்யும் பிரதான நிறுவனங்களான கெப் டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் மற்றும் மார்க் அண்ட் ஸ்பென்சர் நிறுவனங்களின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கையானது சிறுபான்மை இன மக்களைப் புறக்கணித்தல், போர்க்குற்றங்களை இழைத்த ஒரு நாடு ஆகிய குற்றச்சாட்டுகளை முன்வைத்து அதனடிப்படையில் இலங்கையின் ஆடை உற்பத்திகளைப் புறக்கணிக்குமாறு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# போலி நாணயத்தாள் வைத்திருந்த 4 பேர் கைது

கொழும்பு, மே 23

போலி நாணயத்தாள்களையும், போலி நாணயத்தாள் செய்வதற்கான சாதனங்களையும் வைத்திருந்த நால்வர் பொத்துவில் பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த முற்றுகை நடவடிக்கையின்போது இரு ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள், ஆயிரம் ரூபா நாணயத்தாள் வடிமைக்கப்பட்ட கடதாசி, கணினி போன்றன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் பொத்துவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இலங்கை- இந்திய கூட்டறிக்கையை கடுமையாகக் கண்டிக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, மே 23

இந்திய அரசின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தியுள்ள இலங்கை - இந்திய கூட்டறிக்கையைக் கண்டிக்கின்றோம் - என்று இலங்கை - இந்திய கூட்டறிக்கை தொடர்பாக ஜே.வி.பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெளிவவிகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இந்தியாவுக்கு பயணம் செய்து கடந்த 17ஆம் திகதி அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடன் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டார். இந்தக் கூட்டறிக்கை மூலம் இலங்கை மீதான இந்திய மேலாதிக்கம் மேலும் வலுப்பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளவே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு பயணம் செய்தார் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இதுவிடயம் தொடர்பாக எந்த இடத்திலும் கூறப்படவில்லை. தனக்கு ஏற்ற வகையில் இந்தியா அந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது. பொருளாதார மற்றும் பாதுகாப்பு விடயங்களில் இலங்கையை முழுமையாக பயன்படுத்தும் வகை [illegible] துறைமுகம், ரயில், கடற்றொழில் ஆகிய துறைகள் மற்றும் சீபா உடன்படிக்கை, மின் சக்தி துறை, பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம், யாப்பு திருத்தம் ஆகியவற்றிற்கு ஆதரவளித்து அரசியலிலும் இந்தியாவின் தேவைக்கேற்ப ராஜபக்ஷ அரசு ஒத்துழைத்து வருகிறது.

யுத்தம் முடிந்து இரண்டு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணம் இன்னும் வழங்கப்படவில்லை. பொறுப்புகளிலிருந்தும், கடமைகளில் இருந்தும் அரசு நழுவுகிறது.

இதன். பின்விளைவுகளை மக்களே அனுபவிக்க நேரிடும். எனவே நாட்டின் இறைமையை, பொருளாதாரத்தை இந்தியாவுக்கு பலி கொடுக்கும் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக ஒன்று திரளுவோம்.

-இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திய வைகாசிப் பெரு விழாவின்போது அ.ஜெயராமன் பக்க வாத்தியங்கள் சகிதம் வயலின் இசைக் கச்சேரி நிகழ்த்துகிறார். (236)

# மாணவரிடையே சமய உணர்வு அருகுவது அனைவருக்கும் வேதனை தரும் விடயமாகும்

## காரைநகர் பிரதேச கலாசார அலுவலர் தெரிவிப்பு

காரைநகர்,மே23

தற்காலத்தில் மாணவர்கள் மத்தியில் சமயப் பற்றும், சமய உணர்வும், சைவசமயப் பழக்க வழக்கங்களும் குன்றி வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

மாணவர்கள் மத்தியில் சமய உணர்வையும், சமயப்பற்றையும் வளர்ப்பதற்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் கிராமங்களில் உள்ள ஆலயங்களிலும் பஜனை வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பஜனை வழிபாடுகளில் மாணவர்கள் பங்குபற்றுவதன் மூலம் அவர்களிடையே சமய உணர்வு, சமயப் பற்று என்பன ஏற்படும்.

இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் பிரதேச செயலக கலாசார அலுவலர் நா.சோமாஸ்கந்த சர்மா.

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பௌர்ணமி தின பஜனை காரைநகர் பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாணவர்கள் ஆலயங்களுக்குக்குச் செல்வது, தேவாரத் திருமுறைகளைப் பாராயணம் செய்வது சைவசமய ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வழிவகுக்கும்.

அவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய கடமையும் பொறுக்கும் ஆலயங்களுக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் உரியது.

இவ்வாறான பஜனை வழிபாடுகளை ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஆலயங்களில் நடத்தி சமயப்பற்றுள்ள சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

இன்று ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக்களில் பெரியவர்களே பெருமளவில் கலந்துகொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இன்றைய தலைமுறையினர் ஆத்மீக நாட்டம் கொண்டு ஆலயங்களுக்குச் சென்று திருவிழாக்களிலும், பூசை வழிபாடுகளிலும் கலந்துகொள்ளவேண்டும்.

ஆலய விழாக்களிலும் வழிபாடுகளிலும் கலந்துகொள்வதன் ஊடாக மன அமைதியையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பஜனை நிகழ்வின் மூலம் நாம் தெய்வப் பாக்களை மீண்டும் மீண்டும் உச்சரித்துச் சேர்ந்து பத்தி பூர்வமாக மனதை ஒரு நிலைப்படுத்திப் பாடுவதன் மூலம் எம் மனதில் பத்திப் பரவசமும் இறை உணர்வும் ஆன்ம திருப்தியும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.-என்றார்.

இந்த நிகழ்வை நெறிப்படுத்திய காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய அதிபர் திருமதி சி.சந்திரராசா உரையாற்றுகையில்:

இதுபோன்ற நிகழ்வுகள் மாணவர்கள் மத்தியில் தேவை. மாணவர்களை நல்வழிப்படுத்தவும், சமயப்பற்றை மேம்படுத்தவும், சமய உணர்வைத் தூண்டவும் வழிவகுக்கும்.

இன்றைய தலைமுறையினரிடையே அமைதியின்மை, நம்பிக்கையின்மை போன்றன காணப்படுகின்றன. இவ்வாறான நிகழ்வுகள் ஊடாக இவர்களிடத்தே ஆன்மீன நாட்டத்தை ஏற்படுத்த முடியும்.-என்றார்.

(ம-250)

# சமய வாழ்வு பற்றிய விழிப்புணர்வை ஊட்ட நாயன்மார்களின் குருபூசை தினங்கள் உதவும்

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர்

யாழ்ப்பாணம், மே 23

இளைய சமுதாயத்தினர் மத்தியில் சமய வாழ்வு பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவதற்கு சமயத்துக்காகச் சேவையாற்றிய நாயன்மார்களின் குருபூசை தினங்கள் உதவுகின்றன.

தற்போதைய கால கட்டத்தில் அறம், தர்மத்துடன் கூடிய வாழ்க்கைமுறை குறைந்து செல்கின்றது. இவற்றை நிலைபெறச் செய்ய வேண்டுமானால் நாயன்மார்களின் குருபூசை தினங்களில் அவர்களின் வாழ்க்கை முறைகளை இளைய சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுவது சிறந்த வழியாகும்.

இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை.

வலி.கிழக்கு சைவசமய அருள் நெறி மன்றமும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து சிறுப்பிட்டி வடக்கு இலுப்பையடி முத்துமாரி அம்மன் கோயில் மண்டபத்தில் நடத்திய திருஞானசம்பந்தர் குருபூசை தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

சைவத்தையும் தமிழையும் வாழவைத்த மகான்களில் நாயன்மார்களும் அடங்குவர். அவர்களில் திருஞானசம்பந்தரும் அளப்பரிய சேவைகளைவழங்கியுள்ளார்.

சைவத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட காலத்தில் கோயில் கோயிலாகச் சென்று இறைவனினதும் சமயத்தினதும் பெருமைகளைப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறியது மட்டுமல்லாமல் மக்களும் அதன் வழி பின்பற்றி நடப்பதற்கும் வழி வகுத்தனர்.

இன்றைய வாழ்க்கை முறைகள், ஏற்பட்டுள்ள சூழல்கள் சைவசமயத்தினரின் வாழ்க்கை முறையைப் பெரிதும் பாதிப்படையச் செய்வதாக உள்ளது.

இவற்றில் இருந்து மக்கள் மீண்டெழுவதற்கு விழிப்புணர்வு அடையக்கூடிய வாழ்க்கை முறைகள் அவசியமாகும்.

இதற்காக நாயன்மார்களின் குருபூசை தினங்களை விழாக்களாக எடுத்துக் கொண்டால் அவர்கள் காட்டிய வழிமுறைகள், கூறிச் சென்ற நல்ல கருத் துக்கள் எம்மை நல்வழிப்படுத்தும். எனவே இவ்வாறான விழாக் களை நடத்துவதற்குச் சமயம் சார்ந்த நிறுவனங்கள், திணைக் களங்கள் முடிந்தளவு இவ்வா றான சேவைகளை வழங்க முன்வர வேண்டும்- என்றார். (ம-313)

# உடுவில் கோட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள்

உடுவில் கோட்டத்தில் நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

விவரங்கள் வருமாறு:

தரம்-6

மகேந்திரன் ஐந்தூரன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), உதயகுமார் கிருஷாந் (ஸ்கந்தவரோதய கல்லூரி), சந்திரமோகன் மாறன் (இணுவில் மத்திய கல்லூரி), துவஸ்ரா குகதாசன் (உடுவில் மகளிர் கல்லூரி), பிறேமினி அமுதலிங்கம் (உடுவில் மகளிர் கல்லூரி).

தரம்-7

சாருகா திருலிங்கம் (உடுவில் மகளிர் கல்லூரி), கிருசாளினி இராமசந்திரன் (உடுவில் மகளிர் கல்லூரி), குணபாலா டிலக்ஷன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), புவனேஸ்வரன் நிரோஸ்கண்ணா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), கஜேந்திரன் துஷந்தன் (இணுவில் மத்திய கல்லூரி).

தரம்-8

லோகிதா ரவிக்குமார் (ஸ்கந்த வரோதய கல்லூரி), கேசிதா தனஞ்சயன் (உடுவில் மகளிர் கல்லூரி), கயழினி சிவச்சந்திரன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), சௌமினி செல்வக் குமார் (இணுவில் மத்திய கல்லூரி), சற்குணராசா அஜிந்தன் (தாவடி இ.த.க. பாடசாலை),

தரம் 9

தட்சஜா உதயகுமார் (உடுவில் மகளிர் கல்லூரி), திலக்சனா பாலேந்திரா (இராமநாதன் கல்லூரி), பகீரதன் காண்டீபன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), காருண்யா குணரட்ணம் (உடு வில் மகளிர் கல்லூரி), சிவராசா நிலாஜினி (இராமநாதன் கல்லூரி),

தரம்-10

செல்வராசா பிருதனா (ஸ்கந்தவரோதய கல்லூரி), தேனுஜா சிவபாலச்சந்திரன் (உடுவில் மகளிர் கல்லூரி), சிவாஜி ஆரமுதன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), பீரணவி சச்சிதானந்தம் (உடுவில் மகளிர் கல்லூரி), மேனகா திருமாறன் (இணுவில் மத்திய கல்லூரி), பாலகுமார் பாலஸ்வன் (இணுவில் மத்திய கல்லூரி), விமலாம்பிகைபாகன் திவாகரன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), திருவருட் செல்வம் சுதேசன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), யதுஷா சண்முகானந்தன் (உடுவில் மகளிர் கல்லூரி), பிரியங்கா அருள்வதனன் (உடுவில் மகளிர் கல்லூரி).

(ம-55)

# விஞ்ஞானப் போட்டி

வடமராட்சி, மே 23

வடமராட்சி வலயக் கோட்ட மட்ட சமூக விஞ்ஞானப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கோட்ட மட்டப் போட்டிகள் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், கரவெட்டி கோட்ட மட்டப் போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன.

(ம-236)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், மே 23

யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் மூத்த விநாயகர் சன சமூக நிலையம், ஆசிர்வாதப்பர் வீதி சுகாதார மையம் ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை நாயன்மார் வீதி சுகாதார மையம், யாக்கோவா பாலர் பாடசாலை ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெயிலுகந்தபிள்ளையார் கோயிலடி செம்மணி வீதி, கடுக்காய் வீதி ஆகிய இடங் களிலும் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை செட்டியார் தோட்டம், விவசாயக் கந்தோர் லேன் ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 31ஆம திகதி செவ்வாய்க்கிழமை ஜமுனா வீதி சுகாதார மையம், சங்கிலியன் மன்றம் ஆகிய இடங்களிலும் நடைபெறும்.

இந்தத் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு குறிப்பிட்ட நாள்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரையும் இடம்பெறவுள்ளதால் வளர்ப்பு நாய்களுக்குரிய தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர்.

(ம-313)

# சாராயம் விற்றவருக்கு அபராதம் விதிப்பு

நெல்லியடி, மே 23

அனுமதியின்றி அரச சாராயத்தை விற்பனை செய்த நபர் கரவெட்டிப் பகுதியில் வைத்து நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இவர் சாராயத்தை விற்பனை செய்து கொண்டிருந்தபோது அப்பகுதியில் கடமையில் ஈடுபட்ட நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இவர் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் இவருக்குக் குற்றப் பணமாக 5 ஆயிரம் ரூபா அபராதம் தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்**
சாதாரணமாக செய்த காரியம் ஒன்று உங்களுக்குப் பாராட்டைத் தேடித் தரலாம். கணவன் மனைவி ஆலோசனை செய்து உறவினர்கள் தொடர்பான விடயங்களில் முடிவெடுக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப் படைக்க முடியாமல் நீங்களே செய்ய வேண்டிய வேலைகளால் அவதிப்படலாம். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:**
முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். பக்தி நாட்டம் அதிகரிக்கும். ஒன்று மில்லாத விடயத்திற்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். நண்பர்கள், உறவினர்கள் சிலருடன் முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். பழகிய நண்பர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**மிதுனம்:**
அலைச்சல், திரிச்சல்களைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலரின் பிடிவாத குணங்களைக் கண்டு கடும் கோபம் கொள்வீர்கள். திட்டமிட்ட காரியங்களில் எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். சிலரை சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம்.

**கடகம்:**
ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலைகளைச் செய்யலாம். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவீர்கள். நண் பர்களுடன் சேர்ந்து எதிர்காலம் தொடர்பான வேலை ஒன்றில் ஈடுபட நேரிடலாம். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும்.

**சிங்கம்:**
சிறிய விடயத்திற்கு சிலர் உங்களிடம் கோபித்துக் கொள் ளலாம். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு ஒன்று வராமல், எதிர்பாராத பணவரவு கிடைக்கலாம். குடும்ப விடயங்களில் பெரியவர்களின் தலையீட்டால் பிரச்சினை உண்டாகலாம்.

**கன்னி:**
கோபம், வேகத்தை குறைத்து நிதானமாகச் செயற்பட வேண்டிய நாள். நண்பர்கள் சிலர் சொல்லும் அறிவுரைகளை கேட்க நேரிடலாம். தாய் வழியில் உருவான தொல்லைகள் குறையும். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்ற பணத்தை தண்ணீராகச் செலவு செய்வீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் போன்றவற்றைத் தவிர்க்கவும்.

**துலாம்:**
வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். திட்டமிட்ட ஒரு காரியத்தைச் செயற்படுத்த முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். சில பிரச்சினைகளை நினைத்து பதற்றம் அடைவீர்கள். சிலர் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிக்கலாம்.

**விருச்சிகம்:**
மற்றவர்கள் மதிக்கும் வகையில் நடந்து கொள்வீர்கள். செலவுகளில் சிக்கனம் காட்டுவீர்கள். நண்பர்கள் சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். என்ன ஆகுமோ என சந்தேகப்பட்ட காரியம் ஒன்று நல்ல விதமாக முடிவுக்கு வரும். பல நாள்களாக சந்திக்காத ஒருவரை திடீரென சந்திக்கலாம். உற்சாகம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:**
நண்பர் ஒருவரிடம் கடுமையாகப் பேச நேரிடலாம். மாற்று மதத்தினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். பெரிய அளவில் திட்டமிட்ட காரியம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். சிலரிடம் உல்லாசமாகப் பேசி உங்களின் பெருமையை வெளிப்படுத்துவீர்கள். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படலாம்.

**மகரம்:**
சுபச் செலவுகள் அதிகரிக்கலாம். பெண்களால் சந் தோஷமான அனுபவங்களைப் பெறலாம். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்ட உடன் பிறப்புக்கள் நட்பாக நடந்து கொள்வர். பிரபலங்களின் சந்திப்பு நிகழ வாய்ப்பு உண்டு. சில விடயங்களில் துணிச்சலாக முடிவெடுக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுவீர்கள்.

**கும்பம்:**
எதிலும் குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து நேர்மை நாணயமாகச் செயற்பட வேண்டிய நாள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். சிலரின் வருகையை எதிர்பார்த்து வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.

**மீனம்:**
கவனக் குறைவைத் தவிர்த்து எதிலும் நுண்ணறி வோடு செயற்படும் நாள். கடுமையான அலைச்சலை உண்டாக்கலாம் என நினைத்த காரியம் ஒன்று எளிதில் முடிவுக்கு வரும். உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். இனம் புரியாத சந்தோஷம் மனதில் குடிகொள்ளும் நாள். நீண்ட தூர பயணங்கள் செல்ல திட்டம் போடுவீர்கள்.

# எதிரியும் துரோகியும்





தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் எவருக்குமே இலங்கைப் பிரச்சினையில் உண்மையான அக்கறை இல்லை. எல்லோரும் தங்கள் தங்கள் சொந்த இலாபங்களுக்காகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பயன் படுத்துகின்றனர் என பி.பி.சி. தமிழோசை யின் தமிழ்நாட்டு நிருபர் டி.என்.கோபாலன் 1999 ஆம் ஆண்டு கூறினார். இதற்கு உதாரணமாக இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கையைச் சேர்ந்த படகோட்டிகள் இராமேஸ் வரத்துக்கு அண்மையில் மணல் திட்டில் இறக்கி விட்டு வந்தபோது அகதிகள் மரணமான சம்பவத்தைக் குறிப்பிட்டார். இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவர்களாகக் கூறிக் கொள்ளும் வைகோ, நெடுமாறன் உட்பட எவருமே இந்த உயிரிழந்த அகதிகளுக்காகக் குரல் கொடுக்க வில்லையென டி.என்.கோபாலன் தமிழோசையில் குறிப்பிட்டார்.

டி.என்.கோபாலனின் கூற்றை நிரூபிப்பது போல் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் அமைந்தன.

வைகோ, நெடுமாறன் போன்ற அரசியல்வாதிகள் புலிகளிடம் பணம் வாங்கிக் கொண்டே தமிழீழத்தை யும் புலிகளையும் ஆதரித்துப் பேசுவதாகப் புலி எதிர்ப்பாளர்கள் கூறி வந்தனர்.

கருணாநிதி எப்போதும் தன்னை ஒரு தமிழீழ ஆதர வாளனாகக் காட்டி வந்தார். ஆனால் ஜெயலலிதா எப்போதும் கடும்புலி எதிர்ப்பாளராகச் செயற்பட்டு வந்தார். புலிகளின் கொலைப்பட்டியலில் தனது பெயரும் உள்ளதாக ஜெயலலிதா கூறியதையடுத்து ஜெயலலிதாவுக்கு கறுப்புப் பூனைகளின் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

ஜெயலலிதா புலிப்பூச்சாண்டி காட்டியதை தமிழக சஞ்சிகைகள் கிண்டலடிக்கத்தவறவில்லை. வன்னி யில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது என்று ஜெயலலிதா அறிக்கை விட்டார்.

ஆனால் கருணாநிதியோ தான் தான் தமிழ் மொழி யையும் உலகத் தமிழர்களையும் மீட்க வந்த இரட்சகர் என்று தன்னைக் காட்டிக் கொண்டு தனது குடும் பத்தைப் பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்தும் (ஊழல்) நடவடிக்கைகளில் ஈடுபட்டார். ஈழத்தமிழர்களும் பல சந்தர்ப்பங்களில் கருணாநிதியை உலகத் தமிழர்களின் தலைவன் என வர்ணித்தனர்.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையி லிருந்து திரும்பிச் சென்றபோது இலங்கையில் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த இந்திய இராணு வத்தை வரவேற்பதற்குத்தான் செல்லமாட்டேன் என்று தன்து தமிழ் உணர்வை வெளிப்படுத்தியவர் கருணா நிதி. இதுமட்டுமன்றி புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கொல்லப் பட்ட போது தமிழ்ச்செல்வனுக்காக இரங்கற்பாவும் பாடித் தனது தமிழர் பற்றை வெளிப்படுத்தியவர் கருணாநிதி.

இவ்வாறெல்லாம் செய்துகாட்டிய தமிழ் உணர்

**கருணாநிதி எப்போதும் தன்னை ஒரு தமிழீழ ஆதரவாளனாகக் காட்டி வந்தார். ஆனால் ஜெயலலிதா எப்போதும் கடும் புலி எதிர்ப்பாளராகச் செயற்பட்டு வந்தார்.**

வாளன் கருணாநிதியால் தாம் கூட்டுச் சேர்ந்திருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சியாளர்களை வலியுறுத்தி இலங்கையில் போர் நிறுத்தத்தைக் கொண்டு வரவோ, முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களைப் பாதுகாக்கவோ முடியவில்லை. போதாக் குறைக்கு இலங்கைத் தமிழர்களுக்காகப் பரிந்து பேசிய சீமானையும் உள்ளே தள்ளினார்.

இறுதிவரை புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டு வந்த ஜெயலலிதா இந்த மாதம் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலின் போது திடீரென இலங்கைத் தமிழர்களின் மீது ஏற்பட்ட 'இரக்கம்' காரணமாகத் தமிழ் ஈழத்தை தாம் ஆதரிப்பதாகத் தேர்தல் பிரசாரம் செய்தார்.

இப்பொழுது செல்வி ஜெயலலிதா தமிழக முதல்வ ராகப் பதவியேற்றுள்ளார்.

எதிரியை விட துரோகிகள் ஆபத்தானவர்கள் என்று கூறு வார்கள் . ஜெயலலிதா இலங்கைத் தமிழர்களின் எதிரி

**ந.பரமேஸ்வரன்**

யாகவே இதுவரை காலமும் செயற்பட்டு வந்துள்ள

ஆனால் ஈழத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்தி எனக் கருதப்பட்ட கருணாநிதி இலங்கைத் தமி களுக்குத் துரோகமிழைத்துவிட்டார்.

செல்வி ஜெயலலிதாவின் முன்னைய ஆட் காலத்தில் அவரை 'இரும்புப் பெண்மணி' எனப் பத் கைகள் வர்ணித்தன.

துரோகியின் ஆட்சி முடிவடைந்து இனி எதிரிய ஆட்சி ஆரம்பமாகப் போகிறது. மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என கூறிய ஜெயலலிதா தாம் தமிழகத்தின் முதல் கதிரையில் அமர்ந்துள்ள நிலையில் அதை வலியுறுத்தும் போக்கு அவரிடம் காணப்படவில்லை

இவ்வாறான நிலையில் ஈழத்தமிழர்கள் விடயத் ஜெயலலிதா அம்மையார் என்ன செய்யப்போகி என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கடந்து நயினாதீவுக்கும் வடக்கின் வசந்தம் வீசுமா...?

நயினை நாகபூஷணி அம்மன் கோயில், நாக தீப ரஜமகாவிகாரை போன்ற புகழ்பெற்ற வழிபாட்டுத் தலங்கள் அமைந்ததும் சுற்றுலாப் பயணிகளின் மையமாக விளங்குவதும் நயினாதீவு என்பது யாவரும் அறிந்ததே.

இங்கு அரச தலைவர்களில் இருந்து சாதாரண பொதுமக்கள் என்று நாள்தோறும் வருகை தரும் மக்களின் எண்ணிக்கை கணக்கிட முடியாத ஒன்று.

இந்தப் பெருமை பெறுதீவில் அடிப்படை வசதிகளான மின்சாரமும் பேருந்து சேவையும் அண்மைக் காலமாக மக்களுக்குப் பெரும் அசௌகரியத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

இங்கு சேவையில் ஈடுபடும் பேருந்தானது கொண்டுவரப்பட்டுப் பல வருடங்கள் ஆகிவிட்டது. இதனால் இந்தப் பேருந்து அடிக்கடிப் பழுதுபடுவதும் உடைவதும் தினசரிச் செயற்பாடுகளாகிவிட்டன. சில வேளைகளில் பேருந்து திருத்தப்பட்டாலும் அதற்குரிய டீசல் ஒழுங்கு முறையின்றி வழங்குவதால் சேவை தடைப்படுவதும் மட்டுப்படுத்தப்படுவதும் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆரம்பத்தில் பன்னிரண்டு தடவைகள் நடத்தப்பட்டுவந்த பேருந்துச் சேவை தற்போது நான்கு தடவைகள் கூட ஒழுங்காக நடைபெறுவதில்லை.

ஜனாதிபதி வருகை தந்தபோது கூட இந்தப் பேருந்து பழுதடைந்த நிலையில் தள்ளப்பட்டு அம்மன் ஆலயப் பின் வீதிக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலை ஏற்பட்டமை வேதனையைத் தருகின்றது. இந்தப் பேருந்தை மாற்றிப் புதிய பேருந்தைத் தருமாறு கோரப்பட்டு இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள் தொடக்கம் அரசியல் தலைமைகள் வரைக்கும் அனுப்பப்பட்ட மகஜருக்குப் பல வருடமாகியும் இதுவரைக்கும் பதிலும் இல்லை; பலனும் இல்லை.

மின்சாரத்தைப் பொறுத்தவரை இங்கு இருக்கும் இரு மின் பிறப்பாக்கிகளும் அடிக்கடி பழுதடைவதும் திருத்த வேலைக்காகக் கொண்டு செல்லப்படுவதும் இயல்பான செயற்பாடுகளாகி விட்டன. அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதும் ஒழுங்குமுறையற்று வழங்கப்படுவதும் மின் பாவனையாளர்கள் மத்தியில் பெரும் அசௌகரியத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மின்சாரசபை அதிகாரிகள், அரச அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் என முறையிட்டு இதுவரையும் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

நயினாதீவுக்குச் சுற்றுலாவுக்கு மட்டும் வருவதை நோக்கமாகக் கொள்ளாது இங்குள்ள மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுள் முக்கியமானதான மின்சாரம், பேருந்து ஆகியவற்றின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அரச தலைவர்களையும் அரச அதிகாரிகளையும் நயினாதீவு மக்கள் கேட்கின்றார்.

## தருமபாலன், நயினாதீவு

தற்போது யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் அபிவிருத்திப் பணிகள் யாழ்.மாவட்டத்தில் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் என்று அபிவிருத்திகள் நடக்கின்ற நிலையில் நயினாதீவுக்கான அபிவிருத்தி எனும் திட்டம் எப்போது ஆரம்பமாகும் என்று மக்கள் கேட்கின்றனர்.

அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும்போது பாரபட்சம் காட்டாமையே சிறந்ததாகும். எனினும் நயினாதீவின் அபிவிருத்தியில் அங்குள்ள மக்களின் நிலையில் அதிகாரிகள் கவனம் எடுக்காமை வருத்தமளிக்கிறது என்று மக்கள் கூறுகின்றனர். ✱



# அனுசரித்துப் போவது எப்படி?



சிலபேரைப் பற்றி இப்படிக் கூறுவதுண்டு. ''அடுத்த வர்களை அனுசரித்து நடந்து கொள்ளத் தெரியவில்லையே என்ன மனிதன்? என்று. சக மனிதர்களோடு எப்படிப் பழகுவது என்று தெரியாத தனால்தான் பலபேர் இன்றைக்கு சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வசதி வாய்ப்புக்கள் சரியாக அமைந்து இருக்கும். ஆனால் வாழ்க்கை என்பது அவர்களுக்குச் சரியாக அமைந்து இருக்காது. இன்னொருத்தரிடம் எப்படிப் பேசுவது, பழகுவது என்பது தெரியாததினால்தான் இந்த அவஸ்தை. இந்த அவஸ்தையிலிருந்து விலகி எப்படி வாழ்வது? இதற்காக அனுபவசாலிகள் பலர் சில வழிமுறைகளைச் சொல்கிறார்கள்.

முதலில் எமது நாக்கை அடக்கவேண்டும். வார்த்தைகளைஅவசரப்பட்டுக் கொட்டிவிட்டு அள்ளமுடியாமல் கஸ்ரப்படக் கூடாது. எப்படிப் பேசவேண்டும் என்பதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அன்பாகப் பேசும் போது ஆதரவாக அவர் தோள் மேல் ஒரு கையைப் போட்டுப் பேசினாலும் நன்றாக இருக்கும்.

அடுத்து இன்னொருத்தருடன் பேசும்போது வாக்குறுதிகளை அள்ளிவீசக் கூடாது. கொடுக்கிற வாக்குறுதிகள் குறைவாக இருக்கவேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். நாம் ஒருத்தரைத் பாராட்டும்போதோ அல்லது அவரைப் பற்றி அபிப்பிராயம் சொல்லும்போதோ அது ஆக்கபூர்வமாக இருக்கவேண்டும். எமது பாராட்டு அல்லது விமர்சனம் அடுத்தவருடைய முன்னேற்றத்துக்கு உதவும் வகையில் அமைய வேண்டும். நாம் சொல்வதைக் கேட்டுவிட்டு அவன் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்காரக் கூடாது. எப்போதும் உற்சாகமாக இருக்கவேண்டும். முகத்தை மலர்ச்சியாக வைத்திருக்கவேண்டும். மனிதனாகப் பிறந்தால் வருத்தம்- கவலை- ஏமாற்றம் எல்லாம் இருக்கத்தான் செய்யும். அவையெல்லாம் மனதில் இருக்கட்டும். அவற்றை வெளியில் காட்டி நாமும் வருத்தப்பட்டு மற்றவர்களையும் வருத்தப்பட வைக்கக் கூடாது.

எந்த விஷயத்தைப் பற்றி யாரிடம் பேசினாலும் வெளிப்படையாகப் பேசவேண்டும். திறந்த மனதுடன் பேச வேண்டும். மூடி மறைத்து மென்று விழுங்கிவிடக் கூடாது. இன்னொருத்தரிடம் பேசுகின்ற போது விவாதம் செய்வது தப்பு இல்லை. ஆனால் வதாடிக்கொள்ள முயற்சிக்காதீர்கள்.

நம்மிடம் இருக்கிற நல்ல குணங்களை நாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. அந்த நல்ல குணங்களே எம்மைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டும். அதே மாதிரி மற்றவர்களிடம் உள்ள கெட்ட குணங்களைப் பற்றியும் அவசியமில்லாமல் நாம் பேச வேண்டியதில்லை. உங்களைப் பற்றி யாராவது தப்பாகப் பேசுகிறார்களா? அப்படி அவர்கள் பேசுவதில் உண்மை இல்லையானால் அந்த விஷயத்தை நீங்கள் பொருட்படுத்தாமல் அப்படியே விட்டு விடுங்கள். அது தானாக மறைந்து காலப்போக்கில் இல்லாமல் போய்விடும்.

நாலைந்து பேரோடு பேசிக் கொண்டிருந்தால் எல்லோருடைய பேச்சுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். யாரையும் அலட்சியப்படுத்தாதீர்கள். வேடிக்கையாகப் பேசுங்கள். ஆனால் அந்த வேடிக்கைப் பேச்சு அடுத்தவர்களை கேலி செய்வதாக இருக்கக்கூடாது. எமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லையே என்ற தவிப்பு எம்மிடம் இருக்கக் கூடாது. உங்கள் செயற்பாடுகள் தெளிவாக இருக்கட்டும். பாராட்டுத் தானாகத் தேடிவரும்.

இன்னொரு மனிதனுடைய மனதில் கௌரமான ஓர் இடத்தைப் பிடிக்கவேண்டும் என்றால் நாம் இந்தக் குணத்தை எல்லாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருத்தர் ''அடுத்தவர்களின் தோள் மீது கையைப்போட்டு அன்பாகப் பேசவேண்டும் என்று சொன்னீர்களே; நானும் அப்படித்தான் நான் பேசினேன்; அவர் முதுகைக்கூடத் தட்டிக் கொடுத்தேன். ஆனால் என் வேலை போய்விட்டது. வீட்டுக்கு அனுப்பி விட்டார்'' என்றார்.

''யாரிடம் அப்படிப் பேசினீர்கள்? என்று கேட்டதற்கு, ''என் முதலாளியிடம் '' என்றார் மிகவும் சோகமாக.


எந்த இடத்தில் எப்படி நடந்துகொள்ளவது என்று தெரியாதவர்களுக்கு மற்றவர்களை அனுசரித்துப் போவது கஷ்டமாகத்தான் இருக்கும். மற்றவர்களுடன் தாம் ஒத்துப் போகின்றோம் என்று நினைத்துச் செய்யும் செயல்களும் முடிவில் அவர்களுக்குப் பாதகமாகவே அமையும்.


கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒறைக்கஸ்

-ராஜன்





முன்னொரு காலத்தில் ஆபிரிக்கா முழுவதும் வாழ்ந்த ஒறைக்கஸ் மிருகங்களில் மூன்று வகை காணப்பட்டன. தற்போது இவற்றுள் ஒரு சிலவே வனாந்தரங்களில் உயிர் வாழ்ந்து வருகின்றன.

இந்த மிருகங்கள் வரண்ட நீர் அதிகம் காணப்படாத இடங்களிலேயே வசித்து வருகின்றன. இவற்றால் நீர் அருந்தாமல் பல வாரங்கள் வாழமுடியும். இவற்றின் தோல் சூரிய ஒளியின் தாக்கத்திலிருந்து இவற்றைப் பாதுகாக்கின்றன. இதனால் இந்த மிருகங்களால் சூரிய வெப்பத்துக்கு ஈடுகொடுக்க முடிகின்றது.

ஒறைக்காஸ் மிருகத்துக்கு இயல்பாகவே அகன்ற காற் குழம்புகள் காணப்படுவதால் இவை நடந்து செல்லும் போது மணலில் கால்கள் புதையாதவாறு பாதுகாக்கின்றன. சிலவேளை சிங்கமொன்று இவற்றைத் தாக்க முற்படும் போது இவை தமது கொம்புகளால் அதனைத் தாக்கும் ஏனென்றால் இவற்றின் கொம்புகள் மிகவும் கூர்மையானவை. இவை ஒரு மீற்றர் நீளத்துக்கு மேல் வளரக் கூடியன.

ஒறைக்கஸ் ஆண் மிருகங்கள் பெண் ஒறைக்கஸுடன் இணைசேரும் காலங்களில் ஒன்றுடன் ஒன்று சண்டையிடுகின்றன. இவை முறையாகச் சண்டையிடுமாயின் ஒன்றை யொன்று கொல்லக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்படும். இதனால் சில விதிமுறைகளின் கீழேயே இவை போரிடுகின்றன. இதன் பிரகாரம் தமது கொம்புகளை உபயோகிக்காமல் ஒன்றையொன்று தள்ளியபடி சண்டையிடுகின்றன.

இவற்றின் செயற்பாடுகள் மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றன. அடர்ந்த புதர்களிலுள்ள புல் வகைகளை இவை பாலை வனங்களிலேயே தேடியுண்ணுவதோடு தசைப்பிடிப்புள்ள நிலத்தின் கீழ் காணப்படும் வேர்களையும் நிலத்தைத் தோண்டி வெளியே எடுத்து உண்ணுகின்றன. நாகதாளி மரத்தில் காணப்படும் ஈரப்பதம் இவற்றின் தாகத்தைத் தணிக்க வல்லது. அங்கு வரட்சி காணப்பட்டால் நிலத்தைத் தோண்டி நீரைப் பெறுகின்றன.

ஒருவகை ஸிமிடர் ஒறைக்கஸ் மிருகங்களுக்கு மிக நீண்ட கொம்புகள் காணப்படும். இவற்றின் நீளம் 1.3 மீற்றருக்கும் மேல் இருக்கும். இவை முன்பு வட ஆபிரிக்காவில் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. இவை இலகுவாக மனிதர்களுடன் பழகக் கூடியன. புராதன எகிப்தியர்கள் இவற்றைப் பழக்கி மந்தைகளில் அடைத்து வளர்த்து வந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்தவகை மிருகங்கள் வகைதொகையின்றி வேட்டையாடப்பட்டன. இதனால் இவை முற்றாக அழியும் நிலையும் ஏற்பட்டது.

இன்னொரு ரேபியன் ஒறைக்கஸ் மிருகங்கள் பாலைவனங்களில் வாழ்வதற்கு மிகவும் ஒத்தவை. இவை உருவத்தில் சிறியன. அமைதியான சுபாவம் கொண்டவை. இவை மிக நீண்ட தூரத்துக்குக் களைப்பின்றி நடந்து செல்லக் கூடியவை. இவற்றின் மேற்றோல் மிகவும் தடிப்பாகக் காணப்படுவதால் இரவில் நிலவும் கடும் குளிரில் இருந்து இவற்றைப் பாதுகாக்கின்றன.

## உங்களுக்குத் தெரியுமா?

1. உலகம் முழுவதும் 2700 வகையான மொழிகள் பேசப்படுகின்றன.
2. உலகப் புகழ்பெற்ற டைட்டானிக் கப்பல் 45000 தொன்கள் எடை உடையது.
3. உலகம் முழுவதும் ஒரு வருடத்தில் சுமார் 13000 பூகம்பங்கள் நிகழ்ந்துள்ளன.
4. 4000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து நாட்டில் பூனைகளைக் கொல்வோருக்கு மரண தண்டனை விதிக்கும் வழக்கம் இருந்தது.
5. உலகின் மிக ஆழமான ஏரி ரஷ்யாவிலுள்ள பைக்கால் ஏரி. இது சுமார் 45000 அடிகள் ஆழமுடையது.

இராஜ்தனபால்.

## பரிபாலன அலகுகளும் பொறுப்பான அதிகாரிகளும்

★ நாடு-ஜனாதிபதி
★ மாகாணம்-ஆளுநர்
★ மாவட்டம்-அரச அதிபர்
★ பிரதேசம்-பிரதேச செயலர்
★ கிராமம்-கிராம சேவையாளர்
★ பரீட்சைத் திணைக்களம்-ஆணையாளர்
★ அஞ்சல் திணைக்களம்-தபால்மா அதிபர்
★ பல்கலைக்கழகம்-துணைவேந்தர்
★ வங்கி-முகாமையாளர்

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## குருவிப் பாடல்



பறந்து செல்லும் குருவியாரே
கொஞ்சம் இங்கே நில்!
அருகில் வந்து எனக்கு
அன்பு முத்தம் தா!

உண்ணப் பழமும் நெல்லும்
தருவேன் உனக்கு நான்
அன்பு காட்டித் தினமும்
அரவணைப்பேன் உன்னை

அஞ்சாமல் நீ பறந்து வா
அணைத்து மகிழ அருகே வா!
எண்ணம் போல் எழுந்து வா
இனிக்கும் பாட்டுப் பாடிவா!

எஸ். அன்னதாரகை,
1 ஆம் வருடம்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

## பூனை பிரபு

[தொடர்ச்சி...]



முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்து. நீண்ட நேரம் வெளியிலேயே காத்திருந்தது. வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்பு அடைந்தது.

''பன்றி, ஓநாய், கரடி மூன்றும் என்னை இங்கே அனுப்பியுள்ளன. நால்வரும் சேர்ந்து விருந்துக்கு ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்காகவே இந்த விருந்து; நீங்களும் பூனைப் பிரபுவும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்'' என்றது முயல். ''நல்லது நான் விருந்துக்கு வருகிறேன். பூனைப் பிரபுவும் என்னுடன் வருவார். நாங்கள் வரும் போது நீங்கள் நால்வரும் எங்காவது ஒளிந்து கொள்ளுங்கள் பூனைப் பிரபு உங்களைப் பார்த்தால் நீங்கள் செத்தீர்கள். விருந்து எங்கே நடக்கிறது?'' என்று கேட்டது நரி. இடத்தைச் சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தது முயல். தன் நண்பர்களைச் சந்தித்து நடந்ததைச் சொன்னது அது. பயந்து போன நான்கும் என்ன செய்வது என்று சிந்தித்தன.

''நான் அந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன்'' என்றது கரடி. ''அந்தப் புதரில் நான் ஒளிந்து கொள்கிறேன்'' என்றது ஓநாய். ''உன் அருகிலேயே நானும் பதுங்கிக் கொள்கிறேன்'' என்றது முயல் ''அடர்ந்த அந்த மரங்களுக்குப் பின்னால் நான் மறைந்து கொள்கிறேன்'' என்றது பன்றி. பூனைப் பிரபுவும் நரியும் வரும் ஓசை கேட்டது. நான்கும் பதுங்கிக் கொண்டன. பலவிதமான உணவுப் பொருள்களைப் பார்த்த பூனைக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ''மியாவ், மியாவ்'' என்று கத்திக் கொண்டே சாப்பிடத் தொடங்கியது.

புதரில் இருந்த ஓநாய், ''எவ்வளவு பயங்கரமான விலங்கு? என்ன கொடூரமான குரல்? சாப்பிடும் வேகத்தைப் பார்த்தால் நம் விருந்து அதற்குப் போதாது. நம்மையும் கொன்று தின்றுவிடும் போல இருக்கிறது'' என்றது. ''ஆமாம்'' என்று நடுங்கிக் கொண்டே சொன்னது முயல்.

மரத்தில் இருந்த கரடியும் மறைந்து இருந்த பன்றியும் நடுங்கின. பூனை விருந்தை வயிறார உண்ட பின் மேடையின் மேல் படுத்துத் தூங்கத் தொடங்கியது. மரத்தின் மறைவில் பதுங்கி இருந்த பன்றியின் வாலைக் கொசு ஒன்று கடித்தது. உடனே பன்றி தன் வாலை அசைத்தது. சத்தம் கேட்டு விழித்தது பூனை. பன்றியின் வாலை எலி என்று தவறாக நினைத்த அது ''மாட்டிக் கொண்டாயா?'' என்று கத்திக் கொண்டே எலியைப் பிடிக்கப் பாய்ந்தது. நேராகப் பன்றியின் முகத்தில் போய் மோதியது.

எதிர்பாராமல் நடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது பன்றி அங்கிருந்து ''தப்பித்தேன்'' என்று கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தது. பன்றியைக் கண்டு பயந்த பூனை ஒரே பாய்ச்சலில் அருகில் இருந்த மரத்தில் ஏறியது. அங்கிருந்த கரடி தன்னைத்தான் பூனைப் பிரபு கொல்ல வருகிறார் என்று பயந்து விரைந்து மரத்தின் உச்சிக் கிளைக்குச் சென்றது. அதன் எடை தாங்காமல் கிளை முறிந்து புதரில் மறைந்திருந்த ஓநாயின் மேல் விழுந்தது அது. அலறி அடித்துக் கொண்டு ஓநாயும் ஓட்டம் பிடித்தது. முயலும் அதைத் தொடர்ந்து ஓடியது. வலியைத் தாங்கிக் கொண்டு ''தப்பித்தோம் பிழைத்தோம்'' என்று கரடியும் ஓடியது. நீண்ட நேரத்திற்குப் பிறகு நான்கும் சந்தித்தன. ''பூனைப் பிரபு பார்ப்பதற்குச் சிறியவராக இருக்கிறார். நம் நால்வரையும் கொன்று தின்றிருப்பார். நல்லவேளை தப்பித்தோம்'' என்றது கரடி. மற்ற மூன்றும் ''ஆமாம்'' என்றன. அதன் பிறகு பூனைப் பிரபுவின் வழிக்கே அவை செல்லவில்லை.

[முற்றும்]

## இப்படியும் ஓர் எண்ணம்...




திறமை:
சங்கானை
பட்டபிளை
சர்வதேச
பாடசாலையில்
நடைபெற்ற
விளையாட்டுப்
போட்டியின்
போது
பின்லேடனாகப்
பார்வையா
ளர்களைக்
கவர்ந்த சிறுவன்.
(7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு அடியவர்களின் வழிபாட்டுக்காக தோற்றம்பெற்ற ஸ்ரீவேங்கடேசப் பெருமாள்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதையும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதையும் சைவசமயம் உணர்த்தி நிற்பதற்குச் சான்றாக கிராமங்கள், நகரங்கள் தோறும் அதிகளவான ஆலயங்களைக் கொண்ட நகரமாக யாழ்.நகரம் விளங்குகின்றது.


அந்த வகையில் சிவன், முருகன், அம்மன், வைரவர், பிள்ளையார் என அவரவர் இஸ்ட தெய்வங்களை வேண்டி பெரியவர்களின் ஆசிகளுடன் உருவாக்கப்பட்ட ஆலயங்களே இன்று மிகவும் பிரசித்தம் பெற்று விளங்குகின்றன.

காத்தற் கடவுளாம் விஷ்ணுவின் அடியவர்களுக்கு அருள் கிடைக்க வேண்டும் எனும் நோக்கத்துடன் யாழ். வண்ணையம் பகுதியில் உருவாக்கப் பட்டதே வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயம்.

யாழ்.குடாநாட்டின் வண்ணையம் பதியின் மையப்பகுதியில் தென்கிழக்காக மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ளது இந்த ஆலயம்.

வண்ணையம் பதியில் நெசவுத் தொழிலை மேற்கொண்டு வந்த வைசியக் குலத் தோன்றலாகிய பத்ம சாலிச் செட்டிகள் தமது வைணவ வழிபாட்டைப் பேணுவதற்கு 14 ஆம் நூற்றாண்டு காலத்தில் வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஆலயத்தைத் தோற்றுவித்தார்.

ஆலயத்தினர் ,ஸ்தாபகர்கள் வைசிய குலத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் தமது இஸ்ட தெய்வமாகிய வேங்க



டேசப் பெருமாளுக்கு ஆலயம் அமைக்க வேண்டும் எனும் நோக்குடன் இந்த ஆலயத்தை உருவாக்கினர்.

அதனைத் தொடர்ந்து 17 ஆம் நூற்றாண்டில் வசதி படைத்தவர்கள் சிலரின் நிதியுதவியும் இந்த ஆலயத்துக்குக் கிடைத்தது. இதனால் ஆலயத்தின் நித்திய பூசைகள் யாவும் சிறப்பாக நடைபெற்றன.

கி.பி 18 , 19 ஆம் நூற்றாண்டு காலங்களில் ஆலயத்துக்கென வரவு, செலவுத்திட்டம் திட்டமிடப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால் ஆலயத்துக்கான செலவுத் திட்டம் கணிக்கப்பட்டது. இந்த நிதியின் மூலம் நவக்கிரக் கோயில் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மஹோற்சவங்களும்இடம் பெற ஆரம்பித்தன. மஹோற்சவ காலங்களின் உற்சவ காலங்களுக் குத் தேவையான செலவுக்குப் புரட்டாதி மாதத்தில் இடம் பெறும் வருவாய் மூலம் கிடைக்கும் நிதியினைப் பயன் படுத்தினர்.

18 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் "நவக்கிரக மண்டபம்" ஸ்தாபிக்கப் பட்டது. ஏனைய ஆலயங்களை விட இந்த ஆலயத்தின் நவக்கிரக மண்டபம் அமைப்பு மிகவும் வேறுபட்டதாகும்.

சிறியளவான ஆலயமாக இருந்த இந்த ஆலயத்தை விஸ்தரிக்கும் நோக்கில் வைசிய குலத்தினர் தமது காணிகளை ஆலயத்துக்காகத் தருமசாசனம் செய்தனர்.

காணிகளை மட்டுமல்லாது தமது உழைப்பில் குறிப்பிட்ட ஒரு தொகையினை ஆலயத்தின் வளர்ச்சிக்காக வழங்கியுள்ளனர் என அந்தக்கால ஆலயக் குறிப்பேடுகள் கூறுகின்றன.

கி.பி 1810 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த சாகித்தியரின் முயற்சியினால் மூன்று காலப் பூசைகள் தினமும் இடம் பெறத் தொடங்கின.

இவர்கள் ஆலயத்துக்காகச் செய்த பணிகள் மேலும் விரிவடையத் தொடங்கின. அந்த வகையில் 1810 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மடப்பள்ளி, களஞ்சிய அறை போன்றன அமைக்கப்பட்டன. அத்துடன் 1820 ஆம் ஆண்டு ஒரு சிறப்பான கும்பாபிஷேகத்தை நடத்தியதாக குறிப்பேடுகள் கூறுகின்றன.

அதனைத் தொடர்ந்து கி.பி 1840 ஆம் ஆண்டளவில் ஸ்ரீ மஹாலக்சுமி சந்நிதி நவக்கிரக பீடம் உட்பிரகாரச் சுற்றுமதில் முதலானவை கட்டப் பட்டன. (தொடரும்)

**சோபனா**

# இளம் சமூகத்தினரின் வாசிப்புத் திறனை மேன்மையடையச் செய்த யாழ்.பொதுநூலகம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

அச்சுவேலியைச் சேர்ந்த க.மு.செல்லப்பாவின் சிந்தனையில் யாழ்ப்பாணத்தில் பெரிய நூலகம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாகியது. அதனைத் தொடர்ந்து கந்தர்மடத்தில் இயங்கி வந்த முதல் நூற்றுவர் என்னும் இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் உதவியுடன் வீடுகள் தோறும் நூல்கள் சேகரிக்கும் பணி ஆரம்பமானது.

அவர் திரட்டிய 1184 ரூபா 22 சதம் முதல் மூலதனமானது.

அதேவேளை செல்லப்பா அச்சுவேலியிலிருந்து யாழ். நகரப் பகுதியில் லங்காஹோம் இல்லத்தில் குடியேறி 11.12.1933 ஆம் நாளில் நூலக அபிவிருத்தி, அமைவிடத் தேவை, பங்களிப்பு தொடர்பாக உருக்கமான அறிக்கையை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டார்.

அந்த அறிக்கைக்கு அமைய 09.06.1934 ஆம் நாள் யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் குடா நாட்டின் அறிவாளிகள், பெரியவர்கள், துறைசார் தலைவர்கள், தொழில் அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள், பொதுச்சேவையாளர்கள் எனப் பலரும் ஒன்று கூடி கருத்துக்களைப் பரிமாறினார்கள்.

கூட்ட இறுதியில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த சீ. குமாரசாமியை தலைவராகவும், கலாநிதி வண.ஐசாக் தம்பையா, உபதலைவராகவும் அரியாலையைச் சேர்ந்த சட்டத்தரணி சீ.பொன்னம்பலம், க.மு. செல்லப்பா ஆகியோர் இணைச்செயலாளராகவும் கல்விமானான அருள்நந்தி மற்றும் கல்லூரி அதிபர்கள் உள்ளடங்கிய 27 உறுப்பினர் கொண்ட 'யாழ்ப்பாணம் மத்திய இலவச தமிழ் நூற்கழகம்' என்னும் அமைப்பு உருவாகியது. அங்கத்தவர்களாக 278 பேர் இணைந்தனர்.

தெரிவு செய்யப்பட்ட பேராளர்களினால் நூல் நிலையத்தை ஆரம்பிப்பதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டதுடன் பொது மக்களிடம் நிதி சேகரித்தல், சந்தா வசூலித்தல் போன்ற ஏற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. இந்த முயற்சிக்கு கைமேல் பலன் கிடைத்ததின் விளைவாக யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வாடகைக் கட்டடமொன்றில் 01.08.1934 ஆம் திகதி நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

படிப்பகத்துடன் கூடிய இலவச இரவல் நூல் வழங்கும் சேவையும் ஆரம்பிக்கப்பட்டது. 834 நூல்கள், 18 நூல்கள், 18 தமிழ், 13 ஆங்கில 02 சிங்கள தினசரி, வார, மாதப் பத்திரிகைகளையும் கொண்டிருந்தது. நூல் நிலைய முகாமையாளராக ஓய்வுபெற்ற யாழ். மேல் நீதிமன்ற பதிவாளர் ஆர்.சி. சட்டத்தரணி பிரதம நூலகராக எஸ். இராஜரட்ணமும், உதவி நூலகராக பி.ஜே.ஜோர்ஜும் நிர்வாக அமைப்பினால் நியமிக்கப்பட்டனர். இவர்களது கடுமையான உழைப்பால் நூலகச் செயற்பாடுகள் வளர்ச்சிப் பாதையில் அடிபதித்து முன்னேறின.

முற்போக்குச் சிந்தனை கொண்ட பெரியோர்களினால் நடத்தப்பட்டு வந்த நூலகம் ஒரு கட்டமைப்பு நிர்வாக அலகிற்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்ற சிந்தனைக்கு அமைய யாழ். நகரசபையிடம் ஒப்படைக்க முடிவானது. செயலாளர் செல்லப்பா வினால் நகரசபைக்கு உத்தியோகபூர்வமாக தீர்மானம் அறிவிக்கப்பட்டது. அவ்வேளை நகர அபிவிருத்திச் சபை உறுப்பினராகச் செயற்பட்ட ஆர். சுப்பிரமணியம் இலவச நூற்கழக நூலகத்தை வரவேற்றதுடன் நகரசபைக்கும்

கும் சிந்தனை

'பழம் நழுவிப் பாலில் விழுவதைப்போல' கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்த நூலகத்தை நகரசபை பொறுப்பேற்க வேண்டுமென சபையில் பிரேரணையை முன்வைத்தார். 1934 இல் நகர சபைத் தலைவராக இருந்த ஆர்.ஆர். நல்லையாவினால் கோரிக்கை ஏற்கப்பட்டு 1935 ஆம் ஆண்டு நூல் நிலையத்தை யாழ். நகரசபை பொறுப்பேற்றுக் கொண்டது.



யாழ். மக்கள் கல்விப் புலத்தில் சிறந்து விளங்கியதுடன் மேன் மேலும் அறிவு விருத்தியில் இளம் தலைமுறையினரை ஊக்குவிக்கும்திறனும் கொண்டிருந்த சூழ்நிலைகள் நூலகத்துக்கு வாசகர்களின் வருகையை அதிகரிக்கச் செய்தன. அங்கு இடநெருக்கடி தோன்றவே பிரதான வீதியில் உள்ள ஒரு கட்டடத்தில் மாற்றம் செய்யப்பட்டது. ஆயினும் அமைதிச் சூழலின்மை காரண மாக மீண்டும் புதிய இடம் தேட வேண்டிய தேவை ஏற்பட்டது. யாழ். வாடி வீட்டுக்கு தெற்குப் புறமாக புத்தூர் மழவராயர் குடும்பத்துக்குச் சொந்தமான மாடிக் கட்டடத்தின் மேல் மண்டபத்தை கடனாகப் பெற்று 1936 ஆம் ஆண்டு அங்கே நூலகம் மாற்றப்பட்டது.

இட வசதிக்கேற்ப விரிவாக்கம் செய்யப்பட்டு நூல்கள் வேறாகவும், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வேறாகவும் இரு பிரிவுகளாக இயங்கியது. அப்போது நூலகராகப் பணியாற்றிய க. நாகரத்தினத்தின் முயற்சியால் வண. வினுடைய நூல்கள் . வாசகர்களின் வருகையும் நூல்களின் அதிகரிப்பும் நவீன வசதிகள் கொண்ட நிரந்தரக் கட்டடத்தில் நூலகம் அமைக்கப் பட வேண்டியதை உணர்த்தியது.

அந்த நேரத்தில் நகரசபையாக இருந்த உள்ளூராட்சி மன்ற அமைப்பு 1949 ஆம் ஆண்டு யாழ். மாநகர சபையாக தரம் உயர்த்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் சிறந்த அறிவுக் களஞ்சியமாக யாழ். நூலகம் வளர வேண்டுமென்ற பேரவாக்கொண்ட சாம் ஏ.சபாபதி முதல்வராகத் தெரிவானார். இவரது சிந்தனைக்கு வடிவம் கொடுக்க பல புத்திஜீவிகள் முன் வந்தனர். அவர்களுள் புனிய பத்திரிசியார் கல்லூரி அதிபராக இருந்த வண. பிதா லோங் அடிகள் குறிப்பிடத்தக்க பணியாற்றினார்.

1952 ஆம் ஆண்டு கூடிய பொதுக் கூட்டத்தில் நூலகக் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்வதற்கென 'யாழ்ப் பாண மத்திய நூலக சபை' என்னும் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

(தொடரும்)

**எஸ்.யேசுதாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல் - 2011

புதிதாக துணுக்காய் பஸ் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பன்னிரண்டு கடைகள் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள வகை கொண்ட வியாபார நோக்கங்களுக்காக 15.06.2011 இலிருந்து ஒரு வருடத்துக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் துணுக்காய் பிரதேச எல் லைக்குட்பட்ட நிரந்தரவாசிகளிடமிருந்து கேள்வி விண்ணபங்கள் கோரப்பட்டுகின்றன.

1. கேள்விகள் இணைப்பிரதிகள் தயாரிக்ப்பட்டு மூலப்பிரதியை 'செயலாளர், பிரதேச சபை, துணுக்காய்' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை ' பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. வியாபார நிலையங்களுக்கான ஒப்பந்தம் வருடாந்தம் புதுபபிக்கப்பட வேண்டும்.
3. ஒப்பந்தம் மேற்கொண்டவராலேயே மேற்படி வியாபார நிலையம் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும்
4. ஒருவர் ஒரு வியாபார நிலையத்துக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்
5. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளைச் செலுத்தி பத்து நாள்களுக்குள் வியாபார செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும்.
6. கேள்விப் படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி 03.06.2011 பிற்பகல் 2 மணிவரை, கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 6.6.2011 நண்பகல் 12 மணிவரை, கேள்விகள் திறக்கப்படும் திகதி அன்றையதினம் (06.06.2011) பிற்பகல் 2 மணியளவில் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.
7. மேலதிக விவரங்களை துணுக்காய் பிரதேச சபை அலுவலத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| கடை இல (இடமிருந்து வலமாக) | வியாபாரத்தின் வகை | ஆகக் குறைந்தகேள்வி தொகை ரூபா (வரி நீங்கலாக) | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா (வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் ரூபா | மாத வாடகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | சிற்றுண்டிச் சாலை | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 02 | பலசரக்கு விற்பனை | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 03 | காகிதாதிகள் விற்பனை | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 04 | இலத்திரனியல் சார்ந்த தொழில் | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 05 | பலசரக்கு விற்பனை | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 06 | சிற்றுண்டிச்சாலை | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 07 | பலசரக்கு விற்பனை | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 08 | புடைவை விற்பனை அழகு சாதனப் பொருள்கள் விற்பனை | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 09 | விவசாய உள்ளீடுகள் விற்பனை | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 10 | பொறி உதிரிகள் விற்பனை | 30 000.00 | 500.00 | 5000.00 | 1000.00 |
| 11 | சலவைத் தொழில் | 10 000.00 | 500.00 | 5000.00 | 500.00 |
| 12 | சிகை அலங்கரிப்பு | 10 000.00 | 500.00 | 5000.00 | 500.00 |

துணுக்காய் பிரதேச சபை,
துணுக்காய்.
19.05.2011 (சி-143) (20,21)

முருகேசு கிருஷ்ணநவரத்தினராசா,
செயலாளர்,
துணுக்காய் பிரதேச சபை

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள், 25.05.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். விலை ரூபா 90/= கூடுதல் கொள்வனவு செய்பவர்களுக்கு கழிவு வழங்கப்படும்.

★ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை,
★ துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.
★ ஜென்சி பாம்-1 ஆம் கட்டை பருத்தித்துறை. (0773541771)
★ P.ரவி சாவகச்சேரி T.P: 021 222 2867, 0776090926

(4496)

## Thirunelvely Smart Kids Urumpirai Kids Park Preschools

Wanted English Teachers Retired Lady English Trained Teachers Can also apply.
Closcing Date : 26.05.2011

President,
Thirunelvely Smart Kids
Adiapatham Road,
Thirunelvely, Jaffna.

(4396)

## அறிவித்தல்

ஹோம் பினான்ஸ் லிமிட்டட்
(தற்போது கலைப்பிலுள்ளது)
கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழங்கு இல.:91/CO
வைப்பாளருக்கான அறிவித்தல்

வைப்பு மீளளிப்பு கோரலுக்கான
இறுதித் திகதி பிற்போடப்பட்டுள்ளது

ஹோம் பினான்ஸ் லிமிட்டட் கம்பனியின் வைப்பாளர்கள் தமது பணவைப்புகளின் மீளளிப்புக்கான விண்ணப்பங்களை, சமர்ப் பிக்கவேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மீளளிப்புக்கான விண்ணப்பப் படிவங்களை வேலை நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கீழ்க் காணும் முகவரி யில், உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். நேரில் வரமுடியாதோர் தமது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங் களைப் பெற்றக்கொள்ளலாம். மேலும் தபால் மூலம் உரிய ஆவ ணங்களின் பிரதிகளை அனுப்பியும் மேற்படி படிவங்களைப் பெற் றுக்கொள்ளலாம். ஏற்கனவே எமக்கு விவரங்களைச் சமர்ப்பித்த வர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் தபால் மூலம் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

உரிய முறையில் நிரூபிக்கப்பட்ட வைப்பாளருக்கான மீளளிப் புகள், 1982 ஆம் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளுக் கமைய, கம்பனியின் சொத்துக்களை விற்றொதுக்கிப் பெறும் நிதிக் கமைவாக, கம்பனிகலைப்பாளரினால் வழங்கப்படும்.

2011 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதியின் பின் கிடைக் கப்பெறும் மீளளிப்புக்கான விண்ணப்பங்கள் கம்பனிக் கலைப்பாள ரினால் வழங்கப்படக்கூடிய மீளளிப்புகளில் சேர்த்துக்கொள்ளப் படமாட்டா என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே எமது முன்னைய அறிவித்தலுக்கமைய விண்ணப் பித்தவர்கள் மறுபடியும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

மேலதிக விவரங்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி இலக் கத்துடன் தொடர்புகொள்ளவும்.

The Liquidators
Home Finance Ltd.
C/o SJMS Associates,
No.: 30-2/1, (2nd Floor) Galle Road,
Colombo - 6,
T.P.: 2508874 (20,21) (சி-578397)

## மரண அறிவித்தல்

### செல்லத்தம்பி கிருஸ்ணகுமார்

(சாந்தன் -பிரான்ஸ்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாக வும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி கிருஸ்ண குமார் 18.05.2011 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி (யாழ். போதனா வைத்தி யசாலை பரிசாரகர்) - அன்னம் தம்பதி யரின் அன்பு மகனும் நளினியின் (பிரான்ஸ்) பாசமிகு கணவரும் கம்சவாகினி, அஜய், அனுஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஸ் னுகுமார் (யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி), தவேந்திர குமார் (பிரான்ஸ்), சதீஸ்குமார் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விஜயமாலினி, கவிதா (பிரான்ஸ்), மேரி சில்வியா ஆகியோரின் மைத்துனரும் கம்சாயினி, தனு சாயினி, சுபத்திரன், பிந்துஜன் ஆகியோரின் சிறிய தந் தையும், செலினா, செபனி (பிரான்ஸ்), கோகுலவருண், வர்ணிக்கா, கோகுலராஜ் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(24.05.2011 ) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அன்றைய தினம் அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை திருநாவற்குளம், வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருநாவற்குளம்,
வவுனியா.
தொடர்பு: நளினி - 0033682087538,
சதீஸ் - 0779909230 (4433)

தகவல்:
குடும்பத்தினர்.

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(4432-20-21) தொடர்பு: 0750405723.

## காணி விற்பனைக்கு

இராச பாதையில் கோண்டாவில் இருபாலைப் பாதைச் சந்திக்கு அண்மையில் 25 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0776303555

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு பழைய டச்சு வீதியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசா லைக்கு அண்மையாக 7பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0776303555

## காணி விற்பனைக்கு உண்டு

தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறு விளா னில் மெயின்றோட் அருகில் உள்ள 34 பரப்புக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மத்தேசு அருளப்பு
பெரியவிளான், ஆதியோலை. T.P: 077 9459186.

## காணி விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, ஸ்ரீதர் தியேட்டருக்கு முன் பாக உள்ள பழைய இலக்கம் 48 இலுள்ள வீட்டுடன் கூடிய [illegible] பரப்புக் காணி விற்ப னைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
Canada -0016473450539-0016478356856

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18.06.1934
உதிர்வு: 03.06.2010

### திருமதி தம்பாப்பிள்ளை மாணிக்கம்

கவலைகள் இருளாக சூழ்ந்தன
கருவிழி மாரியாய் பொழிந்தது
மாரியில் மாணிக்கம் மறைந்தது
என்று துயருறும் வேளை
மறைத்தது மாணிக்கம் அல்ல
மாணிக்கத்தின் விம்பமே
மறவாது என்றும் எம் நெஞ்சமே


இன்று (23.05.2011) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் ஏமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள் ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'மாணிக்க பவனம்',
தம்பாலை, அச்சுவேலி. (48,22,24)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்படியாக மறைந்து வரும் பனை ஓலை உற்பத்திகள்



இயற்கையாகவே இனிய வளங்களைத் தன்னகத்தே கொண்டது யாழ்.குடாநாடு.

இத்தகைய வளங்களைப் பாதுகாக்கவோ பயன்படுத்தவோ நம்மவர்கள் தவறிவிடுகின்றார்கள்.

தென்னிலங்கையில் இருந்து வரும் உற்பத்திப் பொருள்கள் மீது கொண்ட ஆசை, ஈடுபாடு குடாநாட்டு மக்களைப் பெரிதும் மாற்றிவிட்டது.

நாட்டினுடைய இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

குறிப்பாகக் குடாநாட்டின் அளப்பரிய சொத்தும் வேறெந்தப் பிரதேசத்திலும் கிடைக்காத தனித்துவமான வள்முமாகப் பனைவளம் காணப்படுகின்றது. இந்தப் பனை வளத்தின் பயன்பாடு அருகிக் கொண்டும் அழிந்து கொண்டும் செல்கின்றது.

பனை வளத்தின் மூலம் கிடைக்கக் கூடிய பலன்கள் ஏராளம். பனைமரம் வேரிலிருந்து குருத்தோலைவரை பயன்தரக் கூடியது. இதில் கழிவாகப் பெறப்படுபவை விறகுகளாகப் பயன்படுகிறது.

இத்தகைய அளப்பெரிய வளத்தின் பயன்பாடுகள் குறைவடைந்து செல்வதற்கு யார் காரணம்?

முன்னைய காலங்களில் கைத்தொழிலாகவும், சுயதொழிலாகவும் பனை வளத்தையே பயன்படுத்தினர்.

குறிப்பாக இதன் உற்பத்திப் பொருள்கள் யாவும் வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளக் கூடியனவாக இருந்தன.

இந்த நிலையில் காலத்தின் வேகம் குடாநாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளையும் நாகரிகத்தையும் மாற்றம் அடையச் செய்துவிட்டன. இதனால் நமது பாராம்பரிய வளங்கள் சிதைவடைந்து கொண்டே செல்கின்றன.

பனை வளத்தின் உற்பத்திப் பொருள்களில் உணவுப் பொருள் கள் உட்பட நாளாந்தப் பாவ னைப் பொருள்களும் உள்ள டங்குகின்றன.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வரும் அதிகூடிய வெப்பநிலையில் அனைவரும் "தொப்பி" அணிந்து செல்ல வேண்டிய கட்டாய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். காலநிலை மாற்றங்கள் தென்னிலங்கை வியாபாரிகளுக்குத்தான் சாதகமாக அமைந்துவிட்டன.

எந்தக்காலம் எதனை விற்பனை செய்தால் விற்பனை சூடுபிடிக்கும் என்பது அந்த வியாபாரிகளின் நுட்பமான தொழில் தந்திரங்கள்.

பனையோலையைப் பயன்படுத்திச் செய்யப்படும் தொப்பியின் வடிவில் வர்ணத் தொப்பிகளை செயற்கைப் பொருள்களைக் கொண்டு தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

இத்தகைய தொழில் தந்திரங்களை ஏன் நமது சுயதொழில் மற்றும் கைத்தொழிலாளர்கள் கைவிட்டு விட்டார்கள்.

பனைமரத்தின் மூலம் கிடைக்கும் பயன்கள் அதி உச்சமாகக் கிடைக்கக்கூடிய மாதங்கள் மே, ஜூன், ஜூலை மாதங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பனையோலையால் செய்யப்பட்ட தொப்பிகளின் அழகும் ஆரோக்கியமும் சொல்லித் தெரிய வேண்டியவை அல்ல. அது தனிச்சிறப்பு வாய்ந்தவை என்பது யாவரும் அறிந்ததே.

காலத்துக்கு ஏற்றாற்போல் வளங்களைப் பயன்படுத்தி அதன் உச்ச பயனைப்பெற பனை வளத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இது தொடர்பாக ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள், ஊக்குவிப்புக்கள், விழிப்புணர்வுகள் வழங்க வேண்டியது பனை வளத்துடன் சம்பந்தப் பட்ட அதிகாரிகளின் கடமையாகும்.

குடாநாட்டு வளத்தை அழிவுப் பாதையில் செல்லவிட்டு தென்னிலங்கை வியாபாரிகளின் தந்திரோபாயத் தொழிலுக்கு இடம்கொடுப்பதில் எமது உற்பத்தியாளருக்கு அதிக பங்கு உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அதிகமானோர் தொழில் வாய்ப்புக்களை இழந்து வீட்டுக்குள் முடக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய இயற்கை வளங்களைப் பயன்படுத்தி சாதகமாக வளத்துடன் கூடிய தொழில்களை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

பனை உற்பத்தியில் செய்யப்படும் பொருள்களுள் "சுளகு", "பாய்" போன்றனவும் அடங்கும்.

தற்போது யாழ்.குடாநாட்டில் கோயில் திருவிழாக்கள் களை கட்டத் தொடங்கிவிட்டன. ஆலயத் திருவிழாக்களின் போது இந்த உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் நாட்டம் காட்டுவது வழமை. இவர்களின் தேவை நிறைவு செய்யப்பட வேண்டும். ஆலயங்களின் அன்னதான மடங்களில் பனை ஓலையினால் செய்யப்பட்ட பொருள்கள்தான் முன்பு அதிகம் காணப்பட்டன.

ஆனால் தற்போது இது வேதனைக்குரிய விடயமென சமூக ஆர்வலர்கள் பலர் கருத்தும் தெரிவிக்கின்றனர்.

ஏனெனில் அன்னதான மடத்தில் இறப்பரினாலான பொருள்களே தற்போது காணப்படுகின்றன.

எனவே காலநிலைகளைக் கருத்திற்கொண்டு வளங்களைப் பயன்படுத்துவதற்கு பொதுமக்களை ஊக்கப்படுத்த வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒவ்வொருவரினது தலையாய கடமையாகும் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. மறந்து விடவும் கூடாது.

பாண்டியம்மா




யாழ்ப்பாணம், மே 23

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 8.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் காலை 7.45 மணிக்கும் பிற்பகல் 5 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை இடம்பெறும்.

***

யாழ்ப்பாணம், மே23

யாழ்.பல்கலைக்கழகத்தின் பார்வதி அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக தினவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் காலை 8 மணிக்கு சங்காபிஷேகப் பூசையும் முற்பகல் 10 மணிக்குப் பண்ணிசைக் கச்சேரியும் பிற்பகல் ஒரு மணிக்கு வில்லிசையும் மாலை விசேட மேளக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

(ற-313)

***

யாழ்ப்பாணம், மே23

சாவகச்சேரி மண்டுவில் இளஞ்சாரணியம் கண்ணகை அம்பாள் (சோலை அம்பாள்) ஆலயத்தின் விசாகப் பொங்கல் விழா இன்று நடைபெறவுள்ளது.

இதில் காலை காவடி நிகழ்வுகளும் மாலை பொங்கலும் இடம்பெறும் என ஆலயப் பிரதமகுரு க.கிருபானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (ம-313-207)

## மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 'பவிலியன்' திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், மே 23

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நவீன வடிவிலான 'பவிலியன்' கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ். சிவனேஸ்வரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம அதிதியாக பாடசாலை பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர் ஏ.இராமநாதன் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்தநிகழ்வில் முன்னாள் மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன், வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.இராசேந்திரன், கோட்டக் கல்வி அதிகாரி க.கந்தசாமி, தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். 'பவிலியன்' ஆர்.வி. ஆறுமுகம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-302)

## உயர்தர மாணவருக்கு விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 23

வடக்கு மாகாண சபை மற்றும் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஜி.சி.ஈ உயர்தர மாணவர்களுக்கு விசேட கருத்தரங்கு இன்று முதல் ஆரம்பமாகி எதிர்வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு நிகழ்வில் உயிரியல், இரசாயன வியல், பௌதிகவியல் இணைந்த கணிதம், விவசாயம், வரலாறு, பொருளியல், கணக்கியல், வர்த்தகம், புவியியல், அரசியல், அளவையியலும் விஞ்ஞான முறையும், பௌத்த நாகரிகம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்குரிய கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பான நேர அட்டவணைகள் சகல வலயக் கல்விப் பணிமனைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் மாணவர்கள் உட்பட தொடர்புடைய ஆசிரியர்களையும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ம-313-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜென்டீனா விமான விபத்தில் 22 பேர் மரணம்

பியூனஸ் அயர்ஸ், மே 23

ஆர்ஜென்டீனாவில் நடந்த விமான விபத்தில் 22 பேர் இறந்தனர். ஆர்ஜென்டீனாவின் தலைநகர் பியூனஸ் அயர்ஸ் நகரில் சாப் 340 ரக பயணிகள் விமானம் புதன்கிழமை இரவு 8.08 மணிக்கு புறப்பட்டுச் சென்றது.

புறப்பட்ட 45 நிமிடங்களில் விமானத்தில் கோளாறு ஏற்பட்டிருக்கிறது எனக் கட்டுப்பாட்டு அறைக்கு விமானி தெரிவித்தார். அதன் பின்னர் விமானத்தின் வானொலி தொடர்பு அறுந்து போனது.

இதையடுத்து மீட்புக் குழுவினர் விமானத்தைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

தேடுதல் பணியில் தெற்கு ஆர்ஜென்டீனா பகுதியிலுள்ள படகோனியா என்ற இடத்தில் விமானம் விழுந்து நொறுங்கியிருப்பது தெரியவந்தது.

இதில் விமானத்தில் பயணம் செய்த 18 பெரியவர்கள், விமான ஊழியர்கள் மூவர், ஒரு சிறுவன் ஆகிய 22 பேர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர்.

மீட்புப் பணியில் ஈடுபட்ட வைத்தியசாலை இயக்குநர் இஸ்மாயில் அலி இதுகுறித்து கூறியதாவது:

விமான விபத்து நடந்த இடத்தில் எவரும் உயிரோடு இல்லை. விமானம் சுக்குநூறாகி விட்டது. விபத்து நடந்த இடத்தில் உடைந்து கிடந்த விமான பாகங்களை மட்டுமே கண்டெடுத்தோம். அனைத்துமே எரிந்து சாம்பலாகிவிட்டன.

வானத்தில் நெருப்புக் குழம்புடன் விமானம் நொறுங்கி விழுந்தது என அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

இதன்மூலம் வானிலேயே விமானம் தீப் பிடித்து விழுந்து நொறுங்கியிருப்பது தெரிய வந்துள்ளது என்றார் அவர்.



ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடினை சர்வதேச நிறுவனத்தின் வர்த்தகப் பிரதிநிதிகள் தலைநகர் மாஸ்கோவில் சந்திக்கின்றனர்.

# பாகிஸ்தானின் இறையாண்மைக்கு அமெ.மதிப்பு அளிக்க வேண்டும்

## சீன அரசு வலியுறுத்து

இஸ்லாமாபாத், மே 23

''பாகிஸ்தான் மீது நடத்தப்படும் எந்தத் தாக்குதலும் சீனா மீது நடத்துவது போன்றது. பாகிஸ்தானின் இறையாண்மைக்கு அமெரிக்கா மதிப்பு அளிக்கவேண்டும்'' என்று அமெரிக்காவிடம் சீனா வலியுறுத்தியுள்ளது.

வாஷிங்டனில் கடந்த வாரம் அமெரிக்கா - சீனா இடையே பொருளாதார மற்றும் இரு நாட்டு உறவுகள் தொடர்பான பேச்சுகள் நடந்தன. இதில், சீன வெளியுறவுத்துறை அமைச்சர் கலந்துகொண்டார்.

அப்போது, ''பாகிஸ்தான் நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அமெரிக்கா மரியாதை அளிக்க வேண்டும். பாகிஸ்தான் மீது நடத்தப்படும் எந்த தாக்குதலும், சீனா மீது நடத்தப்படுவது போன்றது'' என்று அமெரிக்கப் பிரதிநிதியிடம் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார் என ''தி நியூ டெய்லி' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்லாமாபாத்தில், சீனா மற்றும் பாகிஸ்தான் பிரதமர்களிடையே, புதன்கிழமை பேச்சுகள் நடந்தன. அப்போது, பாகிஸ்தான் மீதான அமெரிக்கா தாக்குதல் பற்றி வாஷிங்டனில் நடந்த பேச்சுகளின்போது, அந்நாட்டிடம் எடுத்துரைக்கப்பட்டது என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானியிடம், சீன பிரதமர் வென் ஜியாபோ தெரிவித்தார்.

இரு நாட்டுப் பிரதிநிதிகளும், பிரதமர்களும் கலந்து கொண்ட கூட்டம், 45 நிமிடம் நீடித்தது. இதில், ''இரு நாட்டு உறவுகள், பாகிஸ்தான் நாட்டு பாதுகாப்பு, தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தேவையான அனைத்து ஆதரவுகள் ஆகிய வற்றை சீனா வழங்கும் என்று கிலானிக்கு, வென் ஜியாபோ உறுதியளித்தார்.

இந்தக்கூட்டத்துக்குப் பின்னர் பத்திரிகையாளர்களுக்குப் பாகிஸ்தான் பிரதமர் கிலானி அளித்த பேட்டியில், ''தீவிரவாதத்துக்கு எதிரான போரில், பாகிஸ்தானின் தியாகத்தை, சீனா அங்கீகரித்துள்ளது. சர்வதேச அளவில் பாகிஸ்தானின் இந்த நோக்கத்துக்கு சீனா ஆதரவு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் நாட்டுடன் உறவுகளை மேம்படுத்த வேண்டும் என்று அமெரிக்காவிடம் சீனா வலியுறுத்தியுள்ளது.

தாய்வான், திபெத் தொடர்பான சீனாவின் கொள்கைகளை ஆதரிக்கிறோம். ஐ.நா. மறுசீரமைப்பு தொடர்பாக இரு நாடுகளும் தொடர்ந்து ஆலோசிக்கும்.

பாகிஸ்தானில், இரு நாடுகளும் இணைந்து அணு சக்தி, மின்சாரம் உட்பட பல்வேறு மின் உற்பத்திகளை நீண்டகால திட்ட அடிப்படையில் மேற்கொள்ளும் என்றார்.

சீனப் பிரதமர் வென் ஜியாபோ கூறுகையில், ''பாகிஸ்தான் வரலாற்றிலேயே, தற்போது அந்நாடு இக்கட்டான சூழலை சந்தித்து வருகிறது.

அந்நாட்டுடனான ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில், விரைவில் சிறப்புப் பிரதிநிதிகள் கொண்ட குழு, இஸ் லாமாபாத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

இரு நாடுகள் இடையிலான 60 ஆண்டுகள் உறவைக் கொண் டாடும் வகையில், சீனாவின் மூத்த அமைச்சர் இந்தக் குழு வில் பங்கு பெறுவார்' என்றார்.

# ஈராக் குண்டு வெடிப்புக்களில் 25 பேர் பலி! 79 பேர் காயம்

கிர்குக் (ஈராக்), மே 23

ஈராக்கில் வியாழக்கிழமை நடந்த 3 குண்டுவெடிப்புகளில் 25 பேர் கொல்லப்பட்டனர். 79 பேர் காயமுற்றனர். ஈராக்கின் வடக்குப் பகுதியிலுள்ள கிர்குக் நகர பொலிஸ் தலைமை அலுவலகத்தில் உள்ளூர் நேரப்படி அதிகாலை 6.30 மணிக்கு காரில் பொருத்தப்பட்டிருந்த சக்திவாய்ந்த வெடிகுண்டு வெடித்தது.

உடனே அங்கு மீட்புப் பணி ஆரம்பிக்க ஆள்கள் குவிந்தனர். அப்போது மற்றொரு காரில் பொருத்தப்பட்டி ருந்த சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இந்த இரு குண்டு வெடிப்புகளிலும் 25 பேர் கொல்லப்பட்டனர். 79 பேர் காயமுற்றனர். பல பொலிஸ்துறை வாகனங்கள், தனியார் வாகனங்கள் சேதமடைந்தன. பொலிஸ்துறை அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதி சேதத்துக்குள்ளானது.

உள்ளூர் நேரப்படி முற்பகல் 10.30 மணிக்கு மூத்த காவல் அதிகாரியின் வாகனமும் அவருடைய வாகன வரிசையும் சென்றுகொண்டிருக்கும்போது மூன்றாவது கார் வெடிகுண்டு வெடித்தது. இதில் பல வாகனங்கள் சேதமுற்றன. அருகிலிருந்த வேறு பல தனியார் வாகனங்களும், பல கட்டடங்களும் சேதமடைந்தன.

# துருக்கியில் பூகம்பம்: இரண்டு பேர் பலி!

அங்காரா, மே 23

துருக்கியின் மேற்குப் பகுதியிலுள்ள பகுதியில் உள்ளூர் நேரப்படி வியாழக்கிழமை இரவு 11.15 மணியளவில் பூகம்பம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.9 புள்ளிகளாகப் பதிவாகி இருந்தது.

இதன் விளைவாகக் கட்டடங்கள் குலுங்கின. இதில் சிக்கி 2 பேர் பலியாயினர். 10இக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதியில் பூகம்பம் ஏற்பட்டதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு நிலவி வருகிறது.

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் - 124
திகதி - 21.05.2011
ஜாதிக சம்பத Jathika Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Q | அதிர்ஷ்ட இலக்கம்: 08 | வெற்றி இலக்கம்: 6 1 7 9 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Q 08 6 1 7 9 2 | ரூ. 17,498,253.00 | - |
| 1 பரிசு | 08 6 1 7 9 2 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 6 1 7 9 2 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 1 7 9 2 | ரூ. 10,000.00 | 31 |
| 4 பரிசு | 7 9 2 | ரூ. 1,000.00 | 286 |
| 5 பரிசு | 9 2 | ரூ. 50.00 | 2877 |
| 6 பரிசு | 2 | ரூ. 20.00 | 27740 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 6 1 7 9 | ரூ. 1,000.00 | 29 |
| 8 பரிசு | 6 1 7 | ரூ. 100.00 | 291 |
| 9 பரிசு | 6 1 | ரூ. 50.00 | 2910 |
| 10 பரிசு | Q | ரூ. 20.00 | 11519 |
| 11 பரிசு | Q 08 | ரூ. 100.00 | 1321 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,060,730.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.17,498,253.00

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமான முறையில் முழுக்கட்டணம் 5000/=வுடன் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302),K.K.Sவீதி, யாழ்ப்பாணம், தொடர்பு: 077 6751649

வீடு விற்பனைக்கு
கோண்டாவில், குமரகோட்டம் ஓடை வைரவர் கோயில் சுற்றாடலில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய வீடு (பிரதான வீதிக்கு அருகில் அமைந்தது) விற்பனைக்குண்டு.
தொடர்பு - Dr.சிவஞானம் விவேகானந்தராசா, 0112721542, 0777436347

தீபன் ஹாட்வெயர்ஸ்
THIBAN HARDWARES
புதிய உதயம்
உங்களின் கட்டடப் பொருள், மின்சார நீர் விநியோக உபகரணத் தேவைகளுக்கு தரமாகவும் மலிந்த விலையிலும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
தீபன் ஹாட்வெயர்ஸ்,
இல. 3 ... கச்சேரி ... வீதி
(கச்சேரி மினிபஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம். (4457)

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்
அமரர்
வெற்றிவேலு சாந்தலிங்கம்
மலர்வு 17.01.1949
உதிர்வு 14.06.2009
திதி: ஷஷ்டி



ஞாலத்தில் நம் வாழ்வு காணப் பொறுக்காதோர்
ஜாலத்தால் நாமும் பிரிக்கப்பட்டோம்
வாழ்வு பறிக்கப்பட்டோம் தனிமைப்படுத்தப்பட்டோம்
உள்ளம் சிதைந்து உருக்குலைந்து போனதையா
விதியை நொந்து நொந்து உங்கள் காலடிக்கு வருகின்ற
காலம் வரும் வரைக்கும் உங்கள் நினைவுடன்
எங்கள் விழி நீர் சுமக்கும்

நி.மு: 3ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.
த.மு: 84.அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(சி/154)

மாடந்தை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய
காணி அளத்தல் தொடர்பான அறிவித்தல்
மேற்படி இந்த ஆலயம் அமைந்துள்ள காணிகளான சீமாவேம்படி, ஓடை, தல்லியபற்றை போன்ற காணிகளில் உள்ள 11½ பரப்பும் 12.06.2011இல் பதியப்பட்ட நில அளவையாளரின் ஊடாக அளந்து எல்லை வைக்கப்படும் என்பதை மக்களாகிய உங்களுக்கு அறியத் தருகின்றோம்.
(சி/153)
ஆலய நிர்வாக சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் அரசு எதிர்ப்புப் போராட்டம் நீடிப்பு; இராணுவத் தாக்குதலில் 44 பேர் உயிரிழப்பு

நிகோசியா, மே 23

சிரியாவில் அரசு எதிர்ப்புப் போராட்டத்தில் 44 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அங்கு அரசுக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் 44 பேர் கொல்லப்பட்டனர் என அரசு எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிரியாவின் மேற்குப் பகுதி நகரான இத்லிப், மத்திய பகுதி நகரான ஹோம்ஸ் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் உயிரிழப்புகள் அதிகம் நேர்ந்துள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்க சிரிய அரசு இராணுவச் சிப்பாய்களை பயன்படுத்துகிறது.

எதிர்ப்பாளர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலும் நடத்தப்படுகிறது. இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியும், குண்டுகளை வீசியும் ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நாடுமுழுவதும் எதிர்ப்புக் கிளம்பி பரவி வருகிறது என மனித உரிமைகள் அமைப்பின் நிர்வாகி அமர் குராபி தெரிவித்துள்ளார்.

இத்லிப் நகரில் 26 பேரும், ஹோம்ஸ் நகரில் 13 பேரும் உயிரிழந்தனர் என அவர் கூறினார். கிழக்குப் பகுதி நகரான டெயிர்எஸார் நகரில் 2 பேரும், தராயாவில் ஒருவரும், லடாகியாவில் ஒருவரும், மத்திய ஹமாவில் ஒருவரும் உயிரிழந்தனர் என அவர் தெரிவித்தார்.

மார்ச் 15ஆம் திகதி முதல் அரசு எதிர்ப்பாளர்களை ஒடுக்கும் பணியில் சிரிய அரசு ஈடுபட்டு வருகிறது. இதுவரை சுமார் 900 பேர் உயிரிழந்துள்ளனர்.

நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என குராபி தெரிவித்தார்.

சிரியாவில் இராணுவத் தாக்குதல் தீவிரமடைந்ததையடுத்து 10 ஆயிரம் பேர் லெபனானுக்குத் தப்பியோடிவிட்டனர் எனத் தெரிகிறது.

# நேட்டோ எண்ணெய் லொறிகள் தகர்ப்பு; 16 பேர் மரணம்

இஸ்லாமாபாத், மே 23

நேட்டோ எண்ணெய் லொறிகளை தீவிரவாதிகள் குண்டு வைத்து தகர்த்ததில் 16 பேர் இறந்தனர்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருக்கும் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படை வாகனங்களுக்குப் பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்திலிருந்து பெற்றோல் மற்றும் டீசல், லொறிகள் மூலம் கொண்டுசெல்லப்படுகின்றன.

அதுபோன்று பெற்றோல் ஏற்றிச்சென்ற லொறிகள் பாகிஸ்தான் எல்லையிலுள்ள லாண்டிகோடல் நகரத்தினருகேயுள்ள தோரிகம் என்ற இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அப்போது, அங்கு வந்த தீவிரவாதிகள் அந்த லொறிகள் மீது வெடிகுண்டுகளை வீசித் தாக்கினர். இதனால் லொறிகள் வெடித்துச் சிதறித் தீப்பிடித்தன. இதனால் அப்பகுதி முழுவதும் கரும்புகைமூட்டமாகக் காணப்பட்டது.

தீவிரவாதிகள் நடத்திய இத்தாக்குதலில் 10 லொறிகள் எரிந்து நாசமாயின. மேலும், 16 பேர் உயிரிழந்தனர். அவர்கள் 8 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இதில், 10 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர்.

சந்திப்பு....



அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூனை டப்ளின் நகரில் ஐரீஸ் பிரதமர் என்டாகென்னி(வலது) வரவேற்கிறார்.

# எண்ணெய்க் கப்பல்களை தகர்க்க பின்லேடன் திட்டம் தீட்டியிருந்தார்

## அமெரிக்கா தகவல்

வாஷிங்டன், மே 23

எண்ணெய்க் கப்பல்களைத் தகர்க்க ஒசாமா திட்டமிட்டிருந்தார். கைப்பற்றப்பட்ட ஆவணங்களிலிருந்து இது தெரியவந்துள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

உலகை அச்சுறுத்தி வந்த அல்-குவைதா தீவிரவாத இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் கடந்த 2ஆம் திகதி பாகிஸ்தான் அபோதாபாத்தில் அமெரிக்கப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அப்போது அவர் தங்கியிருந்த வீட்டில் அமெரிக்க உளவுத்துறை நடத்திய சோதனையில் சில முக்கிய ஆவணங்கள் சிக்கின.

அவற்றில், பின்லேடன் தீட்டியிருந்த சதித் திட்டம் பற்றிய பல அதிர்ச்சி தரும் செய்திகள் இருந்தன. அவற்றில், இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல், அட்லாண்டிக்கடல் பகுதிகளில் செல்லும் எண்ணெய்க் கப்பல்களைக் கடத்தி அவற்றைத் தகர்க்க அல்-குவைதா திட்டமிட்டிருந்தது.

அதற்கான மிகப்பெரிய சதித் திட்டத்தை பின்லேடன் தயாரித்திருந்தார். இதை கடந்த ஆண்டு கோடை காலத்தில் செயற்படுத்தத் திட்டமிட்டிருந்தார். இதன்மூலம் உலகம் முழுவதும் கச்சா எண்ணெய் விலை தாறுமாறாக உயரும். இதனால் உலக பொருளாதாரம் சீரழிந்து பெருமளவில் பாதிப்பு ஏற்படும் என பின்லேடன் கருதினார்.

ஆனால், கப்பல்களைத் தகர்க்கும் கடல் பகுதிகளில் முஸ்லிம்கள் அதிகம் வாழ்கின்றனர். இதனால் பெருமளவில் பாதிப்பு ஏற்படும் எனக் கருதி அதற்கு மறுத்துவிட்டனர். அல்- குவைதா தீவிரவாதிகள். அதனால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

-இவ்வாறு அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை அமெரிக்க உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# தலிபான் - அமெரிக்கா இடையே பல கட்டப் பேச்சுக்கள் ஆரம்பம்

வாஷிங்டன், மே 23

''தலிபான்களுடன் பல கட்டப் பேச்சுகளை அமெரிக்கா பல மாதங்களுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்டது. ஆப்கானிஸ்தான் போர் பற்றிய ஓர் அறிக்கையை, ஜனாதிபதி ஒபாமா விரைவில் வெளியிடுவார் என எதிர்பார்க்கலாம் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்குப் பின்னர் ஒசாமா பின்லேடன் வேட்டையைக் காரணம் காட்டி, ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா 2001 ஒக்டோபர் 7ஆம் திகதி படையெடுத்தது.

பத்தாண்டுகளுக்குப் பின்னர் ''2011, ஜூலை முதல் ஆப்கனிலிருந்து அமெரிக்கப் படைகள் படிப்படியாக வாபஸ் பெறப்படும்'' என்று ஜனாதிபதி ஒபாமா ஏற்கனவே அறிவித்திருந்தார். ஒசாமாவின் கொலையும் அதை துரிதப்படுத்தியுள்ளது.

ஆப்கனில் நிரந்தர அரசியல் சூழலை உருவாக்குவதன் மூலம் அந்நாட்டிலும், அந்தப் பகுதியிலும் அமைதியை உருவாக்க முடியும். அதற்குத் தடையாக இருப்போர் தலிபான்கள் மட்டுமே.

அதனால், அவர்களை வழிக்குக் கொண்டு வருவதற்காக அமெரிக்கா பேச்சுகளில் இறங்கியுள்ளது. இதுபற்றிய செய்திகள் இதற்கு முன்னர் வந்தபோது, அமெரிக்கா மறுத்துவிட்டது.

ஆனால்,''கடந்த பல மாதங்களாக தலிபான்களுடன் அமெரிக்கா பேச்சு ஆரம்பித்துள்ளது. இதுவரை, கட்டார், ஜேர்மனி ஆகிய நாடுகளில் மூன்று சந்திப்புகள் நடந்துள்ளன. கடந்த இரு வாரங்களுக்கிடையில் ஒருநாள், தலிபான் தலைவர் முகமது ஒமருக்கு நெருக்கமானவருடன் ஒரு கூட்டம் நடந்து முடிந்துள்ளது'' என ஆப்கன் அதிகாரிகள் சிலர் தெரிவித்த கருத்துக்கு இது வரை அமெரிக்கா மறுப்புக் கூறவில்லை.

இந்தப் பேச்சுகள் அரசு சாரா சில நடுவர் அமைப்புகளுடனும், அரபு மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனும் நடந்து வருகின்றன. ஆனால் தலிபான்கள், அமெரிக்கா உடனான பேச்சுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றனர்.

இதுகுறித்து அமெரிக்க அதிகாரிகள் சிலர் கூறியவை வருமாறு:-

இந்தப் பேச்சுகள் முதற்கட்டத்தில்தான் உள்ளன. பல நிபந்தனைகளை தலிபான்கள் இதில் முன்வைத்துள்ளனர். அவற்றில், குவான்டனாமோ சிறையிலுள்ள 20 தீவிரவாதிகள் விடுதலையும் அடங்கும்.

அவர்களில், எட்டு பேர் மிக அபாயகரமான தீவிரவாதிகளாக அமெரிக்காவால் அடையாளம் காணப்பட்டவர்கள்.

ஆப்கனிலிருந்து அமெரிக்கப் படைகளை முழுவதும் திரும்பப் பெறுதல், ஆப்கன் அரசில் தலிபான்களின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படுதல் ஆகிய நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கட்டார் நாட்டின் உதவியுடன், தங்களுக்கு என ஒரு தனி அரசியல் பிரிவை உருவாக்கி, அதற்கென ஓர் அலுவலகத்தைக் கட்டுவது குறித்தும் தலிபான்கள் ஆலோசித்து வருகின்றனர்

தலிபான்களின் அரசியல் பிரிவுக்கான கட்டடத்தை எங்கு கட்ட வேண்டும், அதற்கு, 'இஸ்லாமிய ஆப்கானிஸ்தான் எமிரேட்' என்று பெயர் வைக்கலாமா என்று எல்லாம் தலிபான்கள் ஆலோசித்து வருகின்றனர்.

சிலர் தலிபான்கள் அக்கட்டடம் காபூலில் இருக்கவேண்டும் என்றும் சிலர் அது கட்டாரில்தான் இருக்க வேண்டும் என்றும், சிலர் அக்கட்டடம் ஐ.நா. ஆதரவு அலுவலகம் என்ற பெயருடன் இயங்க வேண்டும் என்றும் கூறி வருகின்றனர்.

இவ்வாறு அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மலேசியாவில் நிலச்சரிவு: 15 குழந்தைகள் பரிதாப பலி

கோலாலம்பூர், மே 23

மலேசியாவில் உள்ள மத்திய செலாங்கர் மாநிலத்திலுள்ள ஒரு கிராமத்தில் சனிக்கிழமை திடீரென 2 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

அதில் அங்கிருந்த அநாதை இல்லம் மண்ணுக்குள் புதைந்தது. தகவல் அறிந்ததும் மீட்புக் குழுவினர் விரைந்து வந்து மண்ணை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இருந்தும் அநாதை இல்லத்தில் தங்கியிருந்த 15 மாணவர்களும், அந்த இல்லத்தின் நிர்வாகி ஒருவரும் உயிரிழந்தனர். இவர்கள் தவிர 9 பேர் படுகாயமடைந்தனர்.

அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளுக்கு மத்தியில் மன்மோகன்சிங் அரசின் மூன்றாவது ஆண்டு ஆரம்பம்



பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இன்று மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

2004இல் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி பிரதமர் பதவியேற்க மறுத்ததைத் தொடர்ந்து 79 வயதான மன்மோகன் சிங் அந்தப் பதவிக்கு வந்தார். இரண்டாவது முறையாக மீண்டும் ஆட்சிக்கு வந்த மன்மோகன் சிங் அரசுக்கு கடந்த 8 மாதங்களாக பிரச்சினை மேல் பிரச்சினையாக வந்துகொண்டே இருக்கிறது.

அண்மையில் வெளியாகிய சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகள் தான் மத்தியில் ஆளும் கூட்டணிக்கு கிடைத்துள்ள ஒரே ஆறுதல். அசாம் பேரவைத் தேர்தலில் மீண்டும் காங்கிரஸே ஆட்சியைப் பிடித்துள்ளது. கேரளாவிலும் கடும்போட்டிக்குப் பின்னர் காங்கிரஸ் கூட்டணியே வென்றது.

இதேவேளை மேற்குவங்கத்தில் 34 ஆண்டுகளுக்குப் பின்னர் இடது சாரிகள் கூட்டணியை வீழ்த்தி காங்கிரஸ் கட்சி இடம்பெற்றுள்ள திரிணமுல் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியைப் பிடித்துள்ளது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு பிரதமரின் இல்லத்தில் இன்று மாலை கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

2ஜி ஊழல், கொமன்வெல்த் ஊழல், ஆதர்ஷ் வீட்டுவசதி வாரிய ஊழல் மற்றும் பிஜே.தாமஸ் விவகாரம் என பிரதமருக்கு பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன.

திகார் சிறையில் உள்ள ராசாவுடன், அவருடன் இருந்த முக்கிய பிரமுகர்களான காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் சுரேஷ் கல்மாடி, தி.மு.க மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி ஆகியோர் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் கொண்டாட்டங்களுக்கு நல்ல விளம்பரங்களைத் தரமாட்டார்கள் என்றே தெரிகிறது.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க பாகிஸ்தானிடம் அளித்த தேடப்படும் பயங்கரவாதிகள் பட்டியலில் இந்தியாவில் வசிப்பவர்களின் பெயர்களையும் இடம்பெறச் செய்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு சர்ச்சைகளின் நாயகனாகத் திகழ்கிறது. (வ)

## கருணாநிதி டில்லி பயணம்; சோனியாவுடன் சந்திப்பு இல்லை

சென்னை, மே 23

காங்கிரஸ் தலைவர் சோனியாவைச் சந்தித்துப் பேசும் நிலைமை தற்போதைக்கு இல்லை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கனிமொழி கைது செய்யப்பட்ட நிலையில் காங்கிரஸ் தலைவர் சோனியாவை நீங்கள் சந்தித்துப் பேசுவீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு அவர், இப்போது சோனியாவை சந்திக்கும் வாய்ப்பு இல்லை என்று கூறியுள்ளார்.

இதேவேளை இன்று கனிமொழி சார்பில் பிணை கோரி மனு தாக்கல் செய்யப்படும் என்று தெரிகிறது. இந்தநிலையில், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் புது டில்லி பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (வ)

# இருண்ட மாநிலமாகிவிட்டது உ.பிரதேசம் மாயாவதி மீது சோனியாகாந்தி கடும் தாக்கு

வாராணாசி, மே 23

மாயாவதியின் ஆட்சிக் காலத்தில் உத்தரப் பிரதேசம் இருண்ட மாநிலமாகி விட்டது என்று சோனியா காந்தி தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் மாநில அளவிலான மாநாடு வாராணசியில் இரண்டு நாள் களாக நடைபெற்றது. வியாழக்கிழமை இதன் நிறைவு விழாவில் கலந்து கொண்டு சோனியா பேசியதாவது:

நொய்டா பகுதியிலுள்ள கிராமங்களில் மக்களுக்கு எதிராக அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இங்கு சட்டம், ஒழுங்கு இல்லை. அது முற்றிலும் சீர் குலைந்துவிட்டது. எங்கு பார்த்தாலும் அராஜகம் நிலவுகிறது. உத்தரப் பிரதேச மாநிலமே இருண்ட பிரதேசமாகிவிட்டது.

பட்டா-பர்செல் பகுதியி லுள்ள நிலங்களை அரசு கையகப்படுத்துவதால் பாதிக்கப்பட்ட கிராமவாசிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதை நினைத்து வெட்கித் தலை குனிகிறேன்.

இந்த மாநிலத்தில் சட்டப் பேரவைக்கான தேர்தல் நடக்க இன்னும் ஒரு வருடமே உள்ளது. இங்கு காங்கிரஸ் நிச்சயம் ஆட்சியைப் பிடித்துவிட முடியும்.

காங்கிரஸ் தொண்டர்கள் மக்களிடம் நேரடியாகச் செல்ல வேண்டும். மக்களை பாதிக்கும் பிரச்சினைகளுக்காகப் போராட வேண்டும். அப்படிச் செய்தால் உத்தரப் பிரதேசத்திலும் வெற்றி நமதே.

ஊழலைப் பற்றி பலரும் பல விதமாகக் கூறிவருகின்றனர். காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைப் போல எந்தக் கட் சியாவது நடவடிக்கை எடுத்ததுண்டா? இவ்வாறு அவர் பேசினார்.

## நினைவில் நிற்பவர்...



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 20 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, டில்லியில் உள்ள அவரது நினைவிடத்தில், காங்., தலைவர் சோனியாவும், பொதுச்செயலர் ராகுலும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.





நிகழும் மங்களகரமான கர வருஷம் வைகாசி மாதம் 9ஆம் நாள் (23.05.2011) திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10.30 மணிவரையுள்ள திருவோண நட்சத்திரமும் மிதுன லக்கினமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திருநெல்வேலியைச் சேர்ந்த திரு.திருமதி மயில்வாகனம் - சரஸ்வதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன் **குமாரதாஸ்** (அப்பன்) அவர்களுக்கும்

வவுனியா, உக்கிளாங்குளத்தைச் சேர்ந்த திரு.திருமதி தர்மலிங்கம் - இராஜேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **யசோதா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டுவவுனியா தோணிக்கல் நாகபூஷணி அம்மன் ஆலய மண்டபத்தில் பாணிக்கிரகணமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம்தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்ல வரவேற்புபசாரம் 25.05.2011 புதன்கிழமை மதியவிருந்துபசாரம் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இருவீட்டார் அழைப்பு)

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.மயில்வாகனம் கர்ணகுமார் குடும்பத்தினர்
நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

T.P: 0774126722 (49)


# ரயில் பாதை வெடிகுண்டு வைத்து தகர்ப்பு ஒரிசாவில் மாவோயிஸ்ட்டுகள் அத்துமீறல்

ஒரிசா மாநிலம் சுந்தர்கார் மாவட்டத்தில் ரயில் பாதையை மாவோயிஸ்ட்கள் வெடிகுண்டு வைத்துத் தகர்த்தனர். இதனால் அந்தப் பகுதியில் ரயில் போக்குவரத்து பாதிக்கப் பட்டது. சம்பவத்தில் எந்தவிதமான உயிரிழப்போ காயங்களோ ஏற்படவில்லை.

ஒரிசா மாநிலத்தில் இரண்டு நாள் முழு அடைப்புப் போராட்டத்திற்கு மாவோயிஸ்ட்கள் அழைப்பு விடுத்திருந்தனர். போராட்டத்தின் முதல் நாளான நேற்று முன்தினம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடைகள், வணிக வளாகங்கள், அலு வலகங்கள் உள் ளிட்டவை மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்கு வரத்து முற்றிலும் முடங்கியது. இதனால் மால்கான்கிரி, ராயகோடா, கோராபுட், காஜாபடி, கந்தமால் உள்ளிட்ட மாவட்டங்களில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

ரயில் பாதை தகர்க்கப்பட்டதால் ரூர்கேலா - கிர்பூர் இடையிலான ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதே போன்று ஜார்க்கண்ட் மாநிலத்திலும் பொலிஸ் அத்து மீறலை கண்டித்தும் அண்மையில் பீகா ரில் மாவோ யிஸ்ட் இயக்க மூத்த தலைவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்தும், நக்சலைட்டுக்கள் 48 மணி நேரமுழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

இதற்கு மக்களிடம் பெரிய அளவில் வரவேற்பு இல்லை. சில பகுதிகளைத் தவிர பெரும்பாலும் கடைகளும், அலு வலகங்களும் திறந்திருந்தன. ரயில், பேருந்து உள்ளிட்டவை வழக்கம் போல் செயற்பட்டன. இதனால் இந்தச் சம்பவத்தை மேற்கொண் டுள்ளனர் என்று தெரியவருகிறது.

## உத்தியோகபூர்வ முடிவுகள்

கபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 610
திகதி 21/05/2011

சுப்பர் இலக்கம்: 18
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 12 17 21 45

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 14,651,220.80 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | — |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 10 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 250 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 457 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 12,053 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 6,985 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 173,040 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 27,726 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 6,957,020.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது


அடுத்த புதன்கிழமை ரூ 15,298,435.20

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்கள் படுகொலை; ஐ.நா. அறிக்கை குறித்து இந்திய அரசின் நிலைப்பாட்டை விளக்க வேண்டும்

## சீமான் கோரிக்கை



ஐ.நா.நிபுணர் குழு அளித்த அறிக்கையின் படி இலங்கை அரசு இழைத்த போர்க்குற்றங்கள் குறித்து இந்திய அரசின் நிலைப்பாடு என்ன? ஆதரிக்கிறதா?, எதிர்க்கிறதா ? என்பதை தமிழ்நாட்டு மக்களுக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும் என்று நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் 3 நாள் பயணமாக இந்தியா சென்ற பொழுது இந்திய பிரதமர் மன்மோகன் சிங், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, பாதுகாப்புச் செயலர் சிவசங்கர் மேனன், வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

அதன்பின்னர் இரு அரசுகளின் சார்பாக ஊடகங்களுக்கு ஒரு கூட்டறிக்கை விடுக்கப்பட்டது. அந்த கூட்டறிக்கையில் இலங்கை அமைச்சரின் இந்தியப் பயணத்தின் நோக்கம் என்ன என்பது குறித்து எந்த இடத்திலும் குறிப்பிடப்படாதது வியப்பளிக்கிறது.

இலங்கையில் நடந்த தமிழினப் படுகொலை குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா.பொதுச் செயலர் பான் கி மூன் அமைத்த நிபுணர் குழு அறிக்கை வெளிவந்து பன்னாட்டுக் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், இலங்கை வெளியுறவு அமைச்சரின் பயணம், அந்த அறிக்கைக்கு எதிராக டெல்லி அரசின் ஆதரவைப் பெறுவதற்காகவே என்று இலங்கையின் ஊடகங்களில் பரவலாக செய்தி வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் டில்லியில் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் ஐ.நா.நிபுணர் குழு அளித்த அறிக்கை பற்றி விவாதித்ததாக ஒரு வார்த்தை கூட இடம் பெறவில்லை. இரு தரப்பு உறவுகள் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும், இரு நாடுகளுக்கும் பொதுவாக கவலையளிக்கும் மண்டல, பன்னாட்டு பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது', என்று தான் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் கவலையளிக்கும் பிரச்சினைகளில் ஒன்றாக ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டுள்ளதா? என்ற வினா எழும்புகிறது. ஆனால் பதில் இல்லை.

இது நாள் வரை வராத அக்கறை இப்போது இந்திய, இலங்கை அரசுகளுக்கு திடீரென்று வந்துள்ள மர்மம் என்ன ?

தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் சிங்கள குடியேற்றமும், தமிழர் நகரங்களின் பெரும் பகுதி சிங்கள இராணுவப் பகுதிகளாக ஆக மாற்றப்பட்டு, இராணுவ முகாம்களும், குடியிருப்புகளும் அமைக்கப்பட்டு வருகிறதே, அப்படியானால் அங்கு இதுநாள் வரை வாழ்ந்த மக்கள் எங்கே குடியேற்றப்பட்டார்கள்? இந்திய அரசு இந்த வினாவை எழுப்பியதா? என்ற கேள்விக் கும் பதில் இல்லை.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து விசா ரணை நடத்த வேண்டும் என்று அமைச்சர் கிருஷ்ணா வலியுறுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு இலங்கை அமைச்சர் என்ன பதில் கூறினார் என்ற விவரம் இல்லை.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை ஆகியன பற்றி பன்னாட்டு மனிதாபிமான சட்டங்களின் அடிப்படையில் விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா.நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது.

ஆனால் ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை வெளிவந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் அது குறித்து பதில் ஏதும் சொல்லாமல் இந்திய அரசு கள்ள மௌனம் சாதிப்பது ஏன்?

ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை வெளியாவதற்கு முன்பு வரை, இந்தியாவின் பல்வேறு வர்த்தக விடயங்கள் எதிர்பார்க்காமல் பிடி கொடுக்காமல் இழுத்தடித்து வந்த ராஜபக்ஷ அரசு, இப்போது சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கவும், காங்கேசன் துறைமுகத்தை மேம்படுத்தவும், பலாலி விமானத் தளத்தை மறுசீரமைக்கவும், இதுநாள் வரை சம்மதிக்க மறுத்து வந்த இந்தியாவுடனான விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தை ஏற்க முன்வந்திருக்கிறது. இதன் மர்மம் என்ன? -

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவுக்கு தகுதி உள்ளதா?

## கண்காணிப்பு அமைப்பு சந்தேகம்

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு இந்தியா உட்பட 14 நாடுகள் தெரிவு செய்யப் பட்டுள்ளன. இவற்றில் 'பேரவையில் இடம்பெறுவதற்கான தகுதி இந்தியாவுக்கு இல்லை' என ஐ.நா செயற்பாடுகளைக் கண்காணித்து வரும் அமைப்பு ஒன்று விமர்சித்துள்ளது.

கடந்த 2006இல் உருவாக்கப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 47 உறுப்பு நாடுகளைக் கொண்டது. இதில் 13 ஆபிரிக்காவுக்கும், 13 ஆசியாவுக்கும், ஆறு கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், எட்டு லத்தீன் அமெரிக்காவுக்கும், ஏழு மேற்கு ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் ஆசியாவுக்கான நான்கு இடங்கள் உள்ளிட்ட 14 இடங்களுக்கான நாடுகள் நேற்று முன்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆசியா பிரிவில் இந்தியா 181 வாக்குகளைப் பெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகள் அனைத்தும் இந்தப் பேரவையில் ஜூன் 19ஆம் திகதி முதல் தமது பணிகளை ஆரம்பிக்கவுள்ளன.

இந்த நிலையில் சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் இயங்கி வரும் ஐ.நா. வின் செயற்பாடுகளை கண்காணிக்கும் அமைப்பான ஐ.நா கண்காணிப்பு அமைப்பானது மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறுவதற்கான தகுதிகள் இந்தியாவிடம் இருக்கின்றனவா என்பது சந்தேகம் தான் என்று கூறியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

சிரியாவில் ஏற்பட்டுள்ள மக்கள் எழுச்சியில் இந்தியா தவறான செய்தியை அந்தநாட்டுக்கு அளித்துள்ளது. அங்கு மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன.

அதை முன்னிறுத்தாமல் அந்த நாட்டு அரசின் அண்மைய அரசியல் சீர்திருத்தங்களை வரவேற்றுள்ளது. அதேபோல் காங்கோ மற்றும் குவைத்துக்கும் பேரவையில் இடம்பெறுவதற்கான தகுதிகள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# தற்காலிக சபாநாயகர் நேற்று பதவியேற்பு



சென்னை, மே 22:

தமிழக சட்டப்பேரவையின் தற்காலிக சபாநாயகராக இந்திய குடியரசு கட்சியின் செ.கு.தமிழரசன் நேற்றுக் காலை முறைப்படி பதவியேற்றுக் கொண்டார். நேற்றுக் காலை ஆளுநர் பர்னாலா அவருக்கு பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். தற்காலிக சபாநாயகராகப் பதவியேற்ற செ.கு.தமிழரசன் இன்று நடக்கவுள்ள சட்டப்பேரவைக் கூட்டத்தில் புதிதாகத் தெரிவான சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்துவைக்கவுள்ளார்.

# எல்லைப் பகுதியில் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும்

டில்லி மே 23

பாகிஸ்தான், பங்காளதேஷ் ஆகிய அண்டை நாடுகளின் எல்லையில் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

டில்லியில் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில்: எமது நாட்டின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் காப்பாற்றுமாறு எமது பாதுகாப்புப் படைகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

அண்டை நாடுகள் எமது நாட்டின் பாதுகாப்பிற்கு மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.

எனவே இதனால் இந்தியாவுக்கு அண்டை நாடு கள் தொந்தரவாக இருக்கிறது.

உலகிலேயே மிகவும் பிரச்சினைக் குரிய அண்டை நாடுகளுடன் நாம் வாழ்ந்து வருகிறோம் என்பதை நான் எப்போதும் கூறி வருகிறேன் என்று அவர் கூறினார். (வ)

# நலமாக மகளுடன் இருக்கிறார் ரஜனி



ரஜினியின் உடல்நிலை இயல்பு நிலைக்கு திரும்பி விட்டது என்று ராமச்சந்திரா மருத்துவமனை நிர்வாகம் அறிவித்தது.

ரஜினிகாந்துக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு, கடந்த 13 ஆம் திகதி போரூரில் உள்ள ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் ரஜினிக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்நிலையில் உணவு உண்டு குடும்பத்தாரோடு ரஜினி மகிழ்ச்சியாக இருப்பதாகவும், மருத்துவமனை நிர்வாகம் அறிவித்தது.

இதையடுத்து ரஜினியின் மருமகன் நடிகர் தனுஷ், நலமுடன் இருக்கும் ரஜினியை தான் மொபைல்போனில் படம்பிடித்ததாக தனது டிவிட்டர் பக்கத்தில் ஒரு போட்டோ வெளியிட்டுள்ளார்.

அந்த போட்டோவில் மகள் ஐஸ்வர் யாவுடன் தான் குணமாகிவிட்டேன் என்பது மாதிரி ரஜினி சந்தோசமாகச் சிரிக் கிறார். (வ)

# ஸ்பெக்ட்ரம் விவகாரம்; தொலைத் தொடர்பு நிர்வாகிகளின் பிணை மனுவுக்கு இன்று தீர்ப்பு

புதுதில்லி, மே.22:

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள யுனி டெக் நிர்வாக இயக்குநர் சஞ்சய் சந்திரா மற்றும் ரிலை யன்ஸ் ஏடிஏஜி நிர்வாக இயக் குநர் கௌதம் ஜோஷி உள் ளிட்ட தொலைத்தொடர்பு நிறுவனங்களின் 5 அதிகாரிகள் தாக்கல் செய்த பிணை மனு தொடர்பாக டில்லி உயர் நீதிமன்றத்தால் இன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

டிபி ரியாலிட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் ரிலை யன்ஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அந்த 5 அதிகாரிகளும் 2ஜி வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் முன்னதாக அவர்களுக்குப் பிணை வழங்க சிறப்பு நீதிமன்றம் பிணை வழங்க மறுத்து விட்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23 மே 2011 திங்கட்கிழமை

# கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல் மூலம் மக்களைக் கொன்று குவித்தது இராணுவம்

## மனித இனத்துக்கு எதிராக ஏராளமான பாதகச் செயல்கள்

யுத்தத்தின் கடைசி கட்டங்கள் போன்ற உயிருக்கு ஆபத்து அல்லது உடம்புக்கு ஆபத்து ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ள நிலைமைகளில் இந்த வழக்கமும் கொடூரமாக நடத்துவதானது பொது உறுப்புரை 3 இனை மீறுவதாகும்.

(83)

**6. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களை கொலை செய்தல்**

242. ஜெனிவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3: பொதுமக்களுக்கு எதிராக யுத்த வலயத்துக்குள்ளும் வெளியேயும் பல தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை தமிழீழவிடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ளதான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் பொது உறுப்புரை 3 (கொலை) இனை மீறியதைக் குறிக்கிறது.

2009 பெப்ரவரி 09 ஆம் திகதி முல்லைத்தீவைப் பிரிக்கும் நிலையமொன்றில் அல்லது 2009 மார்ச் 10 ஆம் திகதி அமைச்சர் மஹிந்த விஜேசேகர மீதான தாக்குதல் போன்ற பொதுமக்கள் பலரைக்கொன்ற தாக்குதல்கள் உள்ளிட்ட பல தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களையுத்தத்தின்இறுதிக்கட்டங்களில் யுத்த வலயத்துக்கு வெளியே தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டது.

மேலே ஆராயப்பட்ட பொதுமக்கள் மீதான வேண்டுமென்றோ அல்லது கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் இந்தத் தடையின் தெளிவான மீறல் எனக் குழு கருதுகிறது. தற்கொலைத் தாக்குதல்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அதன் காலம் முழுவதும் மேற்கொண்டதொரு பொதுவான நடவடிக்கையாகும் என்பதோடு, தற்கொலைத்தாக்குதல் பற்றிய அச்சம் அரச மீறல்களுக்கான பங்களிப்பை வழங்கியிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை மற்றும் அதனை நியாயப்படுத்த முடியாது.

243. இறுதியாக, நாடு சாராத பாத்திரங்களின் மனித உரிமைகளுக்கான கடப்பாடுகள் தொடர்பான குழுவின் கருத்தின் அடிப்படையில். (மேலே அ 2 இனைப் பார்க்கவும்) சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் மீறல்கள் என அது குறிப்பிட்டவற்றை விஞ்சிய மனித உரிமைகள் மீறல்களை குழு கவனத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

தம் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அப்பால், நாடு சாராத பாத்திரங்களுக்கு மனித உரிமைகள் பற்றிய கடப்பாடுகள் உண்டா என்பதைச் சூழவுள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக யுத்த வலயத்துக்கு வெளியே தமிழீழ விடுதலைப் புகளின் தூஷ்பிரயோகங்களை குழு கவனத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

**(ஊ) சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றத்துக்கான தனிநபர் பொறுப்பு**

244. மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட பல சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் தனி நபர் பொறுப்பினைக் கொண்டுள்ளன. ஆயுதந்தரித்த மோதலில் சம்பந்தப்பட்ட எந்தவொரு சாராரினதும் குறிப்பிட்ட தொரு தனிநபரின் பொறுப்புப் பற்றிக் கவனம் செலுத்துவது குழுவின் ஆணையல்ல. கீழே உள்ள தீர்மானங்கள், நம்பகமான குற்றச்சாட்டுக்கள், நிரூபிக்கப்படின், சர்வதேச சட்டத்தின்கீழ் ஒரு குற்றமாக இருக்குமா என்பதைக் குறிப்பிடுவதற்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட குற்றச் செயலுக்குப் பொறுப்பான நபர்களை இனங்காண்பதற்காக மற்றும் அச்சந்தர்ப்பத்தில் அவர்களது மனோநிலையை மதிப்பீடு செய்வதற்கு மேலும் புலனாய்வு தேவைப்படும்.

(84)

245. இலங்கை தரப்பினரான உடன்படிக்கைகளில் விளக்கப்பட்ட குற்றங்கள் அல்லது மரபுவழக்கான சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள் ஆகியவற்றுக்கு குழு அதன் கவனத்தை மட்டுப்படுத்தி, நம்பகமான குற்றச் சாட்டுக்கள் குற்றம் ஒன்று நடந்ததைக் குறிக்கிறதா என்ற பகுப்பாய்வில் கவனம் செலுத்துகிறது. முன்புபோல், மிகவும் பாரதூரமான குற்றங்களை மாத்திரமே குழு கலந்துரையாடுகிறது.

பின்னால் இந்த அறிக்கையில், இலங்கை மீது அவை சுமத்தும் கடமைகள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட செயல்களின் பின்விளைவுகளை மற்றும் ஏனைய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளுக்கான பங்கினையும் அது கவனத்துக்கெடுத்துக்கொள்கிறது.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**
**பகுதி - 21**

**1.போர்க் குற்றங்கள்**

246. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் சில ஆனால் எல்லாவற்றையும் உள்ளடக்காத மீறல்களுக்கு தனிநபர் குற்றப் பொறுப்புக்கான ஏற்பாட்டினைச் சர்வதேச சட்டம் வழங்குகிறது. உள்நாட்டு ஆயுதந்தரித்த மோதல்களின் போதான அத்தகைய மீறல்களை ஜெனீவா உடன்படிக்கைகள் வரிசைப்படுத்தவோ அல்லது விளக்கம் அளிக்கவோ இல்லை என்ற போதிலும், ஏனைய அதிகார பூர்வமான சர்வதேச சட்ட மூலங்கள் இந்தக்குற்றங்கள் பற்றி விளக்கியுள்ளதோடு அவற்றின் குற்றத் தன்மை இப்போது சந்தேகத்திடமற்ற தாகவுள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டம், குறிப்பாக உறுப்புரை கள் 8(2)(இ) மற்றும் 3 இது தொடர்பில் கவனிக்கத் தக்கதாகும். அச் சட்டத்துக்கு இலங்கை ஒரு தரப்பினராக இல்லாத போதிலும், சர்வதேசம் சாராத யுத்தங்களின் போர்க் குற்றங்களின் பட்டியல் மற்றும் விளக்கங்கள் மரபுவழக்கான சர்வதேச சடத்தினை துல்லியமாகப் பிரதிபலிக்கா விட்டாலும் பொதுவாக அதனை எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக தெளிவாக்குவதாகவுள்ளது. ஐ.சி. ஆர். சியின் மரபு வழக்கமான சட்டத்தின் விரிவான ஆய்வின் மீதும் குழு சார்ந்திருக்கிறது.

247. இலங்கை அரசின் சார்பில் செயற்படும் நபர்கள் பின்வரும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் மற்றும் மீறல்கள் எடுத்தியம்புவதாக குழு நம்பு கிறது.

(அ) குறிப்பாக சகலவிதமான கொலைகள், உருக்குலைத்தல், பாலியல் வன்புணர்வு உள்ளிட்ட கொடூரமாக நடத்தல் மற்றும் சித்திரவதை, சொந்த கௌரவம் மீதான அட்டூழியங்கள், குறிப்பாக இழிவுபடுத்தும் மற்றும் பண்பிழந்த விதத்தில் நடத்துதல், காயமடைந்தோரையும் நோயாளிகளையும் சேகரித்துப் பராமரிக்கத் தவறியமை ஆகியவற்றை உள்ளிட்ட பொது உறுப்புரை 3இன் பெரும் மீறல்கள்.

(ஆ) வேண்டுமென்றே பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள்.

(இ) கண்மூடித்தனமான அல்லது ஒவ்வாத தன்மையுடன் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள்

(ஈ) மனிதா[illegible] கள் மற்றும் [illegible] வசதிகள் ஆகியவற்றை உள்ளிட்ட மருத்துவ மற்றும் மனிதாபிமானத் தலங்கள் மீதான தாக்குதல்கள்.

(உ) மக்களைப் பட்டினியில் வைத்தல் மற்றும் மனிதாபிமான நிவாரணத்தை மறுத்தல் மற்றும்.

(ஊ) வலுக்கட்டாயமாகக் காணாமற் போதல்கள்.

(85)

248. தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் செயற்படும் நபர்கள் பின்வரும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் மற்றும் மீறல்கள் எடுத்தியம்புவதாக குழு நம்புகிறது.

(அ) உயிருக்கும் உடலுக்குமான வன்முறைகள் உள்ளிட்ட குறிப்பாக சகல விதமான கொலைகள், உருக்குலைத்தல், கொடூரமாக நடத்தல் (கட்டாயப் பணி உட்பட) மற்றும் சித்திரவதை அத்துடன் பணயக்கைதிகளைப் பிடித்தல் போன்ற பொது உறுப்புரை 3 இன் பெரும் மீறல்கள், மற்றும்

(ஆ) வலுக்கடடாயமாக குழந்தைகள் ஆள்சேர்த்தல்.

**2. மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள்**

249. பொதுமக்கள் மீது பரவலான அல்லது திட்டமிடப்பட்ட விதத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதலின் அமைப்பைக் கொண்ட சில துஷ்பிரயோகங்கள் சர்வதேசக் குற்றம் ஆகலாம் எனவும் சர்வதேச, சட்டம் உறுதிப்படுத்துகிறது. (சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் - யூகோஸ்லேவியா(ஐசிரிவை), ருவண்டா பற்றிய சர்வதேச குற்றவியல் குழு மற்றும் ஐ.சி.சி. சட்டங்கள் உள்ளிட்ட பல சர்வதேச உடன்படிக்கைப் பத்திரங்கள் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களை பொருள்வரையறை செய்துள்ளன. தேவைப்படும் அடிப்படைக் கூறு நிறைவேற்றப்பட்டிருப்பின், ஓர் ஆயுதந்தரித்த மோதலுடன் தொடர்பு இருந்தாலும் இல்லாவிடினும் அவை குற்றச் செயல்களாகும்.

250. பொது மக்களுக்கு எதிரான பரவலான அல்லது திட்டமிடப்பட்ட தாக்குதல் ஒன்று இருப்பதானது மனித இனத்துக்கு எதிரான குற்றங்களுக்கான பிரவேசமாகும்.

பொதுமக்கள் என்ற அர்த்தம் தொடர்பில், இராணுவம் சம்பந்தப்பட்டதை அல்லது போராளிகளை பொதுமக்களிடையே உட்புகுத்துவது பொதுமக்கள் என்ற நிலைமையை மாற்றாது. தாக்குதலை மேற்கொள்பவர் அது பற்றி அறிந்திருக்கவேண்டும் என்பதை ஐ.சி.சி. சட்டம் தேவைப்படுத்துகிறது. ஆயினும், இந்த மனோநிலை தாக்குதலின் சகல விவரங்களையும் அறிந்திருக்க வேண்டும் என்பதை அவசியப் படுத்தவில்லை.

261. இலங்கை அரசைப் பொறுத்தவரையில், யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் மற்றும் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களிலும் அதற்கு முந்தியும் இருக்கலாம். வன்னிப் பொதுமக்கள் மீது பரவலான அல்லது திட்டமிடப்பட்ட தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. பெரும் அளவிலான இடம் பெயர்ந்தோர் மீதான பரவலான ஷெல் தாக்குதல், யுத்தத்தைத் தொடர்ந்து சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் மற்றும் காணாமற் போதல்கள், உணவு மற்றும் மருந்து வகைகளைத் தடுத்தல், பெரும் அளவிலான சிறைப்பிடித்தல் மற் றும் பாரபட்ச அடிப்படையிலான வற்றை உள்ளிட்ட ஏனைய வன்முறைகள் [illegible]. இத்தாக்குதல் உள் [illegible] மனித இனத்துக்கு எதிரான குற்றங் களாகவுள்ள குறிப்பிட்ட செயல்கள் தொடர்பாக, நம்பகமான குற்றச்சாட்டுக்களும் வன்முறைகளும் மனித இனத் துக்கு எதிராக அரசு மேற்கொண்ட பின் வரும் குற்றங்களைக் குறிப்பதாகவுள்ளன.

(86)

(அ) கொலை: 'குற்றம் சுமத்தப்பட்டவரின் செயல்கள் அல்லது புறக்கணிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட ஒருவரின் மரணம் கொலையின் அடிப்படைக் கூறுகளைக் கொண்டதாகவுள்ளதோடு, அந்த இடத்தில் குற்றவாளி நடந்து கொண்ட விதம் பாதிக்கப்பட்டவரின் மரணத்துக்குக் கணிசமான காரணமாயிருந்தது' என்று ஐசிரிவை குறிப்பிடுகிறது.

கொலைக்கான அதற்குத் தேவைப்படும் மனோநிலை மனித இனத்துக்கு எதிரான குற்றமாகக் கொள்ளப்படுவதற்கு திட்டமிடுவதற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயில்லை என்பதோடு, மனித உயிரைத் துச்சமாக மதிப்பதை உள்ளடக்குகிறது. இலங்கை இராணுவம் பரவலான ஷெல்தாக்குதல் மூலம் பொது மக்களைக் கொலை செய்தது. மனித இனத்துக்கு எதிரான குற்றமான கொலை என்பதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் ஆதரிக்கின்றன.

(ஆ)

நிர்மூலமாக்குதல், ஐசிஆர்சியின் சட்டத் தின் கீழ், 'சனத்தொகையின் ஒரு பகுதி யின் அழிவை ஏற்படுத்துவதற்காக ஏனை யவற்றுள் உணவு மற்றும் மருந்து வகை களுக்கான பிரவேசத்தைத் தடுத்து வேண்டுமென்றே வாழ்க்கை நிலைமை களை ஏற்படுத்தல்' இனை நிர்மூலமாக்குதல் உள்ளடக்குகிறது (உறுப்புரை 7(2)(ஆ). நிர்மூலமாக்கப்படுவதற்கான சனத்தொகையின் பகுதி 'கணிசமான எண்ணிக்கையாக' இருத்தல் வேண்டும். யுத்த சூனிய வலயத்தில் இறுதி மாதங்களில் பொதுமக்கள் மீது விதிக்கப்பட்ட நிலைமைகள் பொதுமக்களின்கணிசமானதொருபகுதியை அழிப்பதை நோக்காகக் கொண்டிருந்த என்பதால், நிர்மூலமாக்கும் மனித இனத்துக்கு எதிரான குற்றம் பற்றிய தீர்ப்புக்கு நம்பகமான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமாக இருக்கின்றன.

(இ) சிறை பிடித்தல்: பொதுமக்கள் நியாயமான காரணங்கள் இன்றி, விசாரணையின்றி அல்லது சட்ட அடிப்படையின்றி தடுத்துவைக்கப்படுவது சிறை பிடித்தலை மனித இனத்துக்கு எதிரானதொரு குற்றமாக்குகிறது. நியாயமான காரணங்கள் இன்றி ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்தோரை மெனிக் பாமில் தடுத்து வைப்பது மூலம் சிறை பிடிப்பது தொடர்பான மனித இனத்துக்கு எதிரான குற்றத்தின் தீர்ப்புக்கு நம்பகமான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமாக உள்ளன.

(ஈ) துன்புறுத்தல்: தனிநபர் ஒருவரின் அடிப்படை அல்லது அடிப்படை உரிமையினை அனுபவிப்பதை மீறுவதை நோக்காகக்கொண்டு சாதி, மத அல்லது அரசியல் மீதான பாரபட்சமான செயல் அல்லது புறக்கணிப்பு துன்புறுத்தலாகும் என்பதோடு, மனித இனத்துக்கு எதிரான குற்றங்களாகக் கணிக்கப்படும் ஏனைய செயல்களின் அதே பாரதூரத்தன்மையை அவை கொண்டுள்ளன.

இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஏனைய செயல்கள் போன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என அரசு நினைக்கும் வன்னியிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிரான சாதி அல்லது அரசியல் காரணங்களின் அடிப்படையிலான செயல்கள் மனித இனத்துக்கு எதிரான துன்புறுத்தலாகும் என்பதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் ஆதரிக்கின்றன.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்டத்திலான தாச்சிப் போட்டி; தாவடி காளியம்மன் சம்பியனானது

யாழ்ப்பாணம்,மே 23

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்திய மாவட்ட மட்டத் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் தாவடி காளியம்மன் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

கடந்த வாரம் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தாவடி காளியம்மன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் தாவடி காளியம்மன் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற புள்ளி அடிப்படையில் கட்டுடை விநாயகரை வென்று சம்பியனானது. (த-23)



கரணவாய் தெற்கு விபுலானந்தர் பாலர் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் மங்கள விளக்கேற்றுகிறார். ஏனைய விருந்தினர்கள் அருகில் நிற்கின்றனர். (236)

# மட்டுவில் மோகனதாஸின் கரபந்தாட்ட இறுதிப் போட்டி

## ஆவரங்கால் கிண்ணம் கைப்பற்றியது

சாவகச்சேரி, மே 23

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தால் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் (செற் அப்) தெரிவான இருகழகங்களுக்கு இடையேயான கரபந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசில் வழங்கும் நிகழ்வும் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் சி. தயாளன் தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு வெற்றியீட்டிய கழகத்துக்கு வெற்றிக் கேடயத்தை வழங்கினார்.

இந்த கரபந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் இந்தப் போட்டிக்கான கேடயத்தை தனதாக்கிக் கொண்டது. இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், தென்மாராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்த சீலன் அஞ்சலிதேவி சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் செல்வி தி. தர்சினி உட்பட பாடசாலை அதிபர்கள், விளையாட்டுக்கழகப் பிரதிநிதிகள் மாதர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். மைதானத்தில் மட்டுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

நிகழ்வில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்துக்கு அன்றும் இன்றும் பெருமை சேர்த்த விளையாட்டு வீரர்கள் கௌரவிக்கப்பட்டு பதக்கம் அணிவித்து நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

1965 ஆம் ஆண்டு இந்தக் கழகத்தில் கரபந்தாட்ட அணியில் பங்குபற்றி அணிக்குப் பெருமை சேர்த்தவர்கள் இந்த கௌரவிப்பில் அடங்குவர். சுமார் முப்பது வருடங்களுக்குப் பின்னர் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி (செற்அப்) இந்த மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-131)

# மாகாண விளையாட்டுக் கழகங்களை பதிந்து கையேடு தயாரிக்க ஏற்பாடு

கொழும்புத்துறை, மே.23

வடமாகாணத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களின் பதிவுகளை மீளமைத்து அதன் விவரங்களைக் கழக, பிரதேச, செயலக, மாவட்ட, மாகாண மட்ட வகைப்படுத்தலுடன் கையேடு தயாரித்துப் பேணும் நடவடிக்கையை வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணமாக இயங்கியபோது பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழங்கள் மற்றும் பதிவுகளை மேற்கொள்ள விரும்பும் புதிய கழகங்கள் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் பதியப்பட்டிருத்தல் வேண்டுமென ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.இந்த நடவடிக்கையின் முதற் கட்டமாக பிரதேச செயலகங்களில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டு கழகங்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

எனவே பின்வரும் ஆவணங்களை தத்தமது பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட கழகத்தின் யாப்பு- கிராம உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலுடன்.
* பொதுக் கூட்டத்துக்குவருகை தந்த அனைவரதும் பெயர், முகவரி, கையொப்பம் அடங்கிய படிவம் உறுதிப்படுத்தலுடன்.
* பொதுக் கூட்டத்தின் கூட்ட அறிக்கையின் பிரதி, பூரணப் படுத்தப்பட்ட அங்கத்தவர் படிவம், பொதுக்கூட்டத்துக்கான விளம்பரத்தின் பிரதி உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-135)

# கராத்தே போட்டியில் யாழ்.வீரர்கள் சாதனை

யாழ்ப்பாணம், மே 23




கொழும்பு சோட்டோகான் கராத்தே டூ அசோசியேசனால் கடந்த வாரம் களனிப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட தேசிய கராத்தே பயிற்சி முகாமில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சென்சேய் டி.அன்ரோ டினேஸ், சென்சேய் ஆர்.ரஞ்சித் கைலேந்திரகுமார் ஆகியோர் பங்குபற்றினர்.

இவர்கள் இருவரும் பயிற்சி முகாமின் பின் நடைபெற்ற வருடாந்த கராத்தே சுற்றுப்போட்டியில் கறுப்புப் பட்டிக்கான திறந்த காட்டா போட்டியில் டி.அன்ரோ டினேஸ் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் கறுப்புப் பட்டிக்கான திறந்த குமித்தே போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் திறந்த கறுப்புப் பட்டிக்கான குமித்தே போட்டியில் ஆ.ரஞ்சித் கைலேந்திரகுமார் முதலாம் இடத்தையும் பெற்று தங்கப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். (ஐ-23

# தீவக வலயத்தில் இம்முறையும் சாதனை படைத்தது காவலூர் சென்.அன்ரனீஸ் 12 ஆவது வருடமாக

காவலூர், மே.23

தீவக வலய பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் 12 வருடமாக முதலாம் இடம்பெற்று சாதனை படைத்தது ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரி.

தீவக வலய வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரி முதலாம் இடம்பெற்று 12 ஆவது வருடமும் நாங்கள் தான் தீவகத்தின் ராஜா என்பதை மீண்டும் நிரூபித்துள்ளனர்.

தீவக வலய ஏனைய பாடசாலைகள் இந்தப் பாடசாலையுடன் போட்டி போட முடியாது என்று இந்த வருடம் இந்தப் பாடசாலையுடன் போட்டி போடுவதற்கு சமுகம் தரவில்லை.

இந்தப் பாடசாலை கடந்த ஆண்டுகளில் மாவட்டம், மாகாணம், தேசியமட்ட போட்டிகளில் சாதனைகள் படைத்தமை குறிப்பிடத்தக்கது.

பெண்கள் பிரிவு உடற்பயிற்சிப் போட்டியில் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்று புதிய சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-325)



கைதடி கலைநகர் வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வுக்கு பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட தொழிலதிபர் செ.பஞ்சலிங்கம் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். அருகில் முன்பள்ளியின் பெற்றோர் சங்கத் தலைவி திரு[illegible] ஜெனித்தா, வளர்மதி சனசமூக நிலையத்தின் துணை[illegible] செ.மதனராசன் ஆகியோர் நிற்கின்றனர். (288)

# முல்லையில் கராத்தே

யாழ்ப்பாணம், மே.23

வடமாகாண பெருவிளையாட்டுப் போட்டிகள் தொடரில் ஆண், பெண் இருபாலாருக்குமான காரத்தே சுற்றுப் போட்டி எதிர்வரும் 28 ஆம், 29 [illegible] ளது. (ஐ-23)

# முல்லை மாவட்ட பெருவிளையாட்டுக்களில் சாதனை படைத்தது முல்லை சென்றல்

அளம்பில், மே.23

நடந்து முடிந்த முல்லைத் தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் மூன்று முதலாம் இடங்களையும் முல்லைத் தீவு மகாவித்தியாலயம் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளது.

ஆண்களுக்கான பெருவிளையாட்டுக்களான துடுப்பாட்டம், கபடி மற்றும் எல்லே போட்டிகளிலேயே முதலாம் இடங்களைப் பெற்று சம்பியனைத் தட்டிக் கொண்டது. மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முல்லைத்தீவு ம.வி. தகுதி பெற்றுள்ளது. (ஐ-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுத்தடிக்காமல் உண்மையான.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பால் சரியான அதிகாரப் பகிர்வைகொடுங்கள் என்பதே.

5 ஆவது பந்தியில் ஒரு படி மேலே சென்று மனித உரிமை மீறல்களை விசாரிக்கும்படி இந்தியா கேட்கின்றது.

உள்நாட்டு விசாரணை ஒன் றை நடத்தும்படி இந்தியா கேட்கின்றதா அல்லது பான் கீ- மூனின் நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது போல் சர்வதேச விசாரணையொன்றை கோருகின்றதா என்பது தெளிவில்லாமல் இருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு புலிகளுக் கெதிரான யுத்தத்தின் இறுதிக்கட்ட நடவடிக்கைகள் குறித்து நிபுணர் குழு ஆராய்ந்துள்ளது. நிபுணர் குழுவின் அறிக்கையிலுள்ளவைகளை இந்தியா வெளியில் சொல்லாமலே அங்கீகரிப்பதாக சிலர் வாதிக்கலாம். ஆனால் இந்தியா வேண்டுமென்றே கேள்விக்கு பதிலில்லாமல் அப்படியே விட்டிருப்பதுபோல் தெரிகின்றது. பின்னொரு சமயம் தேவைப்படும் போது இலங்கையின் மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தப்பயன்படுத்தும் நோக்கமிருக்கலாம் என்று வேறு சிலர் கருதலாம். சீனா பக்கமாக இன்னும் அதிகமாக இலங்கை சாயும் போது இந்தியா இதனைப்பயன்படுத்தக்கூடும்.

அவ்வாறான ஒரு விசாரணை முற்றுமுழுதாக உள்நாட்டு விசாரணையாகவே இருக்கும் சர்வதேச விசாரணையாக இருக்க மாட்டாது என்ற வகையில் இந்தியாவிடம் உறுதிமொழியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருக்கிறது. வெளிநாட்டு அழுத்தங்களை குறிப்பாக போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு மேற்குநாடுகள் வற்புறுத்தி வரும் இந்த சமயத்தில் இது இலங்கைக்கு பெரும் பின்னடைவான நிலைமையாகும்.

இறுதிப்போரின் போது 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள், என்ற உறுதிப்படுத்தப்படாத எண்ணிக்கையை இந்தியாவைக் கொண்டு மறுதலிக்கச்செய்ய இலங்கையால் முடியாமல் போயிருக்கிறது. இதே எண்ணிக்கையை கடந்த வாரம் ஐ.நா. வின் மனித உரிமைகள் உதவி செயலாளர் பரோஸை வாலெரி அமோஸ் திரும்பவும் ஐ.நா. பாதுகாப்புச்சபையில் குறிப்பிட்டிருந்தார். அதனை இலங்கை மறுத்திருந்தது.

## பொதுக்கூட்டம்

சுதேச வைத்திய சபையின் பொதுக்கூட்டம் யாழ். இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

சுதேச வைத்திய சபைத்தலைவர் சு.ஸ்ரீவிக்கினேஸ்வரா தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

(ற-135)

## மரண அறிவித்தல்

### சுப்பையா சண்முகநாதன்



கோப்பாய் தெற்கு, கும்பப்பிள்ளையைப் பிறப்பிடமாகவும், பழைய வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சண்முகநாதன் (21.05.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா -கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காந்தவதனி(கனடா), பகீரதி, சிவரஞ்சன்(பெல்ஜியம்), குகரஞ்சன், கிருபாரஞ்சன்(கனடா), கிருஷ்ணபவானி ஆகியோரின் அன்புத் தந்தையும், வீரசிங்கம்(கனடா), ரஜனி(கனடா), ஸ்ரீதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அனுஷியந்தன் (யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி), லதீசன்(கோப்பாய், நாவலர் தமிழ் வித்தியாலயம்), டக்ஷனா(கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, கனகசபை, பொன்னுச்சாமி, குருசாமி, இராசேந்திரம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (25.05.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழையவீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(4441)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னப்பு ஜேசுதாசன் (பெரியதம்பி)



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், 16/3, கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு ஜேசுதாசன் நேற்று (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு- மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு- சூசானம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஞானம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அலோசியஸ் மற்றும் மரியதாஸ், சேவியர், அமலதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்றூ, காலஞ்சென்ற பிரதீபன் மற்றும் கொண்சி, பெனோஜன், பெனோஜினி, இளங்கோ, கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பெனிற்றா, அருள், யோகேந்திரன், மாலா, ஜேசுதாசன், பிரியா, வினோத் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவீனா, ராஜன், கெவின், லியோன், டன்சிகா, அபிஷனா, அக்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.05.2011) திங்கட்கிழமை பி.ப 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து இறுதி அஞ்சலிக்காக புனித திரேசம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/3, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.


(4438)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

## இராமநாதன் லோகநாதன் (MA I)

(செயலாளர், பிரதேச சபை காரைநகர்)



### சிறந்த சைவ அறப்பணியாளர்
### சமூகசேவகர்

அரச சேவையதில் பணிகள் பல ஆற்றி வரும் வேளையிலே புதிதாகத்
தோற்றம் பெற்ற காரைநகர் பிரதேச சபைதனிலே
செயலாளராகத் தான் அமர்ந்து - மக்கள் சேவையை உயர்வெனக் கொண்டு
தனது நலத்தையும் கருதாது இறுதிவரை ஊழியரை திறமையாக வழிநடத்தி
காரைநகர்ப் பிரதேசம் பொலிவுற பல பிரதேச வீதிகள், பொது மண்டபங்கள்,
முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், மேன்மையுறு கட்டடங்கள்
பல அமைத்துப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் வசதிகள் பல செய்து
கசூரினா சுற்றுலா மையத்தை பொலிவுறு இடமாக மாற்றுவதற்கு
திடம் பூண்டு நின்ற வேளைதனில் காரை ஈழத்து சிதம்பரத்தான்
குடமுழுக்கு காண நிற்கும் வேளையிலே திடீரென வானுலக
சிறப்புவேண்டி சென்றனையோ.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
நயினை நாகபூஷணி அம்மனை
பிரார்த்திப்போமாக.

ஊழியர் நலன்புரி சங்கம்,
காரைநகர்ப் பிரதேச சபை, காரைநகர்.

(49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தம்பையா
கணபதிப்பிள்ளை
(முன்னாள் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்,புலோலி )
பிறப்பு : 20.12.1930
இறப்பு : 14.05.2002

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை
பொன்னம்மா
பிறப்பு : 05.04.1924
இறப்பு : 23.05.2008

வையத்தில் எம்மை வாழ்வாங்கு வாழ வைத்த எம் தெய்வங்களே நீங்கள் போன பாதை தெரியாது நாளும் நினைந்து ஏங்கி வாடுகின்றோம். என்றும் உங்கள் நினைவுகள் சுமந்து நிற்கும்

சாயி இல்லம், புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி. (சி/160)(34) பிள்ளைகள்.

---

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## பதவி வெற்றிடம்

01.பதவி - லொறிச் சாரதி
சம்பளக் குறியீட்டு இல. : 312/14(165/88)
சம்பள அளவுத்திட்டம் : 9700 (80 x 10-85 x 10)11350 (66/2006) இன்படி
வயதெல்லை : 18-45
பால் : ஆண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :
(அ) 5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ்/லொறி/இழுவைப் பெட்டியுடன் ரக்ரர் சாரதி அனுமதிப்பத்திரமும் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவமும்.

02. பதவி - விற்பனை உதவியாளர்
சம்பளக் குறியீட்டு இல. : 308/17(165/88)
சம்பள அளவுத்திட்டம் : 8950(65 x 10-70 x 10)10300 (66/2006) இன்படி
வயதெல்லை : 18-45
பால் : ஆண், பெண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :
(அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச்சான்றிதழ் அல்லது
(ஆ) 8ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று(03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

விண்ணப்ப முடிவு திகதி : 06.06.2011

குறிப்பு : கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது, சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிழ், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு விண்ணப்புங்கள் யாவும் ''பொதுமுகாமையாளர், வலி.கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தபால் உறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் தவறாது குறிப்பிடல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பொது முகாமையாளர்**
வலி.கிழக்கு (தெ.ப.) ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.
(சி/164)(34)

---

# மரண அறிவித்தல்கள்

## எதிர்மனசிங்கம் அன்ரன்



யாழ். மருதடி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் சேவியர்கடைச் சந்தியையும் கரடிப்போக்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட எதிர்மனசிங்கம் அன்ரன் நேற்று (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இந்திரா தேவியின் அன்புக் கணவரும் யசோதரனின் பாசமிகு தந்தையும், நித்திய கலாவின் மாமனாரும், அபி, ஆதி, கனி, சீமான் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.05.2011) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சி திரேசம்மா கோயிலில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத வீதி,
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

தகவல்:
அ.யசோதரன்
(மகன்)
(சி/161)

## எட்வேட் செல்வநாதன்



மாதகலைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட் செல்வநாதன் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி) நேற்று (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை செல்வநாதன் - ஆசீர்வாதம்மா தம்பதியரின் அன்பு மகனும், திரேசம்மா(ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜோசப் செல்வநாதன், காலஞ்சென்ற அன்ரன் செல்வநாதன் திருமதி மேரிதிரேசா அமிர்தநாயகம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற S.A குணரத்தினம் மற்றும் அன்னபூரணம், காலஞ்சென்றவர்களான அலேசு வேதநாயகம்- ஞானரத்தினம், அமிர்தநாயகம் ஆகியோரின் மைத்துனரும், சேவியர் புஸ்பராஜா, புஸ்ப்பலதா(ஆசிரியை, ஆனைக்கோட்டை R.C பாடசாலை) யூடின் புஸ்பநாயகம், புஸ்பமாலா(ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு பெரிய தந்தையும், சுபோதினி, கிருபைநாயகம், நிறஞ்சினி, திருநாயகம், அமிர்தினி ஆகியோரின் மாமனாரும் போல் பிரியன், அன்றூ டிலான், டர்ணி, லவனி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.05.2011) திங்கட்கிழமை ஆனைக்கோட்டை இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு அடைக்கல நாயகி ஆலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு. திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அடைக்கல நாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்
ஆனைக்கோட்டை.

தகவல்:
திரேசம்மா செல்வநாதன்.
(மனைவி)
(4442)

---

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றப்பட்டிருந்தது. அச்சமயம் இராணுவத்தினரும் பொலிஸாரும் அவ்விடத்துக்கு விரைந்து வந்து தம்மிடம் போட்டி நடத்துவதற்கான அனுமதி பெறப்படவில்லை எனக் கூறியதோடு, ஏற்றப்பட்ட கழகக்கொடியையும் கீழிறக்குமாறு கழக நிர்வாகத்தினரை நிர்ப்பந்தித்தனர்.

எனினும் நீண்ட நேர வாக்குவாதத்தின் பின்னர் நிகழ்வை தொடருமாறு கூறிவிட்டு இராணுவத்தினரும் பொலிஸாரும் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

இச் சம்பவத்தால் வடமராட்சிப் பகுதியில் நேற்று சிறிதுநேரம் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது. (4)

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரும், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய உறுப்பினரும், எமது நிதியத்துக்கு நிதி வழங்கியவருமாகிய அருணாசலம் அகிலதாஸ் அவர்களின் அன்புத் தந்தை

*கனகசபை அருணாசலம்*

அவர்களின் மறைவுச் செய்தி எமக்கு ஆழ்ந்த துயரத்தைத் தந்துள்ளது. அன்னாரைப் பிரிந்து துயருற்றிருக்கும் பிள்ளைகள், உறவினர்கள், உற்றத்தார் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி,**
**பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்.**
(சி/159)

## காணி விற்பனைக்கு

3 பரப்பு விசாலமுள்ள காணி நல்லூர் வலயக்கல்வி அலுவலகத்துக்கும் மாநகர சபை அலுவலகத்துக்கும் அருகில் விற்பனைக்குண்டு.தரகர்தேவையில்லை.

**தொடர்பு:- 0772363537.**

## தேவை

ஊர்ச்சேவல், ஊர்ப்பேடு, விறாத்துக் குஞ்சு என்பன கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.
தாசன் பாம் 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம் 0774175701

## மணமகன் தேவை

உள்ளூர் அல்லது வெளிநாடு 1977ஆம் ஆண்டு, 7 இல் செவ்வாய், கிரகபாவம் 83 ¼, நட்சத்திரம் மகம் உடைய பெண்ணுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0750718365

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தச் சட்ட மூல அமுலாக்கம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சு ஆகியன தொடர்பில் இந்தியா அழுத்தங்களை பிரயோகித்து வருகிறது.

அதிகாரப் பகிர்வு குறித்து விரிவாகப் பேசவும், கைதிகளை விடுதலை செய்யவும் அரசு இணங்கியுள்ளது. கடந்த காலங்களில் இந்த விடயங்கள் தொடர்பில் பேச்சு நடத்த அரசு ஆர்வம் காட்டவில்லை. போலியான வாக்குறுதிகளே எமக்கு அளிக்கப்பட்டன.

தற்போது ஆக்கபூர்வமான முறையில் பேச்சுகளை நடத்துவதற்கு அரசு ஆர்வம் காட்டி வருகிறது- இப்படி அவர் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிகழ்வதற்கான சாத்தியம்

# தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையை மீண்டும் இயங்கவைக்கத் துரித நடவடிக்கை


## நிலைமையைப் பார்வையிட்டார் இந்தியத் துணைத்தூதுவர் மகாலிங்கம்

வலி.வடக்கு, மே 23

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வைத்தியசாலை இயக்குவதற்கு முழுவீச்சில் ஏற்பாடுகளைச் செய்துவரும் பணிப்பாளர் சபையினர், இந்தியத் தூதரகத்தின் உதவியையும் நாடியுள்ளனர்.

இது குறித்த கோரிக்கையை அடுத்து வடமாகாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் நேரில் சென்று கூட்டுறவு வைத்தியசாலையின் தற்போதைய நிலைமையைப் பார்வையிட்டார்.



தொடர்ந்து வைத்தியசாலை பணிப்பாளர் சபையினருடன் கலந்துரையாடிய மகாலிங்கம், பொதுமக்களின் ஆலோசனைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பை அடுத்து துணைத் தூதுவர் மகாலிங்கம், வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதாக உறுதியளித்தார். (ஒ-86)

# யுத்த வெற்றி ஒத்திகை; காலிமுகத்திடல் வீதி மூடப்படும்

கொழும்பு, மே 23

காலிமுகத்திடலில் நடைபெறவுள்ள யுத்த வெற்றிவிழா ஒத்திகையை முன்னிட்டு, நேற்று முதல் 27ஆம் திகதிவரை காலி முகத்திடல் சுற்று வட்டம் தொடக்கம் செரமிக் சுற்று வட்டம் வரையிலான வீதி காலை 6 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை வாகனப் போக்குவரத்துக்காகத் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்று பொலிஸ்தலைமை அலுவலகம் தெரிவிக்கின்றது.

காலி வீதி ஊடாகக் கொழும்புக்கு வரும் கனரக வாகனங்கள் கொள்ளுப்பிட்டிச் சந்தியின் தென் பக்கமாகத் திரும்பி பித்தல சந்தியினூடாகவும் ஏனைய அனைத்து வாகனங்களும் காலி முகத்திடல் சுற்று வட்டத்தின் தென்பக்கமாகக் கொழும்புக்குப் பிரவேசிக்க வழிசமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப் படுகிறது. (சி)

# இராணுவப் பயிற்சிக்கு மாணவர்களை அனுப்ப வேண்டாம் - ஜே.வி.பி. வேண்டுகோள்

கொழும்பு, மே 23

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக்காகத் தமிழ் மாணவர்களை இராணுவ முகாமுக்கு கொண்டு செல்வது அவர்களின் சமூகத்தில் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என ஜே.வி.பி எச்சரித்துள்ளது.

பல்கலைகழக பாடமொன்றை தேர்ச்சிபெற்ற பேராசிரியர்கள், விரிவுரையாளர்களே தயார் செய்கின்றனர். உயர்தரம் வரை அதற்குப் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களே பாடத்திட்டங்களைத் தயாரிக்கின்றன. தலைமைத்துவப் பயற்சியின் மூலம் மஹிந்த சிந்தனையையே படிப்பிக்க முனைகின்றனர்.

பிள்ளைகள் மீது அரசியலை சுமத்தி, இராணுவ அழுத்தத்தின் கீழ் அவர்களை அடிபணியவைத்து அவர்கள் நாட்டின் எதிர்காலம் தொடர்பாக சுயமாக சிந்திப்பதைத்தடுக்கவே இதனைச் செய்கின்றனர்.

ஒருபிள்ளையைக் கூட இந்தப் பயிற்சிக்கு அனுப்ப வேண்டாம் என நாம் பெற்றோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்பதற்கு சட்டங்கள் இல்லை. பல்கலைக்கழகத்திற்கு செல்ல முன்னர் அவ்வாறானதொரு பாடத்திட்டத்தைப் பயில வேண்டும் என்று எந்தவொரு சட்டமும் கிடையாது. தமது பிள்ளைகள் திறந்த மனதுடன் எதனையாவது சிந்திக்க வேண்டும் எனப் பெற்றோர் நினைப்பார்களாயின் இந்தப் பாடத்திட்டத்துக்குத் தமது பிள்ளைகளை அவர்கள் அனுப்பக் கூடாது.

யுத்தகாலங்களில் இராணுவத்தினர் தொடர்பாகத் தமிழ் பிள்ளைகள் மத்தியில் எந்தவிதமான எண்ணம் இருந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற யுத்தத்தின்போது தமது பிரதேசங்களில் யுத்தத்துக்குத் தலைமைத்துவம் கொடுத்தவர்கள் இராணுவத்தினர் என்ற எண்ணமே அவர்களுக்கு உள்ளது.

எனவே இந்தத் தலைமைத்துவப் பயிற்சியானது பல சமூகப் பிரச்சினைகளை தோற்றுவிக்கும். கல்வித்துறையில் பாதிப்பை ஏற்படுத்தும். தமக்குத் தேவையானவர்களை உருவாக்கிக் கொள்வதற்காக இராணுவத்தினரைப் பயன்படுத்தும் முயற்சிர இதுவாகும். இதனை ஒருபோதும் செய்யக் கூடாது என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடு - என்றார்.

# அரசின் தூர நோக்கற்ற செயற்பாடுகளே இன்றைய நிலைமைக்கு முழுக் காரணம்

## சாடுகிறது ஐ.தே. கட்சி

கொழும்பு. மே 23

நாடு இன்று எதிர்நோக்கியுள்ள சிக்கலான சூழ்நிலையும், அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அரசின் யதார்த்தமான அவல நிலையை எடுத்துக்காட்டுகின்றன. அரசின் தூரநோக்கற்ற செயற்பாடுகளே இதற்குக் காரணம் ஆகும்.

- இவ்வாறு ஐ.தே.க. தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. அதில் உரை யாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அத்தியாவசியப் பொருள்களின் விலை மற்றும் சேவைகளுக்கு அறவிடப்படும் கட்டணங்கள் அதிகரித்துள்ளமையால் இன்று மக்கள் செய்வதறியாது தடுமாறுகின்றனர்.

இந்த நிலையில், வாக்குறுதி அளித்தபடி சம்பளத்தை அதிகரிக்காமல் அரச அமைச்சர்களுக்கும், பல்வேறு அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியவற்றின் பிரதானிகளுக்கும் தமது அடிவருடிகளுக்கும் அரசு சம்பளத்தை அதிகரித்துள்ளது.

நாட்டின் இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பை வழங்குவதற்காக வருடாந்தம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் தொழில் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். ஆனால், அரசு புதிதாக 30 ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று கூறி மக்களை ஏமாற்ற முனைகின்றது.

அரசின் தூரநோக்கற்ற செயற்பாடு மற்றும் திறமையின்மை காரணமாகக் கல்வித்துறையும் சுகாதாரத்துறையும் முழுமையாகச் சீரழிந்து காணப்படுகின்றன.

ஆரம்பக் கல்வி, உயர் கல்வி ஆகியன முழுமையாகச் சீரழிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் சம்பளப் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களை தேசத் துரோகிகளாக சித்திரித்து அவர்களை அவமதித்து முறையான சமபளம் வழங்காமல் இழுத்தடிப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் முறையாகத் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடரவிடாமல் அவர்களுக்கு பலாத்காரமாக இராணுவப் பயிற்சி வழங்க முனைவதை நாம் எதிர்ப்பதுடன் அதற்கெதிராக வழக்கொன்றையும் தாக்கல் செய்துள்ளோம்.

இலங்கையில் வடக்கு, கிழக்குப் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை விமர்சிக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியா சென்று அவர்களது நிலைப்பாட்டைப் பாராட்டி உள்ளார். அத்துடன் அதற்கு இணக்கம் தெரிவித்து இந்திய வெளிவிவ கார அமைச்சருடன் இணைந்து கூட்டறிக்கையையும் வெளியிட்டுள்ளார்.

இதிலிருந்து இந்த அரசுக்கு முறையான, தெளிவான வெளிநாட்டுக் கொள்கை இல்லை என்பது புலனாகின்றது. - என்றார் ரவி கருணாநாயக்க. (ஒ-சி)

# நிகழ்வுகள்

### வேலணையில் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மே 23

வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியும் மைதானத் திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் க. குமரேஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்துகொள்வார். இந்த நிகழ்வுகளுடன் உத்தியோகத்தர் விடுதி அறை திறப்பு விழாவும் இடம்பெறவுள்ளது. (ற-313-7)

### அறநெறிப்பாடசாலை கலந்துரையாடல்

தென்மராட்சி, மே 23

தென்மராட்சிப் பிரதேச இந்து அறநெறி அபிவிருத்திப் பாடசாலைகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரதேச செயலக கூட்டத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசத்தில் உள்ள அனைத்து இந்து அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் பிரதேச இந்து அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ற-207)

### 'சிங்கர்' மீள் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 23

சிங்கர் சேவிஸ் ப்ளஸ் நிறுவனத்தின் மீள் திறப்பு விழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் உள்ள நிலையத்தில் இடம்பெறும். (ஒ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிரான போராட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க முடிவு

இலங்கை மீது அழுத்தம் செலுத்துவரும் இந்தியாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்களை நடத்த ஜே.வி.பியும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும் தீர்மானித்துள்ளன.

அரசியலமைப்புத் திருத்தம், மனிதஉரிமை மீறல்கள் குறித்த விசாரணை, இந்தியாவின் வர்த்தகத் திட்டங்கள் என்பன தொடர்பாக, அண்மையில் புதுடில்லி சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு இந்திய அரசு கடும் அழுத்தங்களைக் கொடுத்திருந்தது.

இதனால் விசனமடைந்துள்ள ஜே.வி.பியும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும், இதனை இலங்கையின் இறைமையை மீறும் செயல் என்று கண்டித்துள்ளதுடன் நாடு தழுவிய போராட்டங்களை இந்தியாவுக்கு எதிராக மேற்கொள்ளப் போவதாகவும் அறிவித்துள்ளன.

தமது அமைப்பு, இந்தியாவின் அதிகாரத்தைக் கண்டித்து நாடு தழுவிய ரீதியில் கருத்தரங்குகளையும் பேரணிகளையும் நடத்தப் போவதாக அரச சார்பு அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேர தெரிவித்துள்ளார்.

மே 30ஆம் திகதி கொழும்பில் முதலாவது எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இந்தியாவுடன் இணைந்து கூட்டறிக்கை வெளியிட இணங்கியிருக்கக் கூடாது. நாம் எந்தவொரு வெளிநாடும் கூறுவதைக் கேட்கவேண்டியதில்லை. எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ளலாம்.

13 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வதற்காக நாம் பரப்புரை செய்யவுள்ளோம். அதே வேளை இந்தியாவோ அதனை அடிப்படையாக வைத்து அதிகாரப் பகிர்வை நடைமுறைப் படுத்துமாறு கூறியுள்ளது. என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க, மேற்கு நாடுகள் தீர்வு காணுமாறு கூறிய போது அந்தத் திட்டங்களை நிராகரித்த அரசு, இந்தியா அதைக் கூறிய போது எதிர்ப்புத் தெரிவிக்காமல் ஏற்றுக் கொண்டுள்ளது.

எமது அரசியலமைப்பை மாற்றுமாறு இந்தியா கோர முடியாது. இது ஒரு உள்ளூர் விவகாரம்-என்று கூறியுள்ளார்.

தீவிரமான விடயங்கள் குறித்து இந்தியாவுடன் வெளிவிவகார அமைச்சர் மேற்கொண்டுள்ள இணக்கப்பாட்டுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்களை நடத்தப் போவதாகவும் ஜே.வி.பி. கூறியுள்ளது. (தமிழ்வின்)(10)

## பல்கலை மாணவர்கள் பயிற்சிக்குச் சென்றனர்

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் வழங்கப்படவுள்ள தலைமைத்துவ பயிற்சிகளில் கலந்து கொள்ளவென நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை 80 சதவீத மாணவர்கள் வருகை தந்திருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது இப்பயிற்சிக்கு கிடைத்த பாரிய வெற்றி என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

இதை சிலர் இராணுவப் பயிற்சி எனக் கூறுகின்றனர். ஆனால் பல்கலைக்கழக மாணவர்களின் நேர்மையான சிந்தனையும் மனோநிலையையும் மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.(தமிழ் மிரர்) (10)

## மலேசியாவில் மண்சரிவு: 16 பேர் பலி!

மலேசியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மண்சரிவில் 16 பேர் பலியாகியுள்ளதுடன், 9 பேர் காயமடைந்துள்ளனர்.

மலேசியத் தலைநகரிலுள்ள அநாதை விடுதியொன்றே இந்த மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளது. மலேசியாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடும் மழை பெய்தநிலையில் இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

மண்சரிவில் அகப்பட்டு பல சிறுவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் இவர்களைத் தேடும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை 8 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களின் 15 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் விடுதிப் பராமரிப்பாளரும் மண்சரிவில் அகப்பட்டு பலியாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(தமிழ்மிரர்)(10)

## மட்டக்களப்பில் காணாமற்போன இளைஞர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொக்குவில் கிராமத்தில் வசித்துவந்த டிலக்ஸன் ஆனந்தராஜா (19) என்ற இளைஞர் கடந்த 15 ஆம் திகதி இலங்கை இராணுவத்தினரின் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டபின் காணாமற் போயுள்ளார். இது தொடர்பாக மட்டக்களப்பில் உள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் புலனாய்வுத்துறையை சேர்ந்த சுரேஸ் என்பவரே தனது மகனை கைது செய்ததாக டிலக்ஸனின் தாயார் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். மகன் வீடு திரும்பாததைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைத் தான் மேற்கொண்டபோதும், அவர்கள் அதனை ஏற்கமறுத்துவிட்டதாகவும், டிலக்ஸன் விடுவிக்கப்பட்டுவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு கருணா குழுவினரால் கடத்தப்பட்ட டிலக்ஸன் பின்னர் விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(அதிர்வு)(10)



கூட்டமைப்பு எம்.பிக்களான எம்.ஏ. சுமந்திரன், எஸ்.சிறிதரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொண்டனர்.

## போலி நாணயத் தாள் வைத்திருந்த நான்கு பேர் கைது

போலி நாணயத்தாள்களையும், அவற்றை அச்சிடும் சாதனங்களையும் வைத்திருந்த நால்வர் பொத்துவில் பொலிஸார் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள், ஆயிரம் ரூபா நாணயத்தாள் போன்று வடிமைக்கப்பட்ட கடதாசி, கணினி போன்றவை இந்த முற்றுகை நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் பொத்துவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(தமிழ் மிரர்) (10)

## இலங்கைப் பணிப்பெண் டுபாயில் திடீர் மரணம்

டுபாயில் உள்ள வீடு ஒன்றில் வேலை செய்த இலங்கைப் பணிப்பெண் ஒருவர் தூக்கில் தொங்கி இறந்துள்ளார் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் திருமணமானவர்.

கணவன் இலங்கையில் உள்ளார். டுபாயில் இருக்க முடியாது, நாட்டுக்கு கூப்பிடுங்கள் என்று கணவனிடம் அடிக்கடி கேட்டு வந்து இருக்கின்றார்.

ஆயினும் வறுமை நிலை காரணமாக இவரை நாட்டுக்கு கூப்பிட கணவனால் முடியவில்லை. இந்த நிலையில் அவர் இறந்த செய்தி வெளிவந்துள்ளது. இவரின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாக அவரது கணவர் தெரிவித்துள்ளார்.

(தமிழ் ஈ.என்.என்.) (10)

இணையச் செய்திகள்

# இறுதிப் போரில் ஐ.நாவின் தவறை நிபுணர் குழு சுட்டிக்காட்டவில்லை

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பொதுமக்களை பாதுகாக்க ஐ.நா. தவறிவிட்டது என்று நிபுணர் குழு தனது அறிக்கையில் குறிப்பிடத் தவறிவிட்டது என்று ரெட்ரெஸ் என்ற மனித உரிமை அமைப்பின் செயற்பாட்டாளரும், ஆபிரிக்க கற்கைகளுக்கான கல்லூரியின் சட்டவியல் விரிவுரையாளருமான லூட்ஸ் ஒய்ட்டே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. நிபுணர்குழு வெளியிட்டுள்ள அறிக்கையானது ஒரு நாட்டை தொடர் வன்முறையில் இருந்து விடுவிப்பதற்கான சிறந்த வழிமுறையின் ஆரம்பமாகும்.

நிபுணர்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதே தற்போது ஐ.நாவிற்கு முன்னுள்ள மிகப்பெரிய சவாலாகும்.

இலங்கையில் இனப்பாகுபாடு, அடக்குமுறைகள், நீதிக்குப்புறம்பான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளமையும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையில் நீதித்துறையில் உள்ள குறைபாடுகளே பல வருடங்களாக நிகழ்ந்த வன்முறைகளுக்கு காரணமாகும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக மட்டும் அரசு போரை நடத்தியது என்பதையும் ஐ.நா அறிக்கை நிராகரித்துள்ளது. எனினும் அறிக்கையில் ஒரு விடயம் தவறவிடப்பட்டுள்ளது.

அதாவது பொதுமக்களை பாதுகாக்க ஐ.நா தவறிவிட்டது என்பதே அதுவாகும். அனைத்துலக சமூகத்தின் பங்களிப்புக்கள் தொடர்பான நிபுணர் குழுவின் ஆய்வுகளும் மிகவும் குறைவாகவே உள்ளது.

பல வருடங்களாக அனைத்துலக சமூகத்தின் பாரமுகத்தைக் கொண்ட நாடாக இலங்கையில் இடம்பெற்ற பிரச்சனைகள் இருந்துள்ளன.

இதன்காரணமாகத்தான் பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், வன்முறைகளும் அங்கு இடம்பெற்றுள்ளன. இலங்கையில் இடம்பெற்ற அடிப்படைப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஐ.நா பாதுகாப்புச் சபையோ அல்லது வேறு எந்த அமைப்புக்களோ முற்படவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா ஒரு காத்திரமான பங்கை வகிக்கும் நிலையை நிபுணர் குழுவின் அறிக்கை ஏற்படுத்தியுள்ளது.

முன்னைய தவறுகளுக்கு பரிகாரம் தேடும் சந்தர்ப்பத்தையும் அது ஐ.நாவுக்கு வழங்கியுள்ளது. வன்முறைகள் மற்றும் அது தொடர்பான விசாரணைகள் தொடர்பில் செய்லாளர் நாயகம் செயற்படமுடியாதுவிட்டால் அது ஐ.நாவின் செயற்பாடு தொடர்பில் சந்தேகத்தை தோற்றுவிக்கும்.

(தமிழ் ஈ.என்.என்.)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விடுதலை செய்த பின்னர் நாட்டில் ஜனநாயகத்தையும், மனித உரிமை ஆகியவற்றையும் பேணுவதற்குத் தயார் என்ற சமிக்ஞையை அரசு வழங்க வேண்டும். அதனை முன்னிட்டு ஐந்து துறைகளில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும், அவசரகாலச் சட்டத்தை நீக்கவேண்டும், சரத் பொன்சேகாவை விடுதலைசெய்ய வேண்டும், தமிழ் சிறைக்கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், ஊடக சுதந்திரத்தை உறுதிப் படுத்த வேண்டும். ஆகியனவே அந்த ஐந்து துறைகளுமாகும்.

அரசு பல்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்தி ஊடகங்களுக்கும் அழுத்தம் கொடுத்து வருகின்றது. இந்த ஐந்து துறைகள் தொடர்பிலும் துரிதமான நட வடிக்கையொன்றை எடுக்க அரசு தவறி னால், இலங்கையில் ஜனநாயகத்தையும், மனித உரிமையையும் நிலைநாட்ட மக்களை இணைத்துக்கொண்டு மக்கள் விடுதலை முன்னணி நடவடிக்கை எடுக் கும் என்பதைக் கூறுகின்றோம்.

சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக்கொடி வழக்கு நீடித்துக் கொண்டு செல்வதற்குக் காரணம் அவசர காலச் சட்டமேயாகும். அவசரகாலச் சட் டத்திலுள்ள நிபந்தனைகளைக் கொண்டே சரத் பொன்சேகாவின் வெள்ளைக்கொடி வழக்கு நீதிமன்றத்தில் நீண்டுகொண்டு செல்கின்றது. தமக்குத் தேவையான விதத்தில் தேர்தல்களை நடத்தவும், தமக்கு எதிரான அரசியல்வாதிகளைக் கைது செய்வதற்குமே அரசு அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றது.

கூட்டங்களின்போது சுதந்திரமான கருத்தைத் தெரிவிக்கும் உரிமையைக் கூட அவசரகாலச் சட்டம் தடுத்து நிறுத்து கின்றது. ஆகையால் எமது நாட்டில் அமைதியான, ஜனநாயக ரீதியான சூழலொன்றை ஏற்படுத்த வேண்டுமா னால் அவசரகாலச் சட்டத்தையும், பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தையும் இரத்துச் செய்ய வேண்டும்.

இந்த இரண்டு சட்டங்கள் காரண மாகக் கைதுசெய்யப்பட்ட ஏராளமான அரசியல் சிறைக்கைதிகள் உள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் பல அரசியல் கட்சிகளின் பொதுவேட் பாளராகவும் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும் போட்டியிட்ட சரத் பொன்சேகா அரசியல் பழிவாங்கலுக் காகக் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஜனநாய கத்தையும் மனித உரிமையையும் பாது காக்கும் விடயத்தில் சரத் பொன்சேகாவை உடனடியாக விடுதலை செய்ய வேண் டும். - என்றார்அநுரகுமார.

## வெசாக் காலத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆகிய பிரதேசங்களிலேயே இந்தக் கைது கள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது ஒரு லட்சம் ரூபா பெறு மதியான மதுபானம் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது. குறித்த தேடுதல் நடவடிக்கை பொதுமக்களின் தகவல்களுக்கினங்க மதுவரித் திணைக்கள ஆணையாளர் வசந்த ஹப்புவாராய்ச்சி மற்றும் மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு விசேட மதுவரித்திணைக் கள பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.




# வறக்காப்பொல, ஆனைவிழுந்தான் விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்தனர்

வறக்காப்பொலை, மே 23

வரக்காப்பொல மற்றும் புத்தளம் - கொழும்பு வீதி ஆனைவிழுந்தான் ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்ற இரு வேறு வாகன விபத்துகளில் ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

வறக்காப்பொலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் ஒரே இடத் தில் பலியாகினர், 11 பேர் காயமடைந் தனர்.

வறக்காப்பொல அம்பேபுஸ்ஸ தேவா லய சந்தியில் நேற்று அதிகாலை 4.45 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்தது.

கொழும்பில் இருந்து வெசாக் கொண் டாட்டங்களைப் பார்வையிட்டு அலவ்வ, புத்கமுவ நோக்கிச் சென்றுகொண்டி ருந்த பொங்கோ ரக வான் எதிரே வந்த பூஸோ மிட்சுபிஸி ரக லொறியுடன் நேருக்கு நேர் மோதுண்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

உயிரிழந்த மூவருள் இருவர் பெண்கள். மற்றவர் வானின் சாரதி.

காயமடைந்தவர்களுள் ஒருவர் வறக் காப்பொல ஆதார வைத்தியசாலையி லும், 7 பேர் கேகாலை வைத்தியசாலையி லும், மற்றும் ஒருவர் கண்டி வைத்திய சாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களுள் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

புத்தளம், முந்தல் ஆனைவிழுந்தான் என்ற இடத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் பலியாகி உள்ளதுடன், மூவர் படுகாயம் அடைந்துமுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மீன் ஏற்றிக் கொண்டு வந்த குளிரூட்டப்பட்ட லொறி ஒன்றும் கன்டர் ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன.

## முல்லைத்தீவில் தமிழ் மீனவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்களான எம்.ஏ. சுமந்திரன், எஸ்.சிறி தரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் பிரச்சினை களைக் கேட்டறிந்தனர். இந்தச்சந்திப்பின் போது பல அதிர்ச்சித் தகவல்கள் வெளி வந்தன என்று எஸ்.சிறிதரன் எம்.பி.' உத யனு'க்குத் தெரிவித்தார்.

அவர் கூறியவை வருமாறு:-

கரைவலைப்பாடு மீன்பிடி பெரும் பாலும் தமிழ் மீனவர்களிடமிருந்து பறிக் கப்பட்டுள்ளது. ஆனால், பெரும்பான்மை யின மீனவர்கள் எதுவித தடையுமின்றி கரைவலைப்பாடு மீன்பிடியில் ஈடுபடு கின்றனர்.

முல்லைத்தீவில் இன்றளவில் சுமார் 10ஆயிரம் பெரும்பான்மையின மீனவர் கள் மீன்பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். கொக்கிளாய் முதல் சுண்டிக்குளம் வரை யிலான கிலாகத்தை, மாதிரிக்கிராமம், உப்புமாவெளி, தூண்டாய், அலம்பில், செம்மலை, நாயாறு, கொக்குத் தொடு வாய், கருநாட்டுக்கேணி ஆகிய பிரதேசங் களில் தமிழ் மீனவர்கள் குடியேற்றப்பட வும் இல்லை; மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவும் இல்லை.

**எங்கள் நந்திக் கடலில் சிங்களவர் மீன்பிடிப்பு**

ஆனால் இந்தப் பிரதேசங்களில் பெரும்பான்மையின சிங்கள மீனவர்கள் நேரடியாக பாதுகாப்பு அமைச்சின் அனு மதியைப் பெற்று மீன்பிடியில் ஈடுபடு கின்றனர். தமிழ் மீனவர்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள் ளனர்.

எமது நந்திக்கடலில் சிப்பாய்களும் சிங்கள மீனவர்களும் இறால் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இந்த மண்ணில் பிறந்த தமிழ் மீனவர்கள் செய்வதறியாது கைகளைப் பிசைந்துகொண்டு இருக் கின்றனர்.

முல்லைத்தீவு மக்கள் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்து தீர்க்க கூட்டமைப்பு முயற்சி மேற்கொள்ளும் அல்லது வழக்குத் தொடரும் - என்றார் சிறிதரன்.

(ஓ-சி)

## யாரை, யாரிட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிறப்பித்துள்ளார் என்ற செய்தி மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளது. இந்தச் செயல் நாட்டை சர்வதி கார ஆட்சிக்கு இட்டுச்செல்ல அரசு மேற் கொள்ளும் பெரும் சதித்திட்டத்தின் முதற்படியோ என்று எண்ணத் தோன்று கிறது.

சர்வதிகார ஆட்சியையும் ஆயுதக் குழுக்களின் கீழ் மக்கள் பட்ட கஷ்டங் களும் துன்பங்களும் சொல்லில் அடங்கா. அதுமட்டுமின்றித் தமிழ் மக்கள் பல ஆண்டுகள் அடக்கி ஆளப்பட்டமையை என்றும் மறக்கவில்லை. இராணுவத்தைத் தம் மத்தியிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டுமென விசனம் கொண்டிருந்த மக்களுக்கு அரசின் இந்தத் தீர்மானம் பேரிடியாக அமைந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்த முகாம்கள் அமைக்கப்படுகின்றன என்று கூறப்பட் டாலும், இந்தச் செயல் தமிழ் மக்களை இம்சிக்க எடுக்கப்படும் திட்டமிட்ட செயலாகவே அமையும் எனக் கருதுகின் றேன். இந்த முடிவு மக்கள் எதிர்பார்த்த மைக்கு முரணான விளைவையே தரும். வடக்கு, கிழக்கு மாகாண மக்களை துன் புறுத்துவதாகவே அமையும்.

இந்த முயற்சியை உடனடியாகக் கைவிடுமாறு அரசுக்கு ஆலோசனைவழங்கு கின்றேன். இல்லாத விடயங்களை இருப் பதாகப் பெரிதுபடுத்திக் காட்டி மக்களைப் பீதியடையச் செய்யக் கூடாது.

இந்த நாட்டில் இப்போது கிளர்ச்சி மில்லை, கிளர்ச்சிக்காரருமில்லை. கிளர்சிக்கான எந்த நடவடிக்கையுமில்லை என்பதும் கிளர்ச்சியை அடக்கும் முறை யும் இதுவாக இருக்க முடியாது - என்றுள்ளது.

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போர்க்குற்றங்கள் தொடர்பாக விசார ணைகள் மேற்கொள்ளப்படும் என்று ஐ.நா. பேச்சாளர் தெரிவித்திருப்பது பெரும் நம் பிக்கைக் கீற்றாக இருப்பதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

## மரண அறிவித்தல்

### ஆலாலசுந்தரம் தில்லைநாயகி

நெடுந்தீவு மேற்கு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற ஆலாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவி தில்லைநாயகி நேற்று (22.05.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2011) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் நெடுந்தீவு மேற்கு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம், கந்தசுவாமி கோயிலடி,
நெடுந்தீவு மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் காணிக்கை



கொக்குவில் மத்திய சனசமூக நிலைய ஆலோசகரும், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபருமான அருணாசலம் அகிலதாஸ் அவர்களின் அன்புத் தந்தையார்

### கனகசபை அருணாசலம்

மரணமடைந்த செய்தியால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னார் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும்.**

## துயர் பகிர்கின்றோம்



கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாண வர் சங்க உபதலைவருமான அருணாசலம் அகிலதாஸ் அவர்களின் அன்புத் தந்தை

### கனகசபை அருணாசலம்

சிவபதமடைந்த செய்தியால் துயருற்றிருக் கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி விப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில். (4444)

பழைய
மாணவர் சங்கம்,

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அதிபர் அ. அகிலதாஸ் அவர்களின் தந்தை

### கனகசபை அருணாசலம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைந்துள்ளோம்.

அனனாரது குடும்பத்துக்கு எமது அனுதாபத்தைத் தெரி விப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்.
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில். (4446)

### விவசாய உதவியாளர் தெரிவுத் தேர்வுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

இடம்:- விக்னா கல்வி நிறுவனம். 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
காலம்:- 25-05-2011 காலை 8.30 (புதன்)
நேரம்:- காலை 8.30-11.30 வரை பிரதி புதன்கிழமை தோறும் கருத்தரங்கு நடைபெறும்.

**அனுமதிக் கட்டணம் 300/=**

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

வளவாளர் - தமிழ்ப் பேராசான் நா. குழந்தைவேலு. MA.Q (Cey)
\ormer Assistant Commissioner of Agrieant, Developement

## தேவை

றொசானி - காமன்ஸ்ஸுக்குத் தையல் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. தூர இருந்து வருபவர்களுக்கு இலவசமாகத் தங்குமிட வசதி செய்து தரப்படும்.

**தொடர்பு-**
றொசானி காமன்ஸ், 263/1 இராஜகாரியார் வீதி, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

**கிளை-**
சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.